# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 - 2027

**மானியக் கோரிக்கை எண். 42**


**திரு. நா. ஆனந்த்**

ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | **அறிமுகம்** | 1 |
| 2 | **தொலைநோக்குப் பார்வை** | 7 |
| 3 | **ஊராட்சி அமைப்பு – ஒரு கண்ணோட்டம்** | 25 |
| 3.1 | ஊரக மக்கள்தொகை விவரக்குறிப்பு | 29 |
| 3.2 | துறையின் நிர்வாக அமைப்பு | 31 |
| 3.3 | ஊராட்சி அமைப்புகள் | 39 |
| 3.4 | ஊராட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் | 50 |
| 3.5 | தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் | 70 |
| 3.6 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் | 75 |
| 3.7 | மத்திய நிதி ஆணைய மானியங்கள் | 81 |
| 3.8 | தேசிய ஊராட்சி விருதுகள் | 86 |
| 3.9 | தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் | 89 |
| **4** | **மாற்றத்தின் தூண்கள்** | 93 |
| 4.1 | முதல் தூண் : வறுமை ஒழிப்பு | 96 |
| 4.2 | ஊரக குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் | 109 |
| 4.3 | ஊதிய வேலைவாய்ப்பு (VB–GRAM (G)) | 112 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 5 | **இரண்டாம் தூண்: வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்** | 115 |
| 5.1 | ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கொள்கை : தமிழ்நாடு கிராம மேம்பாடு, மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (TN–VETRI) | 123 |
| 5.2 | துணை இயக்கம்: 1. குடிநீர் விநியோகம் | 135 |
| 5.3 | துணை இயக்கம் 2 . சுகாதாரம்: | 145 |
| 5.4 | துணை இயக்கம் 3. ஊரக இணைப்பு | 158 |
| 5.5 | துணை இயக்கம் 4. சமூகச் சொத்துகள் | 170 |
| 5.6 | துணை இயக்கம் 5. மலைப்பகுதிகள் | 175 |
| 5.7 | துணை இயக்கம் 6. நகர்ப்புரத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள் | 178 |
| 5.8 | வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் சொத்துகள் | 183 |
| 5.9 | தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் | 197 |
| **6** | **மூன்றாம் தூண் : நிர்வாகச் சீர்திருத்தங்கள்** | 203 |
| 6.1 | நல்லாட்சியின் முன்னெடுப்புகள் | 207 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6.2 | ஒருங்கிணைந்த குடிமக்கள் பங்கேற்புச் செயலி | 232 |
| 6.3 | செயல்திறன் மதிப்பீட்டுக் கொள்கை | 236 |
| 6.4 | இணையவழி சேவைகள் | 240 |
| 6.5 | பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | 247 |
| **7** | **TN–வெற்றி திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய மத்திய அரசுத் திட்டங்கள்** | 259 |
| 7.1 | ஜல் ஜீவன் இயக்கம் | 261 |
| 7.2 | ஜல் ஜீவன் இயக்கம் 2.0 | 264 |
| 7.3 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM –G) | 273 |
| 7.4 | பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY) | 282 |
| 7.5 | பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா – கிராமின் (PMAY–G) | 289 |
| 7.6 | பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM–JANMAN) | 292 |
| **8** | **திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27** | 297 |
| **9** | **முடிவுரை** | 301 |

# 1.அறிமுகம்

## 1. அறிமுகம்

*"ஒரு நாட்டை முன்னேற்றுவதற்கான மிகச் சிறந்ததும், மிக விரைவானதும், மிகவும் பயனுள்ளதுமான வழி அடித்தளத்திலிருந்து வளர்ச்சியை உருவாக்குவதே ஆகும். ஒவ்வொரு கிராமமும் தற்சார்பு கொண்ட ஒரு குடியரசாக மாற வேண்டும். இதற்கு துணிச்சலான முடிவுகள் தேவையில்லை. அறிவார்ந்த, துணிச்சலான கூட்டு முயற்சியுடன் கூடிய உழைப்பே தேவையாகும்."*

**–மகாத்மா காந்தி**

ஊரக வளர்ச்சிக்கும் பரவலாக்கப்பட்ட நிர்வாக முறைக்கும் தமிழ்நாடு அரசு உயரிய முன்னுரிமை அளிக்கிறது. ஏனெனில், ஊரகப்பகுதிகளின் வளர்ச்சியே மாநிலத்தின் ஒட்டுமொத்த சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமானது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. மாநிலத்தின் மக்கள்

தொகையில் பாதியளவிற்கும் மேற்பட்டவர்கள் கிராமப்புரங்களில் வாழ்ந்து வரும் நிலையில், அனைத்து கிராமங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் பொதுச் சேவைகளை மேம்படுத்தும் வகையிலான உள்ளடக்கிய வளர்ச்சி உத்தியை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இக்குறிக்கோள்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் வாயிலாகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.இக்கொள்கை விளக்கக் குறிப்பு, "வெற்றித் தமிழகம்" எனும் தொலைநோக்குப் பார்வையின் கீழ், கிராமப்புரத்திற்காக விரிவான கொள்கைக் கட்டமைப்பை முன்வைக்கிறது. அரசு ஏற்றுக்கொண்டுள்ள "வெற்றித் தமிழகம்" தொலைநோக்கு ஆவணம், திறன்மிக்க மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய

ஊராட்சிகளின் மூலம் நிர்வகிக்கப்படும் கிராமங்களை முன்மொழிகிறது; நகர்ப்புரத்திற்கு இணையான உட்கட்டமைப்பு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், இணைப்புச் சாலை வசதிகள் மற்றும் அனைவருக்கும் வீடு ஆகியவை இக்கிராமங்களுக்கு வழங்கப்படுவதோடு; அதிகாரமளிக்கப்பட்ட மகளிர், செழித்தோங்கும் ஊரகத் தொழில்கள் மற்றும் உறுதி அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலம் ஊராட்சிகள் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. 2026–27 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் திட்டங்கள் இத்தொலைநோக்குப் பார்வையை செயல்பாடுகளாக மாற்றுகின்றன.

# 2. தொலைநோக்குப் பார்வை

## 2. தொலைநோக்குப் பார்வை

**நாம் தொலை நோக்கும் தமிழக கிராமப்புரமானது, மின் ஆளுமைத்திறன் மிக்க, துடிப்பான தற்சார்புடைய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தாக்கங்களை எதிர்நோக்கி தகவமைத்துக் கொள்ளும் சமூகங்களை கொண்டிருக்கும்; அங்கு வலுவான உட்கட்டமைப்பு நீடித்த வளர்ச்சியுடன் கூடிய உயர்ந்த வாழ்க்கை தரம், வறுமையை முற்றிலும் ஒழித்து அனைவருக்கும் கண்ணியமான வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டிருக்கும்.**

இத்தொலைநோக்குப் பார்வையின் ஒவ்வொரு கூறும், கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அமைகிறது. மின் ஆளுமைத் திறன் மிக்க கிராமம் என்பது, ஒவ்வொரு குடும்பமும் வட்டார அல்லது மாவட்ட அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமின்றி, அரசின் சேவைகள், நலத்திட்டப் பயன்கள் மற்றும் தகவல்களை எளிதாகப் பெறக்கூடிய கிராமமாகும். தற்சார்புடைய கிராமம் என்பது, தனது சொந்த

வளங்களின் அடிப்படையில் வருவாய் ஈட்டி, பொது சொத்துகளை பராமரித்து, உள்ளூர் வளர்ச்சி முன்னுரிமைகளைத் தானாகவே தீர்மானிக்கும் திறன் பெற்ற கிராமமாகும். வலுவான உட்கட்டமைப்பு என்பது, அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகள், தடையற்ற குடிநீர் வழங்கல், தெருவிளக்கு வசதி மற்றும் வலுவான பொருளாதார மற்றும் சமூகச் சொத்துக்களை குறிக்கிறது. நிலையான வளர்ச்சி என்பது அடுத்த தலைமுறை சார்ந்து வாழவிருக்கும் நிலம், நீர் மற்றும் இயற்கை வளங்களை அழிக்காமல், இன்றைய வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் வளர்ச்சியாகும். மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரம் என்பது, மக்களின் அன்றாட வாழ்வில் – வாசற்படிக்கே வரும் தூய்மையான குடிநீர், பாதுகாப்பான மற்றும் போதிய வெளிச்சம் கொண்ட தெருக்கள், சுகாதாரமான கழிப்பறை

வசதி, உறுதியான நிரந்தர வீடு மற்றும் தூய்மையான, கண்ணியமான வாழ்விடச் சூழல் ஆகியவற்றை கொண்டதாகும். கண்ணியமான வாழ்வாதாரம் என்பது வெறும் வருமானத்தை வழங்கும் பணியாக இல்லாமல், பாதுகாப்பு, சமூக மரியாதை மற்றும் தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை திட்டமிட உதவும் வேலைவாய்ப்பாகும். இது ஊதிய வேலை, சுயவேலை அல்லது தொழில்முனைவு ஆகிய எந்த வடிவிலும் அமையலாம்.

இத்தொலைநோக்குப் பார்வை, இத்துறையின் அனைத்து திட்டப் பணிகளிலும் கிராமப்புர புத்தாக்கத்தினை, 'நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கல்' (LSDGs) எனும் கோட்பாட்டுடன் ஒருங்கிணைக்கிறது. வாழ்வாதாரங்கள், வீட்டுவசதி மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல் ஆகியவை மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரங்களுடன் கூடிய வறுமையற்ற

கிராமம், சமூக நீதியும் சமூகப் பாதுகாப்பும் கொண்ட கிராமம் மற்றும் மகளிர் நேய கிராமம் ஆகியவற்றை உருவாக்கி; வறுமையின்மை (SDG 1), பசியின்மை (SDG 2), பாலின சமத்துவம் (SDG 5), கண்ணியமான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி (SDG 8) மற்றும் குறைக்கப்பட்ட சமத்துவமின்மை (SDG 10) ஆகியவற்றை நோக்கி முன்னேற வழிவகை செய்கின்றன. குடிநீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவை போதுமான நீராதாரம் கொண்ட கிராமம், தூய்மையான மற்றும் பசுமையான கிராமம் மற்றும் ஆரோக்கியமான கிராமம் ஆகியவற்றை உருவாக்கி; தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம் (SDG 6) மற்றும் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (SDG 3) ஆகியவற்றை மேம்படுத்துகின்றன. அதேவேளையில், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதில் இருந்து நீர்நிலைகளைப் பாதுகாப்பதன் மூலம்

நீருக்கடியிலுள்ள உயிர்வாழ்வனவற்றைப் (SDG 14) பாதுகாக்கிறது. சாலைகள், சமுதாயச் சொத்துக்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்னணு இணைப்பு ஆகியவை சுயசார்பு உட்கட்டமைப்பு கொண்ட கிராமத்தை உருவாக்கி, மலிவான மற்றும் தூய்மையான ஆற்றல் (SDG 7), தொழில் துறை, புதுமை படைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு (SDG 9), நிலையான நகரங்கள் மற்றும் சமுதாயங்கள் (SDG 11), பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (SDG 12) மற்றும் பருவநிலை செயல்பாடு (SDG 13) ஆகியவற்றை ஊக்குவிக்கின்றன. வெளிப்படையான, மக்களின் பங்களிப்புடன் கூடிய மற்றும் பொறுப்புடைமை கொண்ட ஊராட்சிகள் நல்லாட்சி கொண்ட கிராமத்தை உருவாக்கி அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் (SDG 16) மற்றும்

இலக்குகளுக்கான கூட்டாண்மை (SDG 17) ஆகியவற்றைக் கொண்டதாகும்.

இக்கொள்கைக் கட்டமைப்பு – **வறுமை ஒழிப்பு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆட்சிமுறையை வலுப்படுத்துதல்** ஆகிய மூன்று முக்கியமான தூண்களை அடிப்படையாகக் கொண்டது. இத்தூண்களின் கீழ் 2026–27 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் முழுமையான திட்டப் பணிகளும் வடிவமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

முதல் தூண் – **வறுமை ஒழிப்பு**– முதல் தூணான வறுமை ஒழிப்பு, அனைத்து ஊரகக் குடும்பங்களுக்கும் கண்ணியமான வாழ்வாதாரத்தை உறுதி செய்தல், குறைந்த செலவில் வீடு கட்டுதல் மற்றும் சுய உதவிக்குழுக்கள், தொழில்முனைவோர் மேம்பாடு, நிதி உள்ளாக்கம் ஆகியவற்றின் மூலம் பெண்களின் பொருளாதார மற்றும் சமூக

அதிகாரமளிப்பை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக, வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் VB–G RAM(G) திட்டத்தின் கீழ் உறுதிசெய்யப்பட்ட ஊதிய வேலைவாய்ப்பு, "வெற்றி வீடு திட்டம்" (Vetri Veedu Thittam) மூலம் நவீன கட்டுமான தொழில்நுட்பங்களுடனும், போதிய கட்டிடப் பரப்பளவுடனும் (Plinth Area) ஒவ்வொரு தகுதியுடைய குடும்பத்திற்கும் தரமான வீடுகள் வழங்குதல், சுய உதவிக்குழு இயக்கத்தின் மூலம் ஊரகப் பெண்கள் கடன் வசதிகளைப் பெறுதல், வருமானம் ஈட்டும் தொழில்களில் ஈடுபடுதல், தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்கேற்பதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு – சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம் (Singappenngal Valimaippaduthum Thittam) போன்ற முன்னெடுப்புகள்

மூலம் சுய உதவிக்குழு இயக்கத்தை வலுப்படுத்துதல் – ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையை அரசு பின்பற்றுகிறது, பெண்கள், பட்டியலின வகுப்பினர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற நலிவுற்ற பிரிவினருக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து பாதுகாப்பான குடிநீர் மற்றும் ஒவ்வொரு இல்லத்திற்கும் கழிப்பறை வசதிகளை உறுதி செய்வதன் மூலம் கண்ணியமான வாழ்க்கைக்கான அடித்தளம் முழுமை பெறுகிறது.

இரண்டாம் தூண் – **வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்** – இரண்டாம் தூணான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த பொது உட்கட்டமைப்புகளை உருவாக்கி, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை

நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் முதன்மையான திட்டமாக வெற்றித் தமிழ்நாடு (TN–VETRI) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராம ஊராட்சியின் குடிநீர் வழங்கல், சுகாதாரம், ஊரகச் சாலை இணைப்பு, சமூகச் சொத்துக்கள், மலைப்பகுதி மற்றும் நகர்ப்புரத்தை ஒட்டிய (Peri–Urban) ஊராட்சிகளின் தனிப்பட்ட தேவைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்புகளும் ஒருங்கிணைந்த முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையிலும், இடைவெளியின் (Gap) அடிப்படையிலும், புவியியல் தன்மை அடிப்படையிலும் திட்டமிடப்பட்டு, மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசுத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து மேம்படுத்தப்படுகின்றன. மேலும், சாலைகள், கல்வி நிறுவனங்கள், அங்கன்வாடி மையங்கள், சமுதாய கூடங்கள் மற்றும் பிற பொது

உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுவதுடன், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, சுகாதார வசதிகள் ஆகியவை மேம்படுத்தப்பட்டு, பொதுச் சுகாதாரம், கண்ணியம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகின்றன.

மூன்றாம் தூண் – **உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துதல்** – மூன்றாம் தூணான உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணு மாற்றம் (Digital Transformation), நிறுவனத் திறன் மேம்பாடு, சீரிய நிதி மேலாண்மை மற்றும் குடிமக்கள் பங்கேற்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இதன் மூலம் கிராம ஊராட்சிகள் தற்சார்பு பெற்ற, வளர்ச்சி பெறும் திறன் கொண்ட மற்றும் எதிர்கால வளர்ச்சி சவால்களை திறம்பட எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த உள்ளாட்சி அமைப்புகளாக உருவாக்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும்

அலுவலர்களுக்கான திறன் மேம்பாடு, பங்கேற்பு அடிப்படையிலான கிராம வளர்ச்சித் திட்டமிடல், சொந்த வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்துதல், மின்னணு சேவை வழங்கல், காலவரையறைக்குள் குறைகளுக்கு தீர்வு காணுதல் மற்றும் சமூகத் தணிக்கை ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து வெளிப்படையான மற்றும் பொறுப்புடைமை கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு வலுவான அடித்தளமாக அமையும்.

இம்மூன்று முக்கியத் தூண்களின் வாயிலாக, நிதி வலிமை பெற்ற, மீண்டெழும் திறன் கொண்ட, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்யும் மற்றும் பொது மக்களை மையமாகக் கொண்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்கும் நோக்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நடுத்தர மற்றும் நீண்டகால வளர்ச்சி உத்திகளை

செயல்படுத்தி வருகிறது. மின்னணு–ஆளுமை (Digital Governance) முன்னெடுப்புகள் மூலம் நிர்வாகத் திறன், வெளிப்படைத்தன்மை, கண்காணிப்பு மற்றும் பொதுமக்களுக்கு சேவை வழங்கல் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதேவேளையில், நீர்வளப் பாதுகாப்பு, மரபு சாரா எரிசக்திப் பயன்பாடு, இயற்கை வள மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் மூலம், ஊரக வளர்ச்சியில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தற்சார்பு மிக்க, மீண்டெழும் திறன் கொண்ட மற்றும் செழிப்பான ஊரக சமூகங்களை உருவாக்கி, அனைத்து மக்களுக்கும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் நிலையான வளர்ச்சியையும் உறுதி செய்வதில் இத்துறை உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நோக்கத்தின் முன்னேற்றம் திட்டமிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்திய அரசின் ஊராட்சிகள் அமைச்சகம் (Ministry of Panchayati Raj) உருவாக்கியுள்ள தேசிய அளவிலான ஊராட்சி முன்னேற்றக் குறியீடு (Panchayat Advancement Index – PAI), நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் (Localization of Sustainable Development Goals – LSDGs) அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியின் வளர்ச்சி நிலை மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்கிறது. இதனுடன், தமிழ்நாட்டின் கிராமங்களின் தனித்துவமான வளர்ச்சி முன்னுரிமைகளை முழுமையாகப் பிரதிபலிக்கும் வகையில், மாநில அரசு தனது சொந்த **விரிவுபடுத்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சிக் குறியீட்டை (Panchayat Development Index – PDI)** உருவாக்கி வருகிறது. கீழே வழங்கப்பட்டுள்ள

மாற்றத்திற்கான செயல் திட்டம் (Change Strategy) (விளக்கப்படம்), "வெற்றித் தமிழகம்" என்ற தொலைநோக்குப் பார்வை, மாற்றத்தின் மூன்று முக்கியத் தூண்கள், அவற்றின் அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் (LSDGs) மூலம் அடையப்பட வேண்டிய கிராம அளவிலான வளர்ச்சி விளைவுகள் ஆகியவற்றுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது. இக்கொள்கை விளக்க குறிப்பு முழுவதும் இவ்வமைப்பை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இதன் அடிப்படையிலேயே முன்னேற்றமும் அளவிடப்படும்.




அதனடிப்படையில், இக்கொள்கை விளக்கக் குறிப்பு, மாநிலத்தின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக மற்றும் நிறுவன கட்டமைப்புகள், அவற்றின் நிதிக் கட்டமைப்பு, வளர்ச்சிசார் சாதனைகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் ஆகியவற்றின் விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது. மேலும், வறுமை ஒழிப்பு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் ஆகிய ஒவ்வொரு கொள்கைத்

தூணின் அடிப்படையிலும், 2026−2027 ஆம் ஆண்டிற்காக முன்மொழியப்பட்டுள்ள கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவை நிர்வாகத் திறனை மேம்படுத்துதல், பொதுச் சேவை வழங்கலை உறுதிசெய்தல், ஊரகச் சொத்துகளை நிலையான முறையில் பராமரித்தல், உள்ளாட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்துதல், மின்னணு ஆளுமை மாற்றத்தை விரைவுபடுத்துதல் மற்றும் விரைவான, உள்ளடக்கிய (Inclusive) ஊரக வளர்ச்சியை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளன.

# 3. ஊராட்சி அமைப்பு –

# ஒரு கண்ணோட்டம்

## 3. ஊராட்சி அமைப்பு – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகள் (Panchayati Raj Institutions – PRIs), இந்திய அரசியலமைப்பின் பகுதி IX (அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 243 முதல் 243–O வரை)–இன் கீழ், 1992–ஆம் ஆண்டின் 73–ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட அதிகாரத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. இத்திருத்தம் 24 ஏப்ரல் 1993 அன்று நடைமுறைக்கு வந்தது. இவ்வரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளை இவ்வரசு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மூலம் செயல்படுத்தியுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துதல், நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல்

மற்றும் ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்நோக்கத்தை முன்னெடுத்து செல்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்பு, ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குவதோடு, கிராம சபைகள் மற்றும் பிற சமூக அடிப்படையிலான அமைப்புகளின் வாயிலாக மக்கள் பங்கேற்புடனான திட்டமிடலையும், திறன்மிக்க உள்ளாட்சி நிர்வாகத்தையும் உறுதி செய்கிறது.

73–ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் நோக்கத்திற்கு இணங்க, பணிகள் (Functions), நிதி (Funds) மற்றும் பணியாளர்கள் (Functionaries) ஆகியவற்றின் அதிகாரப் பரவலை (Devolution) உறுதி செய்வதன் மூலம் ஊராட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்த அரசு

நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனுடன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வலுவான நிதி மேலாண்மை ஆகியவற்றிற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மேலும், சமூகப் பங்கேற்பு, குடியிருப்பு (Habitation Level) அளவிலான திட்டமிடல் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வலியுறுத்துவதன் மூலம் சமமான, தேவையின் அடிப்படையிலான வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது.

### 3.1. ஊரக மக்கள்தொகை விவரக்குறிப்பு


**அட்டவணை எண் 1 : மக்கள்தொகை விவரங்கள் (2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு)**

| குறியீடு | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| மொத்த மக்கள்தொகை (2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு) | 7,21,38,958 | 3,61,58,871 | 3,59,80,087 |

| குறியீடு | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| ஊரக மக்கள் தொகை | 4,02,65,526 | 2,02,02,709 | 2,00,62,817 |

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் **55.82 சதவீதத்திற்கும்** அதிகமானோர் ஊரகப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இதன் காரணமாக, பொதுச் சேவைகள் வழங்குதல், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துதல், பொது உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்தல் ஆகியவற்றில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஊரக மக்கள் தொகையின் பரவலான அளவும், புவியியல் மற்றும் சமூகப் பன்முகத் தன்மையும் கருத்தில் கொள்ளப்படும்போது, கடலோரப் பகுதிகள், மலைப்பகுதிகள், சுற்றுலாத் தலங்கள் வறட்சி பாதிப்பு பகுதிகள் மற்றும் வேளாண்மை


சார்ந்த பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு நிலவியல் அமைப்புகளின் வளர்ச்சித் தேவைகளை திறம்பட நிறைவேற்றக்கூடிய வலுவான உள்ளாட்சி நிர்வாகக் கட்டமைப்பு அவசியமாகிறது.




## 3.2. துறையின் நிர்வாக அமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மாநிலத் தலைமைச் செயலகம் முதல் கிராம ஊராட்சி நிலை வரை விரிவடைந்துள்ள, நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் அதிகாரப் பரவலாக்கப்பட்ட (Decentralised) நிர்வாக அமைப்பின் மூலம் செயல்பட்டு வருகிறது. இந்நிர்வாக அமைப்பு, திறன்மிக்க நிர்வாகம்,

வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துதல் மற்றும் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகள் முழுவதிலும் பொதுச் சேவைகளை திறம்பட வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.




இத்துறையின் தலைவராக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இருந்து, துறைக்கான ஒட்டுமொத்த கொள்கை வழிகாட்டுதலை வழங்குகிறார். அரசுச் செயலாளர், கொள்கை உருவாக்கம், சட்டமியற்றல் தொடர்பான நடவடிக்கைகள், நிர்வாக

மேற்பார்வை, நிதித் திட்டமிடல் மற்றும் பல்வேறு அரசு துறைகளுடனான ஒருங்கிணைப்பு ஆகிய பொறுப்புகளை வகிக்கிறார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர், துறையின் தலைவராக (Head of the Department) செயல்பட்டு, அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், ஊரக வளர்ச்சித் திட்டங்களை நிர்வகித்தல், ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மாநிலம் முழுவதும் துறையின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல் ஆகிய பொறுப்புகளை மேற்கொள்கிறார்.

அரசு அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் திறன் மேம்பாடு மற்றும் பணிகள் நிபுணத்துவம் பெறுவதற்கான திட்டமிட்ட பயிற்சிகள் வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி ஆணையர் (பயிற்சி) பொறுப்பாவார். தமிழ்நாடு

மாநிலத் தேர்தல் ஆணையம், அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்தும் பொறுப்பை வகிக்கிறது. தமிழ்நாடு மறு வரையறை ஆணையம் (Delimitation Commission), சட்டப்பூர்வ விதிகளின்படி சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில், உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் தொகுதிகளை வரையறுத்தல் மற்றும் வார்டு எல்லைகளை நிர்ணயித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் நிலைகளில் அரசிதழ் பதிவு பெற்ற பல்வேறு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இப்பணியிடங்கள் தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சிப் பணிவிதிகள் (Tamil Nadu

Panchayat Development Service Rules) மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துணைப் பணிவிதிகளின் கீழ் (Tamil Nadu Panchayat Development Subordinate Service Rules) நிர்வகிக்கப்படுகின்றனர்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளராக (Inspector of Panchayats) செயல்பட்டு, மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மீது ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை மேற்கொள்கிறார். மேலும், ஊரக வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் முதன்மை நிர்வாக அமைப்பாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படுகிறார். இப்பணிகளில், திட்ட இயக்குநர், செயற்பொறியாளர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் அவருக்கு துணைபுரிகின்றனர். மாவட்ட ஊரக வளர்ச்சி

முகமை (DRDA) திட்ட இயக்குநர், முக்கிய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் முன்னுரிமைத் திட்டங்களின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு, செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பொறுப்புகளை வகிக்கிறார். உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள் (ம) தணிக்கை), ஊராட்சி நிர்வாகம், சட்டப்பூர்வ விதிமுறைகளைப் பின்பற்றுதல், நிறுவன ஆளுமை, நிதி ஒழுங்கு, தணிக்கை மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புணர்வை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். உதவி செயற்பொறியாளர்கள், வட்டாரங்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப உட்கோட்டங்களில் (Technical Sub–Divisions) தொழில்நுட்ப மேற்பார்வை மற்றும் பொறியியல் பணிகளை மேற்கொள்கின்றனர்.

வட்டார அளவில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதை மேற்பார்வையிடுதல், கிராம ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குதல், வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டங்களின் செயல்திறனை கண்காணித்தல் ஆகிய பொறுப்புகளை வகிக்கின்றனர். இவர்களுக்கு உதவி பொறியாளர்கள் / வட்டாரப் பொறியாளர்கள், பணிமேற்பார்வையாளர்கள் (Overseers) மற்றும் சாலை ஆய்வாளர்கள் (Road Inspectors) தொழில்நுட்ப உதவியளிக்கின்றனர்.

கிராம ஊராட்சி அளவில், ஊராட்சி செயலர்கள், கிராம அளவிலான பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் பிற களப் பணியாளர்கள், கிராம ஊராட்சிகளின் சட்டப்பூர்வ பதிவேடுகளைப் பராமரித்தல், வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துதல், ஊராட்சி நிதி மேலாண்மை,

அடிப்படை பொதுச் சேவைகள் வழங்குதல் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் செயல்பாட்டை உறுதி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு உதவுகின்றனர். மேலும், அரசு மற்றும் ஊரக மக்களுக்கிடையிலான முதன்மை இணைப்புப் பாலமாக செயல்பட்டு, குடிமக்கள் பங்கேற்பையும் அடித்தள ஜனநாயக ஆளுமையையும் வலுப்படுத்துகின்றனர்.

உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக, மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் (State Institute of Rural Development – SIRD) மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் (Regional Institutes of Rural Development – RIRDs) அமைக்கப்பட்டு. இந்நிறுவனங்கள் அரசு அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்காக ஆரம்பப் பயிற்சிகள்

(Induction Training), புத்தாக்கப் பயிற்சிகள் (Refresher Courses), கருப்பொருள் சார்ந்த பயிற்சி (Thematic Workshops), ஆய்வுப் பணிகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை முறையாக நடத்தி வருகின்றன.

### 3.3.ஊராட்சி அமைப்புகள்

### 3.3.1 தமிழ்நாட்டில் ஊராட்சி அமைப்புகளின் பரிணாம வளர்ச்சி

கிராம சுயாட்சிக் கொள்கையினை மகாத்மா காந்தி மிகவும் வலியுறுத்தினார். அவரது இந்த இலட்சியமே இந்திய அரசியலமைப்பின் 40-ஆம் பிரிவில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவு, மாநிலங்கள் கிராம ஊராட்சிகளை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வழிகாட்டுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே, வைஸ்ராய்கள் மாயோ பிரபு மற்றும் ரிப்பன் பிரபு ஆகியோர் உள்ளாட்சிகளின் சுயாட்சியை

ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். பின்னர், 1957–ஆம் ஆண்டு பல்வந்த்ராய் மேத்தா குழு, மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்பை பரிந்துரைத்தது. அதனைத் தொடர்ந்து 1960–ஆம் ஆண்டு முதல் இம்முறை நடைமுறைக்கு வந்தது. எனினும், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லாததும், அதிகாரங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் குறைவாக இருந்ததன் காரணமாக, ஊராட்சி அமைப்புகள் முழுமையான வலிமையைப் பெறவில்லை.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் வரலாறு தொன்மையானது. கி.பி. 920–ஆம் ஆண்டைச் சேர்ந்த, பராந்தக சோழன் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட உத்திரமேரூர் ஸ்ரீ வைகுண்டவாசப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள், ஊராட்சி அமைப்புகளுக்கான எழுத்துப்பூர்வமான அரசியல் அமைப்பையும்,

தேர்தல் நடைமுறைகளையும், வேட்பாளர் தகுதிகளையும் பதிவு செய்துள்ளன. **"குடவோலை முறை"** எனப்படும் தேர்தல் முறையில், வாக்காளர்கள் தங்களது விருப்ப வேட்பாளர்களின் பெயர்களை ஓலைச்சுவடிகளில் எழுதி, அவற்றை வாக்குப் பெட்டியாகப் பயன்படுத்தப்பட்ட மண்குடத்தில் இட்டு, உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்பட்டனர். முடியாட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த இம்முறை, உலகின் தொன்மையான ஜனநாயக மரபுகளில் ஒன்றாகவும், நவீன தேர்தல் முறைக்கு முன்னோடியாகவும் கருதப்படுகிறது. பின்னர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இம்முறை படிப்படியாகச் செயலிழந்தது.

அதன்பின்னர், உள்ளாட்சி நிர்வாகம் 1854, 1871 மற்றும் 1884–ஆம் ஆண்டுச் சட்டங்கள் மூலம் மேலும் வளர்ச்சியடைந்தது. இச்சட்டங்களின் மூலம் மாவட்ட வாரியங்கள்

(District Boards), வட்ட வாரியங்கள் (Taluk Boards) மற்றும் கிராம ஊராட்சிகள் (Village Panchayats) உருவாக்கப்பட்டன. இதனை தொடர்ந்து 1920–ஆம் ஆண்டுச் சட்டங்கள் மற்றும் சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம், 1950 ஆகியவற்றின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. பின்னர், சென்னை ஊராட்சிகள் சட்டம், 1958–ன் மூலம் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட இரண்டு அடுக்கு ஊராட்சி அமைப்பு நிறுவப்பட்டது.

1993–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த 73–ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், ஊராட்சிகளுக்கு அரசியலமைப்புச் சட்ட அந்தஸ்தை வழங்கியது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 இயற்றப்பட்டு, கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றை

உள்ளடக்கிய மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம், உறுப்பினர்களின் நேரடித் தேர்தல், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு (50 சதவீதம் 2016 முதல்), தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், மாநில நிதி ஆணையங்கள் மற்றும் மாவட்டத் திட்டக் குழுக்கள் ஆகியவை உருவாக்கப்பட்டன. மேலும், இந்திய அரசியலமைப்பின் பதினொன்றாம் அட்டவணையில் (Eleventh Schedule) குறிப்பிடப்பட்டுள்ள 29 துறை சார்ந்த பணிகளும் ஊராட்சிகளுக்கு படிப்படியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால், ஊராட்சி அமைப்புகள் இன்று ஜனநாயகத்தின், அடித்தளத்தினை வலுப்படுத்தும் முக்கிய நிறுவனங்களாகவும், ஊரக வளர்ச்சியை

முன்னெடுக்கும் செயற்பாட்டு அமைப்புகளாகவும் திகழ்கின்றன.

### 3.3.2.ஊராட்சி அமைப்புகள்

தமிழ்நாட்டில் ஊராட்சி அமைப்பு, அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று அடுக்கு நிர்வாகக் கட்டமைப்பின் மூலம் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் ஒவ்வொரு நிலையும் ஊரக உள்ளாட்சி நிர்வாகத்தின் பரந்த கட்டமைப்பிற்குள் தனித்துவமான, அதேவேளையில் ஒன்றுக்கொன்று துணைபுரியும் பொறுப்புகளை வகிக்கின்றன. நிதி வளங்களின் பகிர்மானம் "துணைநிலைக் கோட்பாடு " (Principle of Subsidiarity) அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, பொதுமக்களுக்கு அத்தியாவசிய அடிப்படைச்

சேவைகள் நேரடியாக வழங்கப்படும் கிராம ஊராட்சி நிலையிலேயே அதிகபட்ச நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை அரசு உறுதி செய்து வருகிறது. இதன் மூலம், மக்களின் தேவைகளுக்கு விரைவாகவும் திறம்படவும் பதிலளிக்கும் வலுவான உள்ளாட்சி நிர்வாகம் உருவாக்கப்படுகிறது.

**அட்டவணை – 2**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் வகைப்பாடு**

| நிர்வாக அலகு | எண்ணிக்கை | தேர்தெடுக்கப்பட்ட தலைமை | செயல் தலைமை |
|---|---|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 37 | மாவட்ட ஊராட்சி தலைவர் | மாவட்ட ஊராட்சி செயலர் |
| வட்டார ஊராட்சி | 397 | ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் | வட்டார வளர்ச்சி அலுவலர் |

| நிர்வாக அலகு | எண்ணிக்கை | தேர்தெடுக்கப்பட்ட தலைமை | செயல் தலைமை |
|---|---|---|---|
| கிராம ஊராட்சிகள் | 12571 | ஊராட்சி மன்றத் தலைவர் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) / ஊராட்சி மன்றத் தலைவர் |

கிராம ஊராட்சிகள், உள்ளூர் திட்டமிடல், குடிநீர் வழங்கல், சுகாதாரம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சமூகச் சொத்துகள் பராமரிப்பு, ஊரகச் சாலைகள், சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் முதன்மை உள்ளாட்சி அமைப்புகளாக செயல்படுகின்றன. வட்டார ஊராட்சிகள், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, திட்ட செயல்பாட்டிற்கான ஆதரவு மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளை இணைக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்கின்றன. மாவட்ட ஊராட்சிகள், மாவட்ட அளவிலான

திட்டமிடல், ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் கொள்கை செயல்பாடுகளின் மேற்பார்வை ஆகிய பொறுப்புகளை வகிக்கின்றன.

### 3.3.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு

தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகக் கட்டமைப்பு, மக்கள்தொகை வளர்ச்சி, நிர்வாகத் தேவைகள் மற்றும் பொதுச் சேவை வழங்கலை மேலும் மேம்படுத்த வேண்டிய அவசியம் ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, புதிய மாவட்ட ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளை உருவாக்குதல், கிராம ஊராட்சிகளை இணைத்தல் மற்றும் தகுதியுடைய கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாக தரம் உயர்த்துதல் போன்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அரசால் அவ்வப்போது

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகள், உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துவதோடு, நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

அண்மைக் கால மறுசீரமைப்பு நடவடிக்கைகளில், மயிலாடுதுறை மாவட்ட ஊராட்சி உருவாக்கம், 9 புதிய வட்டார ஊராட்சிகளை உருவாக்குதல், 93 புதிய கிராம ஊராட்சிகளை உருவாக்குதல், கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு கிராம ஊராட்சிகளை இணைத்தல் மற்றும் கந்தர்வகோட்டை கிராம ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மாநிலம் முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் முறையே, மக்கள்தொகை, புவியியல் அமைப்பு, குடியிருப்பு அமைப்பு மற்றும் வளர்ச்சித் திறன் ஆகிய அம்சங்களில் குறிப்பிடத்தக்க


வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் 1,000 முதல் 5,000 வரையிலான மக்கள் வசித்து வருகின்றனர். இருப்பினும், சில கிராம ஊராட்சிகளில் 10,000–க்கும் அதிகமான மக்கள் தொகை காணப்படுவதால், நகர்ப்புறத் தரத்திலான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. மேலும், கடலோரப் பகுதிகள், மலைப்பகுதிகள் மற்றும் சுற்றுலாத் தலங்களைக் கொண்ட கிராமங்கள் போன்ற சிறப்புத் தன்மையுடைய பகுதிகளுக்கு, அவற்றின் புவியியல் மற்றும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப தனித்துவமான திட்டமிடல், சிறப்பு உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சூழ்நிலைக்கேற்ற செயல்திட்டங்கள் அவசியமாகின்றன.

## 3.4. ஊராட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

### 3.4.1.கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில், 37 ஊரக மாவட்டங்களில் உள்ள 12,571 கிராம ஊராட்சிகள், 78,997 குக்கிராமங்கள் (Habitations) உள்ளடக்கியுள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், அதன் செயல் அலுவலராக (Executive Authority) செயல்படுகிறார். சட்டப்படி கலைக்கப்படாத வரையில், ஒவ்வொரு கிராம ஊராட்சியும் பொதுத் தேர்தலுக்குப் பின் நடைபெற்ற முதல் கூட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் பதவிக்காலம் கொண்டதாக இருக்கும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் உரிய மொத்த மக்கள்தொகை, பட்டியல் வகுப்பினர் (SC), பழங்குடியினர் (ST) மற்றும் பெண்கள் மக்கள்தொகை தொடர்பான விவரங்கள்,

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இயக்குநருடன் ஒருங்கிணைந்து 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டன. இத்தகவல்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளன.



### 3.4.2 கட்டாயப் பணிகள் (பிரிவு 110)

ஒவ்வொரு கிராம ஊராட்சியும், தனது அதிகார வரம்பிற்குள் பின்வரும் கட்டாயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்:

- தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் வட்டார ஊராட்சிச் சாலைகளைத் தவிர்த்து, கிராமச் சாலைகளை அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்; அவற்றுடன் தொடர்புடைய பாலங்கள், சிறுபாலங்கள் (Culverts) மற்றும் தரைப்பாலங்கள் (Causeways) ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
- குடியிருப்புப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்; வடிகால்களை அமைத்தல், பராமரித்தல் மற்றும் கழிவுநீரை உரிய முறையில் வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- தெருக்களை சுத்தமாகப் பராமரித்தல், திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) மூலம்

பொது சுகாதாரத்தை உறுதி செய்தல்; பொதுக் கழிப்பிடங்களை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

- இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல். பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்; கிணறுகள், குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்.
- ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சமூகச் சொத்துகளை பராமரித்து பாதுகாத்தல் மற்றும் அரசு அறிவிப்பின் மூலம் ஒப்படைக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

### 3.4.3 விருப்பப் பணிகள் (பிரிவு 111)

நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்குட்பட்டு, கிராம ஊராட்சிகள் பின்வரும் விருப்பப் பணிகளை மேற்கொள்ளலாம்:

- மரங்கள் நடுதல் மற்றும் பசுமைப் பரப்பை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல்.

- குடியிருப்புப் பகுதிகளுக்கு வெளியே உள்ள பொதுச் சாலைகள் மற்றும் பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.
- பொதுச் சந்தைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
- திருவிழாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல்.
- வண்டி நிறுத்துமிடங்கள், கால்நடை தங்குமிடங்கள், பொதுக் கால்நடை இறைச்சிக் கூடங்கள் மற்றும் நூலகங்களை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு வசதிகளை உருவாக்கி மேம்படுத்துதல்.

### 3.4.4. கிராம சபை

இந்திய அரசியலமைப்பின் சட்டப் பிரிவு 243, கிராம மட்டத்தில் மக்கள் பங்கேற்பு ஜனநாயகத்தின் அடித்தளமாக கிராம சபையை அங்கீகரிக்கிறது. ஒரு கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களும் கிராம சபையின் உறுப்பினர்களாவர். இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கிடையிலான இடைவெளி ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் பிரிவு 3–இன் படி, கிராம சபை பின்வரும் முக்கிய அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கொண்டுள்ளது:

- கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு (Village Development Plan) ஒப்புதல் வழங்குதல்.
- ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.

- முந்தைய நிதியாண்டின் தணிக்கை அறிக்கையை பரிசீலித்து ஒப்புதல் வழங்குதல்.
- கிராம ஊராட்சியால் செயல்படுத்தப்பட்ட அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
- அரசுத் திட்டங்களின் பயனாளிகளைத் தேர்வு செய்வதற்காக கூட்டப்படும் சிறப்புக் கிராம சபைக் கூட்டங்களில் பயனாளிகள் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.

ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டிலும் ஆறு கிராம சபைக் கூட்டங்கள் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும்.



இயற்கைப் பேரிடர்கள், பொது சுகாதார அவசரநிலைகள், பெருந்தொற்றுகள் அல்லது தேர்தல் காலத்தில் நடைமுறையில் இருக்கும் மாதிரி நடத்தை விதிமுறைகள் (Model Code of Conduct) போன்ற அசாதாரண சூழ்நிலைகளில், கட்டாயமாக நடத்தப்பட வேண்டிய கிராம சபைக் கூட்டங்களை நடத்த இயலாத நிலை ஏற்படலாம். அவ்வாறான சூழ்நிலைகளில், தேவைக்கேற்ப சிறப்புக் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்படலாம். ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்திலும் விவாதத்திற்கு வைக்கப்படும் பொருட்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். கூட்ட நிகழ்வுகள் நிர்ணயிக்கப்பட்ட பதிவேடுகளில் முறையாகப் பதிவு செய்யப்படுவதுடன், கூட்டம் நடைபெற்றதற்கான புகைப்படம் அல்லது காணொளிப் பதிவு கட்டாயமாகப் பராமரிக்கப்பட வேண்டும். ஒரு கிராம சபை அல்லது சிறப்புக் கிராம சபைக் கூட்டத்தை நடத்துவதற்காக,

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் அதிகபட்சமாக ரூ.5,000 வரை செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**3.4.5.கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (Village Panchayat Development Plan – VPDP)**

இந்திய அரசியலமைப்பின் சட்டப் பிரிவு 243G, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை ஊராட்சிகள் தயாரிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது. மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் பிரிவு 240, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஆண்டுதோறும் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை (Village Panchayat Development Plan – VPDP) தயாரிக்க வேண்டும் என்று வகுத்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை, மக்கள் திட்ட இயக்கம் (People's Plan Campaign)

மக்கள் பங்கேற்பு அடிப்படையிலான திட்டமிடல் செயல்முறையாக நடத்தப்படுகிறது. இந்நிகழ்வின் மூலம், இந்திய அரசியலமைப்பின் பதினொன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 துறை சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், மக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை, கிடைக்கக்கூடிய வளங்களுடன் ஒருங்கிணைத்து, பொதுவான வளர்ச்சி நோக்கு, தெளிவான இலக்குகள் மற்றும் செயல்திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது. கருப்பொருள் அடிப்படையிலான (Thematic) கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் VPDP, கிராம ஊராட்சி திட்டமிடல் எளிதாக்கும் குழு (Village Panchayat Planning Facilitation Team – VPPFT) அமைத்தல், சமூக ஒருங்கிணைப்பு, சிறப்புக் கிராம சபைக் கூட்டங்கள் நடத்துதல், தேவைகளை கண்டறிந்து

முன்னுரிமை நிர்ணயித்தல், வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்தல் மற்றும் இ–கிராம் ஸ்வராஜ் இணையதளத்தில் பதிவேற்றுதல் உள்ளிட்ட 13 முக்கிய கட்டங்களை உள்ளடக்கியதாகும். இதன் மூலம் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் சமூக உரிமையுணர்வு உறுதி செய்யப்படுகின்றன.

### 3.4.6. வட்டார ஊராட்சிகள்

இடைநிலை உள்ளாட்சி அமைப்பாக, தமிழ்நாட்டில் 397 வட்டார ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார ஊராட்சியும், பொதுவாக 5,000 மக்கள் தொகைக்கு ஒரு வார்டு என்ற அடிப்படையில் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வார்டு உறுப்பினர்கள், நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களால் அவர்களுக்குள் இருந்து

மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார ஊராட்சியின் செயல் அலுவலராக (Executive Authority) செயல்படுகிறார். அவருக்கு தேவையான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நிர்வாக உதவியளிக்கின்றனர்.

**3.4.7.பணிகள் (பிரிவுகள் 112 மற்றும் 114)**

வட்டார ஊராட்சிக்கு பின்வரும் முக்கியப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- வகைப்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பாலங்கள், சிறுபாலங்கள் (Culverts) மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்.
- ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

- அதன் கட்டுப்பாட்டிலுள்ள சிறுபாசன ஏரிகள், குளங்கள், ஊருணிகள் மற்றும் பிற நீர்நிலைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.
- தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வகைப்படுத்தப்பட்ட சந்தைகள், திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை நடத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- ஊராட்சி ஒன்றியச் சந்தைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் பிரிவு 114–இன் கீழ், பொருளாதார வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் சார்ந்த திட்டங்கள் மற்றும் பணிகளை அரசால் வட்டார ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கலாம்.

### 3.4.8. நிதி ஆதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு

வட்டார ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. இருப்பினும், வரி அல்லாத வருவாய்கள், பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வருவாய்கள் (Pooled Assigned Revenue–இல் பங்கு), கட்டணங்கள், பயனாளர் கட்டணங்கள், வாடகை வருவாய், அபராதங்கள் மற்றும் பிற வருவாய் ஆதாரங்கள் மூலம் வருவாய் ஈட்டுகின்றன. மேலும், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், மக்கள்தொகை மானியம் (Population Grant) மற்றும் குறைந்தபட்ச தொகுப்பு மானியம் (Minimum Lump Sum Grant) உள்ளிட்ட மானியங்கள் வழங்கப்படுகின்றன. ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஒவ்வொரு வட்டார ஊராட்சிக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் குறைந்தபட்ச தொகுப்பு மானியம் ரூ.40 இலட்சமாக

உயர்த்தப்பட்டுள்ளது. பதினைந்தாவது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மொத்த நிதி மானியத்தில் 15 சதவீதம் வட்டார ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 388 வட்டார ஊராட்சிகளுக்கும் நிரந்தர அலுவலகக் கட்டிடங்கள் உள்ளன. மேலும், ஒப்படைக்கப்பட்ட வருவாய் – திட்டக் கூறு (Scheme Component of Pooled Assigned Revenue – SCPAR) மூலம் பழுதடைந்த மற்றும் பழமையான 224 வட்டார ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதிதாக தொடங்கப்பட்ட 9 வட்டார ஊராட்சிகளுக்கும் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**3.4.9.மாவட்ட ஊராட்சிகள்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994– பிரிவு 24–இன் கீழ், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் 37 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாவட்ட ஊராட்சித் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களிடமிருந்து மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, அடுத்த உள்ளாட்சி அமைப்புகளின் பொதுத் தேர்தலின் போது தனி மாவட்ட ஊராட்சி அமைக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உதவி இயக்குநர், மாவட்ட ஊராட்சியின் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

அவருக்கு தேவையான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நிர்வாக உதவியளிக்கின்றனர்.

பல்வேறு துறை அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக, ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியிலும் பின்வரும் நிலைக்குழுக்கள் (Standing Committees) அமைக்கப்படுகின்றன:

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலம்
3. பொதுப்பணிகள்
4. கல்வி
5. சுகாதாரம் மற்றும் நலன் (மது விலக்கு உட்பட)

தேவைக்கேற்ப கூடுதல் நிலைக்குழுக்களையும் அமைக்கும் அதிகாரம் மாவட்ட ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலைக்குழுவும் அதன் தலைவரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கிறது. மாவட்ட ஊராட்சித் தலைவர், அனைத்து

நிலைக்குழுக்களிலும் பதவிவழி (Ex–officio) உறுப்பினராக இருப்பார்.

### 3.4.10. பணிகள்

மாவட்ட ஊராட்சிகளின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

- மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை (District Development Plans) தயாரித்தல்.
- கிராம ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சியிடமிருந்து பெறப்படும் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்து மாவட்ட ஆண்டு அறிக்கையை தயாரித்தல்.
- வேளாண்மை, நில மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, பால்வளம், கோழி வளர்ப்பு, மீன்வளம், ஊரகத் தொழில்கள் மற்றும் தொடர்புடைய துறைகளுக்கான திட்டங்களை திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
- குறிப்பாக பட்டியல் வகுப்பினர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) நலனை முன்னிறுத்தும்

ஊரக வீட்டு வசதித் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல்.

- குடிநீர் வழங்கல் திட்டங்களை அடையாளம் கண்டு, அவற்றிற்கு முன்னுரிமை வழங்குதல்.

**3.4.11. நிதி**

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் இல்லை. அவற்றின் முக்கிய வருவாய் ஆதாரமாக மாநில நிதி ஆணைய (State Finance Commission – SFC) மானியம் விளங்குகிறது. சில மாவட்டங்களில், நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் பிற சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருவாயும் கூடுதல் ஆதாரமாக உள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்காக ஒதுக்கப்படும் மாநில நிதி ஆணையப் பகிர்மான நிதியில் (SFC Devolution Grant) 6 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படுகிறது. மேலும், பதினைந்தாவது மத்திய நிதி ஆணையத்தின் (Fifteenth Union Finance Commission)

பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியத்தில் 5 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

### 3.4.12. மாவட்டத் திட்டக் குழு

1992–ஆம் ஆண்டின் 74–ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில், மாநிலத்தின் 37 மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டக் குழுக்கள் (District Planning Committees) அமைக்கப்பட வேண்டும். இக்குழுவிற்கு மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் துணைத் தலைவராகவும் செயல்படுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்ப்புர, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விதிமுறைகளின்படி உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த மாவட்ட வளர்ச்சித் திட்டத்தை தயாரிப்பது இக்குழுவின் முக்கியப் பொறுப்பாகும். ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நிறைவடைந்த பின்னர், அனைத்து மாவட்டங்களிலும் இக்குழுக்கள் அமைக்கப்படும்.

### 3.5.தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

தமிழ்நாட்டிலுள்ள மூன்று அடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே வரிகளை விதித்து வசூலிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளின் வருவாய் மூன்று முக்கிய ஆதாரங்களிலிருந்து பெறப்படுகிறது:

1. **வரி வருவாய் (Tax Revenue)**

2. **வரி அல்லாத வருவாய் (Non–Tax Revenue)**

3. **மானியங்கள் (Grants)**

**3.5.1.வரி வருவாய்**

- **சொத்து வரி (Property Tax) :** தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 172–இன் படி, கிராம ஊராட்சிகள் தங்களது எல்லைக்குட்பட்ட அனுமதி பெற்ற அனைத்து கட்டடங்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை (நிலை) எண் 255, நாள் 13.12.1999–இல் வெளியிடப்பட்டுள்ள மதிப்பீட்டு வழிகாட்டுதல்களின் அடிப்படையில் சொத்து வரி விதிக்க அதிகாரம் பெற்றுள்ளன. 2008–2009 ஆம் ஆண்டு முதல், சுயநிதிக் கல்வி நிறுவனங்களும் சொத்து வரி வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. 2026–2027 ஆம் ஆண்டிற்கான சொத்து வரி கேட்பு: ரூ.733.84 கோடி.

- **தொழில் வரி (Professional Tax):** பிரிவு 198–B–இன் படி, ஊதியம் பெறும் பணியாளர்களிடமிருந்து தொழில் வரி வசூலிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள், பணியாளர்களிடமிருந்து தொழில் வரியைப் பிடித்தம் செய்து, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு செலுத்துகின்றன. இவ்வருவாய் கிராம ஊராட்சி நிதியில் சேர்க்கப்படுகிறது. 2026–27 ஆம் ஆண்டிற்கான தொழில் வரி கேட்பு : ரூ.351.06 கோடி.
- **விளம்பர வரி (Advertisement Tax):** தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவுகள் 198 J முதல் 198 T – இன் கீழ் விளம்பர வரி விதிக்கப்படுகிறது. இது தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பர பலகைகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல்) விதிகள், 2009–இன் படி நிர்வகிக்கப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் நிறுவப்படும் விளம்பரப் பலகைகளுக்கான குறைந்தபட்ச மற்றும்

அதிகபட்ச ஆண்டு கட்டணங்களை அரசு நிர்ணயிக்கிறது. வசூலிக்கப்படும் ஆண்டு வாடகை மற்றும் கட்டணங்கள் கிராம ஊராட்சியின் பொது நிதியில் வரவு வைக்கப்படுகின்றன.

### 3.5.2.வரி அல்லாத வருவாய்

கிராம ஊராட்சிகளின் வரி அல்லாத வருவாய் ஆதாரங்களில் பின்வருவன அடங்கும்: கட்டட மற்றும் மனைப் பிரிவு (Layout) அனுமதிக் கட்டணங்கள்; ஆபத்தான மற்றும் இடையூறு விளைவிக்கும் தொழில்களுக்கான (Dangerous and Offensive Trades) உரிமக் கட்டணங்கள்; சந்தைக் கட்டணங்கள்; குடிநீர் கட்டணங்கள்; வண்டி நிறுத்துமிடக் கட்டணங்கள்; சமூகக் காடுகள் ஏல வருவாய்; மீன்பிடி குத்தகை வருவாய்; 2–C பட்டா தொடர்பான கட்டணங்கள்; சந்தைகள், பொருட்காட்சிகள் மற்றும் படகு போக்குவரத்து வருவாய்; அபராதங்கள் மற்றும் தண்டத்தொகை;

சுரங்கங்கள் மற்றும் கனிம வளங்களுக்கான சீனியரேஜ் (Seigniorage) கட்டணங்கள் மற்றும் குத்தகைத் தொகைகள்.

- **மனைப் பிரிவு மற்றும் கட்டடத் திட்ட அனுமதி:** தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 (அரசிதழ் எண் 43, நாள் 04.02.2019)–இன் படி, நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் (அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட இணை/துணை இயக்குநரின்) முன் ஒப்புதலுடன், கிராம ஊராட்சித் தலைவர் மனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்குகிறார். மேலும், நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 10,000 சதுர அடிவரை கட்டடப் பரப்பளவு கொண்ட குடியிருப்புக் கட்டடங்களுக்கும், 2,000 சதுர அடிவரை கட்டடப் பரப்பளவு கொண்ட வணிகக் கட்டடங்களுக்கும் கிராம ஊராட்சித் தலைவர் அனுமதி வழங்க அதிகாரம் பெற்றுள்ளார்.

- **குடிநீர்க் கட்டணம்:** ஒவ்வொரு வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பிற்கும் ரூ.1,000 பாதுகாப்பு வைப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது. மேலும், மாதந்தோறும் குறைந்தபட்சமாக ரூ.30 குடிநீர்க் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. 2026–27 ஆம் ஆண்டிற்கான குடிநீர்க் கட்டண கேட்பு: ரூ.410.47 கோடி.

### 3.6. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியங்கள்

#### 3.6.1.மாநில நிதி ஆணைய (State Finance Commission – SFC) மானியங்கள்

இந்திய அரசியலமைப்பின் 73–ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198–இன் படி, ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கும் ஒருமுறை மாநில நிதி ஆணையம் (State Finance Commission – SFC) அமைக்கப்படுகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கியப் பொறுப்புகள்–

உள்ளாட்சிகளின் நிதிநிலை ஆய்வு, மாநிலத்தின் நிகர வரி வருவாயை மாநில அரசுக்கும் உள்ளாட்சிகளுக்கும் இடையே பகிர்ந்தளித்தல், ஒதுக்கீடு செய்யப்பட்ட (Assigned) வருவாயில் உள்ளாட்சிகளுக்குரிய பங்கினை நிர்ணயித்தல், மாநில ஒருங்கிணைந்த நிதியிலிருந்து (Consolidated Fund of the State) வழங்கப்பட வேண்டிய மானியங்களை பரிந்துரைத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் ஆகியன 1994 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏழு மாநில நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆறாவது மாநில நிதி ஆணையம் (2022–2023 முதல் 2026–2027 வரை), 06.03.2020 அன்று அமைக்கப்பட்டது. அதன் அறிக்கை 13.01.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கிய பரிந்துரைகள்: மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் (State Own Tax Revenue) 10 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்தல்; ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 51 : 49 என்ற விகிதத்தில் செங்குத்து (Vertical) பகிர்மானம்; ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை மாவட்ட ஊராட்சி : வட்டார ஊராட்சி: கிராம ஊராட்சி = 6 : 39 : 55 என்ற விகிதத்தில் பகிர்ந்தளித்தல். மாநில நிதி ஆணையத்தின் மானியங்கள் இரண்டு முக்கியப் பிரிவுகளாக வழங்கப்படுகின்றன– சிறப்பு மானியங்கள் (Special Grants) மற்றும் பகிர்மான மானியங்கள் (Devolution Grants)

### 3.6.2. (a) சிறப்பு மானியங்கள் (Special Grants)

மாநில நிதி ஆணையத்தின் கீழ் வழங்கப்படும் முக்கிய சிறப்பு மானியங்கள்:

- மூலதன மானிய நிதி (Capital Grant Fund – CGF)
- செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி (Operations, Maintenance and Deficit Grant Fund – OMDGF)

**(b) பகிர்மான மானியம் (Devolution Grant):**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்மான மானியம், மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகிய மூன்று நிலைகளுக்கும் 6 : 39 : 55 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.




### 3.6.3. ஏழாவது மாநில நிதி ஆணையம்

ஏழாவது மாநில நிதி ஆணையம், 28.05.2025 அன்று அமைக்கப்பட்டது. இவ்வாணையம், 01.04.2027 முதல் 31.03.2032 வரையான காலத்திற்கான தனது பரிந்துரைகளை 31.12.2026–க்குள் அரசுக்கு சமர்ப்பிக்க உள்ளது.

### 3.6.4. ஒதுக்கீடு செய்யப்பட்ட வருவாய்களின் தொகுப்பு (Pooled Assigned Revenue – PAR)

முத்திரைத் தீர்வை (Stamp Duty) மற்றும் பல்வேறு அரசுத் துறைகளால் வசூலிக்கப்படும் கூடுதல் வரிகள் மூலம் பெறப்படும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வருவாய்கள், மாநில அளவில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அதில்,

- **மூன்றில் ஒரு பங்கு**, கிராம ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப் படுகிறது.
- **மூன்றில் இரண்டு பங்கு**, ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களை செயல்படுத்து வதற்காக ஒதுக்கப்படுகிறது. 2026–27 ஆம் ஆண்டிற்கான நிதி விடுவிப்பு, 2025–26 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உண்மையான வசூலை (Actual Collections) அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும்.

## 3.7. மத்திய நிதி ஆணைய (Central Finance Commission – CFC) மானியங்கள்

### 3.7.1.பதினைந்தாவது மத்திய நிதி ஆணையம் (2021–2022 முதல் 2025–2026 வரை)

பதினைந்தாவது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, வரையறுக்கப்பட்ட (Tied) மானியம் மற்றும் வரையறுக்கப்படாத (Untied) மானியம் ஆகியவற்றின் விகிதம் 60:40 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட (Tied) மானியங்களில்:**

- **30 சதவீதம்** – குடிநீர் வழங்கல், நீர்ப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி தொடர்பான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- **30 சதவீதம்** – சுகாதாரம் மற்றும் தூய்மை (Sanitation) தொடர்பான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**வரையறுக்கப்படாத (Untied) மானியங்கள்**, சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளைத் தவிர்த்து, மத்திய நிதி ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், உள்ளூர் தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்படும்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மத்திய நிதி ஆணைய மானியங்கள் பின்வரும் செங்குத்து (Vertical) விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன:

- கிராம ஊராட்சிகள் – 80%
- வட்டார ஊராட்சிகள் – 15%
- மாவட்ட ஊராட்சிகள் – 5%

**அட்டவணை எண். 3**

**15–ஆவது மத்திய நிதி ஆணைய (15th Central Finance Commission)**

**மானியப் பகிர்மானம் – நிலை வாரியாக / ஆண்டு வாரியாக (தொகை: ரூபாய் கோடியில்)**

| **ஆண்டு** | **கிராம ஊராட்சிகள்** | **வட்டார ஊராட்சிகள்** | **மாவட்ட ஊராட்சிகள்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 2020–21 | 2,885.60 | 541.05 | 180.35 | 3,607.00 |
| 2021–22 | 2,132.80 | 399.90 | 133.30 | 2,666.00 |

| ஆண்டு | கிராம ஊராட்சிகள் | வட்டார ஊராட்சிகள் | மாவட்ட ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2022-23 | 2,208.80 | 414.15 | 138.05 | 2,761.00 |
| 2023-24 | 2,232.80 | 418.65 | 139.55 | 2,791.00 |
| 2024-25 | 2,365.60 | 443.55 | 147.85 | 2,957.00 |
| 2025-26 | *510.34 | 95.68 | 31.89 | 637.91 |
| **மொத்தம்** | **11,825.60** | **2,312.98** | **770.99** | **15,419.91** |

**குறிப்பு:**

*** 2025-26 ஆம் ஆண்டிற்கான 15-ஆவது மத்திய நிதி ஆணைய மானியத் தொகை, 9 மாவட்டங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட தொகையாகும்.**

## அட்டவணை எண். 4

## ஊராட்சி அமைப்புகளின் மூன்று நிலைகளுக்கிடையேயான செங்குத்து (Vertical) பகிர்மான விகிதம்

| ஊராட்சி நிலை | பகிர்மான விகிதம் |
|---|---|
| மாவட்ட ஊராட்சி | 5 % |
| வட்டார ஊராட்சி | 15 % |
| கிராம ஊராட்சி | 80% |

### 3.7.2 பதினாறாவது மத்திய நிதி ஆணையம்

பதினாறாவது மத்திய நிதி ஆணையத்தின் (Sixteenth Finance Commission) முழு காலப்பகுதிக்கான, மூன்று நிலை ஊராட்சி அமைப்புகளுக்கிடையேயான நிதிப் பகிர்மான விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.


**பதினாறாவது மத்திய நிதி ஆணைய (16th Central Finance Commission) மானியங்கள்**

- **பதினாறாவது மத்திய நிதி ஆணையத்தின்** பரிந்துரைகளுக்கான காலம் 2026-27 **முதல்** 2030-31 வரை ஆகும். இக்காலப்பகுதியில், வரையறுக்கப்பட்ட (Tied) மானியம் மற்றும் வரையறுக்கப்படாத (Untied) மானியம் ஆகியவற்றின் விகிதம் 50 : 50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- **வரையறுக்கப்பட்ட** (Tied) மானியத்தில், 25 சதவீதம் குடிநீர் வழங்கல், நீர்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி

(Waste Recycling) தொடர்பான பணிகளுக்காகவும், மீதமுள்ள 25 சதவீதம் சுகாதாரம் மற்றும் தூய்மை (Sanitation) தொடர்பான பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **வரையறுக்கப்படாத (Untied) மானியங்கள்**, மத்திய நிதி ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளைத் தவிர்த்து, உள்ளூர் தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்பட வேண்டும். **பதினாறாவது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி**, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள், மாநில நிதி ஆணையத்தின் (State Finance Commission) பரிந்துரைகளின் அடிப்படையில், அந்தந்த நிலை ஊராட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப் படுகின்றன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று நிலைகளுக்கான செங்குத்து (Vertical) நிதிப் பகிர்மான விகிதம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 16வது மத்திய நிதி ஆணைய மானியம்
(மொத்தம் – 2026–27 முதல் 2030–31 வரை: ரூ.16,930 கோடி)




## 3.8. தேசிய ஊராட்சி விருதுகள் (National Panchayat Awards)

இந்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் (Ministry of Panchayati Raj) வழங்கும் தேசிய ஊராட்சி விருதுகள், முன்னுரிமைத் துறைகள் மற்றும் கருப்பொருள்களின் கீழ் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அமைப்புகளை அங்கீகரித்து கௌரவிப்பதுடன், விருது பெறும் ஊராட்சிகளுக்கு ஊக்கத் தொகையையும் வழங்குகிறது.

### 3.8.1. முக்கிய விருது வகைகள்

- தீன்தயாள் உபாத்யாய பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (Deen Dayal Upadhyay Panchayat Satat Vikas Puraskar – DDUPSV) – உள்ளூர்மயமாக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் (Localized Sustainable Development Goals – LSDGs) தொடர்பான குறிப்பிட்ட கருப்பொருட்களில் சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளுக்கான விருது.
- நானாஜி தேஷ்முக் சர்வோத்தம் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (Nanaji Deshmukh Sarvottam Panchayat Satat Vikas Puraskar – NDSPSV) – அனைத்து ஒன்பது LSDG கருப்பொருட்களிலும் ஒட்டுமொத்த சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தும் ஊராட்சிகளுக்கான உயரிய விருது.

### 3.8.2. சிறப்பு விருது வகைகள்

- **கிராம் ஊர்ஜா சுவராஜ் விருது (Gram Urja Swaraj Award)** –மின்சாரத் தன்னிறைவு பெற்ற கிராம ஊராட்சிகளுக்கான விருது.
- **கார்பன் நியூட்ரல் விருது (Carbon Neutral Award)** – கார்பன் நடுநிலைத்தன்மையை (Carbon Neutrality) மேம்படுத்தும் சிறந்த முயற்சிகளுக்கான விருது.
- **ஆத்மநிர்பர் பஞ்சாயத்து விருது (Atma Nirbhar Panchayat Award)** – சொந்த வருவாய் ஆதாரங்களை (Own Source Revenue) திறம்பட திரட்டுவதில் சிறந்து விளங்கும் ஊராட்சிகளுக்கான விருது.
- **காலநிலை நடவடிக்கை விருது (Climate Action Award)** – காலநிலை மாற்றத் தடுப்பு மற்றும் மாற்றத்தை தகவமைத்துக் கொள்ளும் (Mitigation & Adaptation) நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தும் ஊராட்சிகளுக்கான விருது.

- **ஊராட்சி திறன் மேம்பாட்டு சிறந்த நிறுவனம் விருது (Panchayat Kshamta Nirmaan Sarvottam Sansthan Puraskar)** – கிராம ஊராட்சிகளுக்கு திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஆதரவை சிறப்பாக வழங்கும் நிறுவனங்களுக்கான அங்கீகார விருது.

## 3.9. தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

### 3.9.1. தேர்தல்களின் வரலாறும் தற்போதைய நிலையும்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் கீழ், முதல் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 1996–ஆம் ஆண்டு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 2001, 2006, 2011, 2019 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மாவட்ட ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சி தேர்தல்கள் அரசியல் கட்சி அடிப்படையில் நடைபெறுகின்றன.

அதேவேளையில், கிராம ஊராட்சித் தேர்தல்கள், கட்சி சார்பற்ற (Non–party) முறையில் நடத்தப்படுகின்றன. 2019 டிசம்பர் மாதத்தில் 27 மாவட்டங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பின்னர், மாவட்ட மறுசீரமைப்பு மற்றும் தொகுதி வரையறை (Delimitation) பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 2021 அக்டோபர் மாதத்தில் தேர்தல்கள் நடைபெற்றன. புதிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 20.10.2021 அன்று பதவியேற்று, அவர்களின் பதவிக்காலம் 19.10.2026 அன்று நிறைவடைகிறது. மீதமுள்ள 28 மாவட்டங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 06.01.2020 முதல் 05.01.2025 வரை பதவியில் இருந்தனர்.

### 3.9.2. மாநிலத் தேர்தல் ஆணையம் மற்றும் வரையறை ஆணையம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், 1994–ஆம் ஆண்டு, நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்துவதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்துதல் மட்டுமன்றி, வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் மீது மேற்பார்வை, வழிநடத்தல் மற்றும் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் அதிகாரமும் மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 28–இன் படி, ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின்னரும் வார்டு எல்லைகளை மறுவரையறை (Delimitation) செய்ய வேண்டும்.

இதற்காக, தமிழ்நாடு மறுவரையறை ஆணையச் சட்டம், 2017, பிரிவு 12–இன் கீழ், தமிழ்நாடு மறு வரையறை ஆணையம் (Tamil Nadu Delimitation Commission) அமைக்கப்பட்டுள்ளது.

# 4. மாற்றத்தின் தூண்கள்

**4. மாற்றத்தின் தூண்கள் (Pillars of Change)**

**"வெற்றி தமிழகம்" மாற்றத்திற்கான செயல்திட்டம் (Vetri Tamizhagam Change Strategy)**, தமிழ்நாட்டில் நிலையான ஊரக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, வளர்ச்சி முன்முயற்சிகளை நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals – SDGs) உடன் ஒருங்கிணைக்கும் கட்டமைக்கப்பட்ட செயல்திட்டமாகும். இச்செயல்திட்டத்தின் அடித்தளம் கிராம ஊராட்சிகளை வலுப்படுத்துதல் ஆகும். இம்மாற்றத்திற்கான செயல்திட்டம், வறுமை ஒழிப்பு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் ஆகிய மூன்று முக்கியத் தூண்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. இத்தூண்கள், கண்ணியமான வாழ்வாதாரம், தரமான உட்கட்டமைப்பு, மின்னணு அதிகாரமளித்தல் (Digital Empowerment) மற்றும்

திறன்மிக்க ஊரக உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்கும் இலக்கு சார்ந்த முன்னெடுப்புகள் மூலம், வறுமையற்ற, நீர்வளப் பாதுகாப்பு கொண்ட, தூய்மையான, ஆரோக்கியமான, குழந்தைகள் நலனுக்கேற்ற மற்றும் சிறந்த நிர்வாகம் கொண்ட கிராமங்களை உருவாக்குவதே இக்கட்டமைப்பின் நோக்கமாகும். மேலும், சமூக அதிகாரமளிப்பையும், அடித்தள ஜனநாயகத்தை வலுப்படுத்துவதையும் உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான மற்றும் நிலையான ஊரக வளர்ச்சிக்கான முழுமையான வழிகாட்டி (Roadmap) இது அமைகிறது.

**4.1. முதல் தூண் : வறுமை ஒழிப்பு (Poverty Alleviation)**

முதல் தூணான வறுமை ஒழிப்பு, அனைத்து ஊரகக் குடும்பங்களுக்கும் கண்ணியமான வாழ்வாதாரத்தை உறுதி செய்தல், குறைந்த செலவில் தரமான வீட்டுவசதியை

விரிவுபடுத்துதல் மற்றும் சுய உதவிக்குழுக்கள், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் நிதி உள்ளாக்கம் ஆகியவற்றின் மூலம் பெண்களின் பொருளாதார மற்றும் சமூக அதிகாரமளிப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

இம்முயற்சிகள், நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கலின் (LSDGs) கீழ் உள்ள வறுமையற்ற மற்றும் மேம்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராமம், சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு கொண்ட கிராமம், மகளிர் நேய கிராமம் ஆகிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கின்றன. மேலும், ஊரக வீட்டுவசதி மற்றும் சமூகச் சொத்துகள் உருவாக்கம், தன்னிறைவு பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட கிராமம் என்ற இலக்கை அடையவும் பங்களிக்கின்றன. உறுதியான ஊதிய வேலைவாய்ப்பு, சுய உதவிக்குழு தொழில்

முனைவு, திறன் மேம்பாடு மற்றும் குறுங்கடன் (Micro–credit) இணைப்பு ஆகியவை ஒருங்கிணைந்து வறுமையின்மை (SDG 1), பசியின்மை (SDG 2), பாலின சமத்துவம் (SDG 5), கண்ணியமான வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி (SDG 8), சமத்துவமின்மையைக் குறைத்தல் (SDG 10) ஆகிய உலகளாவிய இலக்குகளை முன்னெடுக்கின்றன. அதேவேளையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் பாதுகாப்பான வீடு வழங்குவது, நீடித்த நிலைத்த நகரங்கள் மற்றும் சமூகங்கள் (SDG 11) என்ற இலக்கை அடைவதற்கும் முக்கிய பங்காற்றுகிறது.

### 4.1.1. வீட்டு வசதி

**வீட்டு வசதி ஒரு சமூக முன்னேற்றத்திற்கான காரணி**

உணவு, உடை போல ஒரு நிலையான நிரந்தர வீடும் மக்களின் அடிப்படைத் தேவையாகும். கிராமப்புரக் குடும்பத்தைப் பொறுத்தவரை, அது வெறும் இருப்பிடம் என்பதை விட பல மடங்கு மேலானதாகும். மழை நீர் ஒழுகாத கூரையின் கீழ் குழந்தைகள் சிறப்பாக படிக்க முடிகிறது; மழை, வெயில் மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாப்பான வீட்டில் வாழும் தாயின் ஆரோக்கியம் மேம்படுகிறது; ஒவ்வொரு பருவத்திலும் மண் மற்றும் கூரைச் சுவர்களைப் புனரமைக்க ஆகும் செலவு தவிர்க்கப்படுவதால், குடும்பத்தின் சேமிப்பு உயர்கிறது. எனவே, ஒரு வீடு என்பது வெறும் நலத்திட்ட உதவி மட்டுமல்ல, அது ஒரு சமூக முன்னேற்றத்திற்கான காரணியாகவும்,

பொருளாதாரச் சொத்தாகவும் திகழ்கிறது. அது ஒரு குடும்பத்திற்கு கண்ணியத்தையும் குடியிருக்க பாதுகாப்பையும் வழங்குகிறது; குடும்பத்திற்கு ஒரு நிலையான முகவரியை அளித்து, அரசின் அனைத்து நலத்திட்ட அமைப்புகளின் பார்வையிலும் அவர்களைக் கொண்டு சேர்க்கிறது; இதன்மூலம் குடும்ப வருவாயை ஈட்டி கல்வி, ஊட்டச்சத்து மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் தலைமுறை தலைமுறையாக மதிப்புகூடும் சொத்தாகவும் அமைகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் அதிகமாக எதிர்கொள்ளும் புயல், வெள்ளம் மற்றும் கடுமையான வெயிலைத் தாங்கும் வல்லமை கொண்டதாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு கிராமப்புரத்திலும் வீடு இல்லாத குடும்பத்திற்கு 'நிரந்தர' வீட்டினை வழங்கிட உறுதியேற்பது இந்த அரசின் முதன்மையான முன்னுரிமையாகும்.

### 4.1.2. அரசின் தொலைநோக்கு பார்வை

தமிழ்நாட்டை பொருளாதார வளர்ச்சி, சமத்துவம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய மாநிலமாக மாற்றுவதற்கான செயல் வடிவமாக இந்த அரசு "வெற்றித் தமிழகம் – தொலைநோக்கு ஆவணம்" என்பதை வகுத்துள்ளது. இந்தத் தொலைநோக்கு ஆவணத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்று "அனைவருக்கும் வீடு" திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஒவ்வொரு கிராமப்புர ஏழைக் குடும்பத்திற்கும் பாதுகாப்பான, நீடித்த மற்றும் நிரந்தர வீடு வழங்கப்படும் என இந்த அரசு உறுதியேற்றுள்ளதுடன், ஐந்து இலட்சம் புதிய வீடுகளைக் கட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் பல்வேறு திட்டங்கள் காலம் காலமாக செயல்படுத்தப்பட்டு வந்த போதிலும், கணிசமான

எண்ணிக்கையிலான கிராமப்புரக் குடும்பங்கள் இன்றும் குடிசைகளிலும், மண் சுவர்களாலான, பலவீனமான கட்டமைப்புகள் கொண்ட வீடுகளிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றின் விலை ஏற்றத்தால், தற்போதைய திட்டங்களின் கீழ் கிடைக்கும் நிதியுதவி, நல்ல தரத்துடன் கூடிய நிலையான வீட்டைக் கட்டுவதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, "அனைவருக்கும் வீடு" என்ற தொலைநோக்கு பார்வையை நனவாக்க, கூடுதல் நிதியுதவி மற்றும் பயனாளிக்கு அதிக நெகிழ்வுத்தன்மையுடன் புதிய வடிவமைப்பிலான புதிய திட்டம் தேவைப்படுகிறது.

### 4.1.3. புதிய கிராமப்புர வீட்டுவசதித் திட்டம்

அதன்படி, தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளுக்காக தனித்துவமான "வெற்றி வீடு திட்டம்" எனும் புதிய கிராமப்புர வீட்டுவசதித்

திட்டத்தை அரசு செயல்படுத்தும். இதன் முதற்கட்டமாக, 2026-27 ஆம் ஆண்டில் 70,000 குடிசை வீடுகளை உறுதியான வீடுகளாக (Pucca) மாற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

**உயர்த்தப்பட்ட அலகுத் தொகை(Unit Cost)**

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.3.50 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை மாநில வீட்டுவசதித் திட்டத்தில் வழங்கப்பட்ட தொகையை விட தற்போது வழங்கப்பட இருக்கும் இத்தொகை கூடுதலான தொகையாகும். கிராமப்புரக் குடும்பங்கள் கடனில் மூழ்காமல், கான்கிரீட் கூரையுடன் கூடிய உறுதியான வீட்டைக் கட்டி முடிக்கக்கூடிய வகையில் இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## எளிதில் கிடைக்கும் வங்கி நிதியுதவி

அரசால் வழங்கப்படும் நிதியுதவிக்கு மேல் கூடுதல் நிதி தேவைப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு அல்லது வணிக வங்கிகளிடமிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வரை வீட்டுக் கடனாகவோ, அல்லது மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்தோ நிதியுதவி பெற்றுக் கொள்ளலாம். பிணையம் இன்றியும் குறைந்த வட்டி விகிதத்திலும் இக்கடன்களை வழங்கிட வங்கிகள் ஊக்குவிக்கப்படும்.

## வட்டி மானியம்

இத்தகைய கடன்களுக்கு, தவணைகளைத் தவறாமல் முறைப்படி செலுத்தும் பயனாளிகளுக்கு, 15 ஆண்டுகள் வரையிலான முழு கடன் காலத்திற்கும் ஆண்டிற்கு 3 சதவீத வட்டி மானியத்தை, அரசு திரும்ப வழங்கும்.

**மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு முன்னுரிமை**

விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், திருநங்கைகள், தூய்மைப் பணியாளர்கள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், உறுதிசெய்யப்பட்ட மனிதக் கழிவுகளை கையால் அகற்றும் தொழிலாளர்கள், கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்து, வெள்ளம் மற்றும் இதர இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறன் அல்லது விபத்துகளில் சிக்கி மீண்ட மாற்றுத்திறனாளிகள் பாதிப்புக்குப் பிந்தைய மன உளைச்சல் மற்றும் குற்ற நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறிப்பாக, அழிவின் விளிம்பு நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர், பழங்குடியினர் (ST)

மற்றும் நாடோடி சமூகத்தினருக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு**

மாவட்ட ஒதுக்கீட்டில் 5 சதவீதம் கட்டாய உள்ஒதுக்கீடாக, அனைத்துப் பிரிவுகளிலும் பிரத்யேகமாக மாற்றுத்திறனாளிகளுக்கும் (மனவளர்ச்சி குன்றிய நபர் உள்ள குடும்பங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் 40 சதவீத வீடுகள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினக் குடும்பங்களுக்கு என பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**வீட்டுடன் கூடிய அடிப்படை வசதிகள்**

தூய்மைப் பாரத இயக்கம் – ஊரக திட்ட ஒருங்கிணைப்பு மூலம், இதுவரை பயனடையாத பயனாளிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000/– ஊக்கத்தொகை வழங்கப்படும்.

கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு இணைப்பு, மின் இணைப்பு மற்றும் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு ஆகிய வசதிகள் செய்து தரப்படும். ஒரு குடியிருப்பில் குழுவாக வீடுகள் கட்டப்படும் இடங்களில், சாலைகள், தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் பிற திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது வீட்டின் வளாகத்தில் குறைந்தது இரண்டு மரக்கன்றுகளை நட்டு அவற்றைப் பாதுகாப்பு வளையங்களைக் (tree guards) கொண்டு பாதுகாக்க வேண்டும், மரக்கன்றுகள் நடப்பட்டு களஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்ட பிறகே இறுதித் தவணைத் தொகை வழங்கப்படும்.

## நிதி விடுவிப்பதில் வெளிப்படைத்தன்மை

கட்டுமானம் ஒவ்வொரு நிலையை அடையும் போதும், நிதியுதவி நேரடியாகப் பயனாளியின் வங்கிக் கணக்கிற்குத் தவணை முறையில் வழங்கப்படும்; ஒவ்வொரு பணப்பரிவர்த்தனை தொடங்கப்பட்ட உடனும் குறுஞ்செய்தி (SMS) அனுப்பப்படும். கட்டுமானத்திற்குத் தேவையான சிமெண்ட் துறையின் மூலம் வழங்கப்படும்.

உயர்த்தப்பட்ட அலகுத் தொகையுடன், குடும்பத்தின் தேவைக்கேற்ப வீட்டின் அளவை மாற்றியமைக்கும் வசதி, எளிய கடன் வசதி மற்றும் அனைத்து அடிப்படைச் சேவைகளுடன், தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் "அனைவருக்கும் வீடு" என்பதை நோக்கி இந்த அரசு ஒரு தீர்மானமான நடவடிக்கையை மேற்கொள்ளும். இதன் மூலம் தகுதியுள்ள

ஒவ்வொரு கிராமப்புரக் குடும்பத்திற்கும் கண்ணியமான, பாதுகாப்பான மற்றும் உறுதியான வீடு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## 4.2. ஊரக குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள்

**வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்குதல்:**

ஊரகப் பகுதியில் உள்ள "ஒவ்வொரு வீட்டிற்கும் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 லிட்டர் தரமான மற்றும் நீண்டகால அடிப்படையில் குறைந்த சேவைக் கட்டணத்தில் குடிநீர் வழங்கும் வகையில் செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் இணைப்புகள் (FHTCs) வழங்கப்பட வேண்டும். இது ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு வழிவகுக்கும்."

தமிழ்நாட்டில் உள்ள 1.51 கோடி ஊரக வீடுகளில், 1,12,56,706 வீடுகளுக்கு நாளது வரையில் செயல்பாட்டு வீட்டுக் குடிநீர்

இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரக வீட்டிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, விடுபட்ட அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் படிப்படியாக வழங்கப்படும்.

**தனி நபர் இல்லக் கழிப்பறைகள் வழங்குதல்**

உள்ளூர்மயமான நிலையான வளர்ச்சி இலக்குகளை (Localized Sustainable Development Goals – LSDGs) அடைவதில் சுகாதாரம் (Sanitation) ஒரு முக்கியக் காரணியாகும். இது ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல், சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், நிலையான கழிவு மேலாண்மையை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் முதன்மையாக, நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) எண் 6 – தூய்மையான குடிநீர் மற்றும்

சுகாதாரம் (Clean Water and Sanitation)–க்கு பங்களிக்கிறது. மேலும், மேம்பட்ட சுகாதாரம், பொது சுகாதாரம், வள மேலாண்மை மற்றும் காலநிலையைத் தாங்கும் திறன் ஆகியவற்றின் மூலம் SDG இலக்குகள் 3, 11, 12 மற்றும் 13–க்கும் ஆதரவளிக்கிறது.

அனைத்து ஊரகக் குடும்பங்களும் பாதுகாப்பான கழிப்பறைகளை பயன்படுத்தும் வகையில், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (Individual Household Latrines – IHHL) அமைக்க வசதி செய்யப்படுகிறது. இதில் சுகாதாரக் கழிப்பறை அமைப்பு (Sanitary Substructure), மேல்கட்டமைப்பு (Superstructure) மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் நீர் சேமிப்பு வசதி (Water Storage Facility) ஆகியவை அடங்கும். தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் (IHHLs) கட்டுவதற்காக ரூ.12,000/– ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

**4.3 ஊதிய வேலைவாய்ப்பு (VB–GRAM (G))**

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் 01.07.2026 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு (MGNREGS) மாற்றாக செயல்படுத்தப்படுகிறது.

2026–27ஆம் நிதியாண்டில், 01.04.2026 முதல் 30.06.2026 வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் (MGNREGS) கீழ் 29.83 இலட்சம் குடும்பங்களைச் சார்ந்த 31.47 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டு, 3.22 கோடி மனித சக்திநாட்கள் (Persondays) உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கான மொத்த செலவினம் ரூ.1,804 கோடி ஆகும்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், நிதி பங்கீடு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதன்மை நோக்கமாக, திறன்சாரா உடல் உழைப்புப் பணிகளை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு ஊரக குடும்பத்திற்கும் ஒரு நிதியாண்டில் 125 நாட்கள் வேலை பெறும் உரிமை உள்ளது.

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் 81.39 இலட்சம் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 103.18 இலட்சம் தனிநபர் தொழிலாளர்களுக்கு வேலை அட்டைகள் (Job Cards) வழங்கப்பட்டுள்ளன. இதில் 1,38,314 மாற்றுத்திறனாளிகள் மற்றும் 581 திருநங்கைகள் உள்ளடங்குவர். 25.07.2026 அன்றைய நிலவரப்படி 26.75 இலட்சம் மனித சக்தி நாட்கள் (Persondays) உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உருவாக்கப்பட்ட மொத்த மனித சக்தி நாட்களில் 87.08% பெண்கள் மற்றும் 29.69% பட்டியல்

இனத்தவர் மற்றும் பழங்குடியின (SC/ST) குடும்பத்தை சார்ந்த பயனாளிகளால் உருவாக்கப்பட்டுள்ளன.

# 5. இரண்டாம் தூண்: வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

## 5.இரண்டாம் தூண்: வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் (Improving Quality of Life)

இரண்டாம் தூணான "வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்", மீளெழும் திறன் கொண்ட பொது உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் வாய்ந்த வளர்ச்சியை முன்னெடுத்தல், பொதுச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வளர்ச்சியை உறுதி செய்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

இத்தூண், உள்ளூர்மயமாக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளின் (Localized Sustainable Development Goals – LSDGs) கீழ் நீர்வளப் பாதுகாப்பு கொண்ட கிராமம், தூய்மையான மற்றும் பசுமையான கிராமம், ஆரோக்கியமான கிராமம், குழந்தை நேய கிராமம் மற்றும் தன்னிறைவு

பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட கிராமம் ஆகிய இலக்குகளை நிறைவேற்ற உதவுகிறது. மேலும், பாதுகாப்பான சுகாதார வசதிகள் மற்றும் தெரு விளக்குகள் மூலம் மகளிர் நேய கிராமம் என்ற இலக்கும் பூர்த்தி செய்யப்படுகிறது. பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம், கழிவு மேலாண்மை, அனைத்து காலநிலைகளிலும் பயன்படும் சாலைகள், சமூகச் சொத்துகள் மற்றும் மின்னணு இணைப்புத் திறன் (Digital Connectivity) ஆகியவை ஒருங்கிணைந்து தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம் (SDG–6), நல்ல உடல்நலம் மற்றும் நல்வாழ்வு (SDG–3), மலிவான மற்றும் தூய்மையான ஆற்றல் (SDG–7), தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு (SDG–9), நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (SDG–11), பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (SDG–12), காலநிலை நடவடிக்கை

(SDG–13) ஆகிய உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னெடுக்கின்றன.

**பின்னணி**

கிராமப்புரங்களை நகர்ப்புரங்களுக்கு இணையான நிலையில் மேம்படுத்தும் நோக்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தின் அனைத்து 12,571 கிராம ஊராட்சிகளும் இத்திட்டங்களின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவை நிதி ஒதுக்கீட்டில் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளன. இது, கிராமப்புர இணைப்பு வசதிகளையும் போக்குவரத்து

உட்கட்டமைப்பையும் மேம்படுத்துவதில் அரசின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. பள்ளிகள், சமுதாயக் கூடங்கள், ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் பிற பொதுப் பயன்பாட்டு கட்டிடங்கள் உள்ளிட்ட பொதுக் கட்டிடங்களும் முதலீட்டின் மற்றொரு முக்கியப் பகுதியாக உள்ளன. மேலும், வேளாண்மையின் நிலைத்தன்மையையும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனையும் வலுப்படுத்தும் வகையில், பாசன வசதிகள் மற்றும் நீர் வள பாதுகாப்புக் கட்டமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார உட்கட்டமைப்பு, தெருவிளக்கு வசதிகள், குடிநீர் வழங்கல் அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்கான முதலீடுகள், கிராமப்புர மக்களின் பொதுச் சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தரம் மற்றும்

ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நேரடியாகப் பங்களிக்கின்றன.

இவ்வளவு பெரிய அளவிலான பொதுச் சொத்துகளின் உருவாக்கம், அவற்றை நீண்டகால அடிப்படையில் பாதுகாத்து நிலைநிறுத்துவதற்காக, முறையான சொத்து மேலாண்மை, முன்னெச்சரிக்கை பராமரிப்பு, மின்னணு சொத்து இருப்புப் பதிவேட்டு அமைப்புகள், சொத்துகளின் ஆயுட்காலத் திட்டமிடல் மற்றும் நிலைத்த நிதியளிப்பு போன்ற நடைமுறைகளின் அவசியத்தை மேலும் வலியுறுத்துகிறது.

தமிழ்நாடு அரசும் இந்திய அரசும் ஊரக வளர்ச்சிக்காக தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்து வந்த போதிலும், கிராமப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டில் ஒருங்கிணைக்கப்படாத திட்டமிடல், சீரற்ற நிதி ஒதுக்கீடு மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளிகளை முழுமையாகக் கண்டறிந்து

மதிப்பிடும் ஒருங்கிணைந்த அமைப்பு இல்லாமை போன்ற சவால்கள் தொடர்ந்து நிலவி வருகின்றன. பல்வேறு துறைகள் தங்களது திட்டங்களை தனித்தனியாக செயல்படுத்துவதனால், மீண்டும் மீண்டும் நிதி ஒதுக்கீடு ஒரே விதமான பணிக்கே மேற்கொள்ளப்படுதல், திட்டங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு குறைபாடு மற்றும் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கு இடையேயான சமமற்ற வளர்ச்சி போன்ற நிலைகள் உருவாகின்றன. மேலும், ஒருங்கிணைந்த சொத்து இருப்புப் பதிவேடும், ஒருங்கிணைந்த திட்டமிடல் கட்டமைப்பும் இல்லாத காரணத்தால், வளங்களை திறம்பட பயன்படுத்துவதிலும், உட்கட்டமைப்பை நிலையான முறையில் நிர்வகிப்பதிலும் தடைகள் ஏற்படுகின்றன.

தற்போது 18,705 குக்கிராமங்களில் வளர்ச்சி சார்ந்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும், புதிய குடியிருப்புகள் மற்றும் தெருக்கள் உருவாகுதல், மக்கள் தொகை அதிகரித்தல் ஆகிய காரணங்களால், அடிப்படை வசதிகளை வழங்குவதில் உருவாகியுள்ள புதிய இடைவெளிகளை நிவர்த்தி செய்வது அவசியமாகும்.

**5.1. ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கொள்கை: தமிழ்நாடு கிராம மேம்பாடு, மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (TN–VETRI)**

கிராமப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டில் நிலவும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு கிராம மேம்பாடு, மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு என்ற பெயரில், கிராமத்தை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் முன்மொழியப்படுகிறது.

இம்முயற்சியின் நோக்கம், பொதுச் சொத்துகளின் விரிவான இருப்புப் பதிவேட்டை தயாரித்தல், உட்கட்டமைப்பு குறைபாடுகளை அறிவியல் அடிப்படையில் கண்டறிதல் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உட்கட்டமைப்பு சார்ந்த அனைத்து திட்டங்களின் வளங்களையும் ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த ஒற்றை கிராம வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஒதுக்கீடு உறுதி செய்யப்படுவதுடன், அனைத்து கிராமப்புரங்களிலும் அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் வழங்கப்படவும், நகர்ப்புர எல்லையை ஒட்டிய பகுதிகள் மற்றும் சிறப்பு கிராம ஊராட்சிகளில் நகர்ப்புரத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவும் முன்மொழியப்படுகிறது. மேலும்,

முன்கூட்டியே கணிக்கக்கூடிய ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடுகளும், பொதுச் சொத்துகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்கான தனித்துவமான நிதி ஆதரவும் வழங்கப்படுவதன் மூலம், அவற்றின் நீடித்த பயன்பாடு உறுதி செய்யப்படும். திட்டமிடல், நிதியளித்தல், செயல்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைப்பதன் மூலம், இத்திட்டம் சமநிலையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான ஊரக வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தி, தமிழ்நாட்டின் கிராமப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

TN–வெற்றி திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றான, ஒவ்வொரு ஊராட்சிக்கும் பிரதான கிராமம் மற்றும் அதன் குக்கிராமத்திற்கும் தனித்தனியாகவும்

சமநிலையுடனும் நிதி ஒதுக்கீடு வழங்குவதுடன் இந்த அணுகுமுறை, கிராம ஊராட்சிகளுக்குள் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதுடன், மிகச் சிறிய குக்கிராமங்கள் கூட வளர்ச்சியிலிருந்து பின்தங்காத வகையில் உறுதி செய்யும்.

TN–வெற்றி திட்டத்தை முறையாக செயல்படுத்தும் நோக்கில், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஆண்டுதோறும் முன்கூட்டியே கணிக்கக்கூடிய வகையில் நிதி ஒதுக்கீடு வழங்க முன்மொழியப்படுகிறது. இதன் மூலம், நீண்டகால வளர்ச்சித் திட்டமிடலை மேற்கொள்ளவும், வளர்ச்சிப் பணிகளை உரிய காலக்கெடுவிற்குள் செயல்படுத்தவும் இயலும். இத்தகைய முன்கூட்டியே உறுதி செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, கிராம ஊராட்சிகள் நடைமுறைக்கு ஏற்ற யதார்த்தமான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கவும், அவ்வப்போது வழங்கப்படும் சிறப்பு

நிர்வாக ஒப்புதல்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத துறைவாரியான திட்டங்களைச் சார்ந்திருக்கும் நிலையை குறைக்கவும் உதவும்.

இத்திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு சார்ந்த அனைத்து திட்டங்களையும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவது நோக்கமாகும். இதன் மூலம், கிராம ஊராட்சியளவில் கண்டறியப்படும் தேவைகளுக்கு ஏற்ப திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீடு ஒருங்கிணைக்கப்படுவதுடன், உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்களை நெகிழ்வுத் தன்மையுடன் வடிவமைத்து செயல்படுத்தவும், திட்டங்களின் நிர்வாகத்தை மேலும் திறம்பட மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

TN–வெற்றி திட்டத்தின் முக்கியத் தூண்களில் ஒன்றாக, மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒதுக்கப்படும் நிதி வளங்களை இத்திட்டத்தின் கொள்கை நோக்கங்களுடனும் செயலாக்க முறையுடனும் ஒருங்கிணைப்பதாகும். ஒவ்வொரு திட்டத்தையும் தனித்தனியாக செயல்படுத்துவதற்குப் பதிலாக, மத்திய நிதிக்குழு மானியங்கள், மாநில நிதிக்குழு மானியங்கள், வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், ஜல் ஜீவன் மிஷன், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிற தொடர்புடைய திட்டங்களின் கீழ் கிடைக்கும் நிதியை ஒருங்கிணைத்து பயன்படுத்த இம்முயற்சி முன்வைக்கப்படுகிறது.

இதன்படி, திட்டமிடல், நிதியளித்தல், செயல்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகிய அனைத்தையும் ஒரே விரிவான கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைப்பதன் மூலம், TN–வெற்றி தமிழ்நாட்டின் ஊரக வளர்ச்சிக்கான ஒரு மாற்றமிக்க மாதிரியாக அமைகிறது. கிராமத்தை மையமாகக் கொண்ட திட்டமிடல், அரசின் வளங்களை ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்துதல், சமநிலையான உட்கட்டமைப்பு முதலீடு மற்றும் நிலையான சொத்து மேலாண்மை ஆகியவற்றின் மூலம், கிராமப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதோடு, மாநிலம் முழுவதும் சமநிலையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி என்ற இலக்கை நனவாக்கும் திறன் இம்முயற்சிக்கு உள்ளது.

### 5.1.1.கிராம ஊராட்சிகளுக்கான தனித்துவப்படுத்தப்பட்ட வளர்ச்சி உத்தி

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகள் புவியியல், மக்கள்தொகை மற்றும் சமூக–பொருளாதார அடிப்படையில் பல்வேறு தனித்துவமான பண்புகளை கொண்டுள்ளன. புதிய குடியிருப்புகள் உருவாகுதல், மக்கள்தொகை அதிகரித்தல் மற்றும் இதுவரை போதுமான அளவில் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாத குக்கிராமங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்ய, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஒரே மாதிரியான வளர்ச்சி அணுகுமுறையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, தேவைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட வகைக்கேற்ப மேம்பாடு வளர்ச்சி அணுகுமுறை அவசியமாகிறது. இதன் அடிப்படையில், கிராம ஊராட்சிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- நகர்புரத்தையொட்டிய மற்றும் பெரிய கிராம ஊராட்சிகள் : 1200
- மலைப்பகுதி கிராம ஊராட்சிகள் : 277
- கடலோர கிராம ஊராட்சிகள் : 235
- சுற்றுலா தலம் சார்ந்த கிராம ஊராட்சிகள்: 76

கடந்த ஆண்டுகளில் கிராமப்புர உட்கட்டமைப்பு வசதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், சாலை இணைப்பு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு, இணைய சேவைகளுக்காக அணுகல் மற்றும் பொதுச் சேவைகள் போன்ற துறைகளில் வளர்ச்சி இடைவெளிகள் இன்னும் நீடிக்கின்றன. சாலை இணைப்பு வசதிகள் போதுமானதாக இல்லாத கிராம ஊராட்சிகளில் தரமற்ற சாலைகள், பொதுப் போக்குவரத்து வசதியின்மை, பாதுகாப்பற்ற சாலைகள் மற்றும் போதிய தெருவிளக்கு வசதிகள் இல்லாமை போன்ற சவால்களை

எதிர்கொள்கின்றன. அதேபோல், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளில் பின்தங்கியுள்ள கிராம ஊராட்சிகளில் சீரான குடிநீர் வழங்கல், நிலையான நீர்வள மேலாண்மை, முழுமையான சுகாதார வசதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற வசதிகள் இல்லாத நிலையை எதிர்கொள்கின்றன.

கடினமான நில அமைப்பு மற்றும் பரவலாக காணப்படும் குக்கிராமங்களால் உருவாகும் சவால்களை எதிர்நோக்கும் வகையில் மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் வாழும் கிராம ஊராட்சிகளில் அனைத்து பருவங்களிலும் பயன்படுத்தக்கூடிய சாலைகள், குடிநீர் வழங்கல், பள்ளிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அதேபோன்று, வேகமாக நகரமயமாகி வரும் நகர்ப்புரத்தையொட்டிய கிராம ஊராட்சிகளில் எதிர்கால வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் சாலைகள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, பூங்காக்கள், தெருவிளக்கு வசதிகள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

கிராமப்புரப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு, கிராமச் சந்தைகள், வாரச் சந்தைகள், உலர் களங்கள், பால் சேகரிப்பு மையங்கள், கிடங்குகள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பொதுமக்களுக்கான வை–ஃபை (Wi–Fi), மின்னணு நூலகங்கள் போன்ற மின்னணு உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

தனித்துவப்படுத்தப்பட்ட வளர்ச்சி செயல்பாட்டுத் திட்டம் மூலம், கிராம ஊராட்சிகளின் தேவைகளுக்கு ஏற்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்ட முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், சமமான உட்கட்டமைப்பு மேம்பாடு உறுதி செய்யப்படும். இதன் மூலம் பிராந்தியங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் குறைக்கப்பட்டு, பொதுச் சேவைகள் வழங்கல் மேம்படுத்தப்பட்டு, அனைத்து வகையான கிராம ஊராட்சிகளிலும் நிலையான மீள் திறன் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமப்புர வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்.

## 5.2. துணை இயக்கம்: 1. குடிநீர் விநியோகம்

### 5.2.1. குடிநீர் விநியோகம்

நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் (LSDG)–ன் கருப்பொருள் 4–ஆக விளங்கும் " நீர்வளம் நிறைந்த கிராமம்" (Water Sufficient Village) என்பது, 100% பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, திறன்கொண்ட நீர் மேலாண்மை மற்றும் நீர்நிலை சுற்றுச்சூழல் அமைப்புகளை தீவிரமாகப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் முழுமையான நீராதாரப் பாதுகாப்பை அடைந்த ஒரு கிராமம் ஆகும். இந்தியாவில், இது அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டு இயங்குகிறது. மேலும், அனைவருக்கும் தூய்மையான நீர் மற்றும் சுகாதாரமான வசதிகள் கிடைப்பதையும், அவற்றின் நிலையான மேலாண்மையையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட நிலையான வளர்ச்சி

இலக்கு (SDG 6) உடன் இணைந்து செயல்படுகிறது. மேலும், 'வெற்றித் தமிழகம்' வழிகாட்டு ஆவணத்தில் "அனைவருக்கும் குடிநீர்" என்பது திட்டமிடப்பட்டுள்ளது. இது ஊரக வளர்ச்சி மற்றும் பொதுச் சுகாதாரத்தின் மிக முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றான பாதுகாப்பான, போதுமான மற்றும் நம்பகமான குடிநீர் விநியோகத்தை அனைவருக்கும் உறுதி செய்கிறது.

**தற்போதைய நிலை (Present scenario)**

ஊரக வீடுகளுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக ஊரக குடிநீர் உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தமிழ்நாடு அரசு அடைந்துள்ளது. மேலும், ஜல் ஜீவன் இயக்கம் உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ், குடிநீர் உட்கட்டமைப்புகளை வழங்குவதற்கும்,

பராமரிப்பதற்குமான பொறுப்பினை கிராம ஊராட்சிகளிடம் வழங்கி, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ஆகிய இரு துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, தமிழ்நாடு முழுவதும் 1,27,896 கைபம்புகள், 1,14,913 விசைப்பம்புகள், 1,08,647 சிறிய விசைப்பம்புகள், 1,23,579 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 9,909 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 583 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அடங்கிய குடிநீர் விநியோகக் கட்டமைப்புகளை மாநில அரசு நிறுவியுள்ளது. இந்த உட்கட்டமைப்புகள், மாநிலம் முழுவதிலும் உள்ள ஊரக மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இருப்பினும், மக்கள் தொகை பெருக்கம், நிலத்தடி நீர் ஆதாரங்கள் குறைதல், பருவநிலை மாறுபாடுகள் மற்றும் அதிகரித்துவரும் இயக்கம் மற்றும்

பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றால் எழும் தேவையின் காரணமாக, தமிழ்நாட்டு ஊரக பகுதிகளில் அனைவருக்குமான மற்றும் நிலையான நீர் பாதுகாப்பை அடைவதற்கு, குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மை, நீர் சேமிப்பு, உட்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் சிறப்பான குடிநீர் விநியோகம் ஆகியவற்றில் தொடர்ச்சியான முதலீடுகள் அவசியமாகின்றன.

**ஒற்றை கிராம திட்டங்கள் – உள்ளூர் நீர் ஆதாரங்கள்**

கிராம ஊராட்சியில், நிலையான உள்ளூர் நீர் ஆதாரங்களின் மூலம் குடிநீர் தேவைகளை நிறைவு செய்யும் ஒற்றைக் கிராமக் குடிநீர் திட்டங்கள், தமிழ்நாட்டின் ஊரக குடிநீர் விநியோகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றன. இத்திட்டங்களின் கீழ், விசைப்பம்புகள் பொருத்தப்பட்ட "ஆழ்துளைக்கிணறுகள்" முதன்மை நீர்

ஆதாரமாகச் செயல்பட்டு, நீரேற்று குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு (OHTs) குடிநீரை ஏற்றி, அங்கிருந்து விநியோக குழாய்கள் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டங்கள் உள்ளூரில் கிடைக்கும் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட கிராம ஊராட்சியின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நீரேற்றும் செலவுகளைக் குறைப்பதுடன், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை எளிமையாக்குகிறது.

ஜல் ஜீவன் இயக்கத்தின் (JJM) கீழ், ஒவ்வொரு ஊரக வீடுகளுக்கும் செயல்பாட்டு வீட்டு குடிநீர் இணைப்புகளை வழங்குவதற்காக ஒற்றைக் கிராமத் திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

போதுமான, பாதுகாப்பான மற்றும் நிலையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக நீரேற்று அமைப்புகள், சேமிப்பு வசதிகள் மற்றும் விநியோக அமைப்புகளை மேம்படுத்தும் அதே வேளையில், நிலத்தடி நீர் செறிவூட்டல், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு ஆகியவற்றின் மூலம் நீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்துவதில் இவ்வியக்கம் கவனம் செலுத்துகிறது. கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுக்கள் (VWSCs) மூலமாக குடிநீர் தரக் கண்காணிப்பு, சமூகப் பங்கேற்பு மற்றும் நிலையான இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஊரக குடிநீர் தேவைகளை நிறைவு செய்வதையும், ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் நீர்வளம் நிறைந்த கிராமம் என்ற இலக்கை நனவாக்குவதிலும் ஒற்றைக் கிராமத் திட்டங்கள் தொடர்ந்து முக்கியப் பங்காற்றுகின்றன.

**பல் கிராமங்களுக்கான திட்டம் – கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் :**

உள்ளூர் நீர் ஆதாரங்கள் போதுமானதாக இல்லாத அல்லது நிலத்தடி நீர் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகளில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் (TWAD Board) செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தகைய திட்டங்களின் கீழ், ஊரக மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு கிராம ஊராட்சிகளுக்கு மொத்தமாக குடிநீர் வழங்கப்படுகிறது.

கிராம ஊராட்சிகளுக்குள் பராமரிக்கப்படும் முக்கிய நீர் சேமிப்பு மற்றும் விநியோக உட்கட்டமைப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சிறிய தொட்டிகள் ஆகியவை அடங்கும்.

இவை வீடுகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான குடிநீர் சேமிப்பு மற்றும் விநியோகத்தை எளிதாக்கும்.

### 5.2.2. குடிநீர் விநியோக உட்கட்டமைப்பில் உள்ள இடைவெளி

கிராம ஊராட்சிகளில், செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோக உட்கட்டமைப்புகள் குறிப்பாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (OHTs) அமைத்தல் ஆகிய பணிகளின் தேவை நீடிக்கிறது. விரைவான மக்கள் தொகை பெருக்கம், குடியிருப்புகளின் விரிவாக்கம், ஊரகப் பகுதிகளின் நகரமயமாக்கல், சரிந்து வரும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் மற்றும் பழமையான குடிநீர் விநியோக உட்கட்டமைப்பு ஆகியவை தேவைக்கும் கிடைக்கக்கூடிய சேவை நிலைகளுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அதிகரித்துள்ளன.

இதன் விளைவாக, பல ஊரக வீடுகள், இன்னமும் பொதுக் குழாய்கள், கைபம்புகள், ஆழ்துளைக்கிணறுகள் மற்றும் பிற பாரம்பரிய நீர் ஆதாரங்களைச் சார்ந்தே வாழ்கின்ற நிலை உள்ளது. இதனால் பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறுவதில் சமத்துவமின்மை ஏற்படுவதோடு, குடிநீர் சேகரிப்பதற்காக பெண்களும் குழந்தைகளும் கூடுதல் சுமையை சுமக்க நேரிடுகிறது.

**5.2.3. குடிநீர் விநியோக உட்கட்டமைப்புகளை வழங்குவதற்கான முன்முயற்சி:**

மின்னணு கருவிகள், புவியியல் தகவமைப்பு (GIS) சார்ந்த சொத்து வரைபடம் மற்றும் தொலைநிலைச் செயல்பாட்டுக் கண்காணிப்பு ஆகியவற்றின் ஆதரவுடன்; நீர் ஆதாரங்களை வலுப்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், ஆற்றல் திறன்மிக்க நீரேற்றம், விநியோக அமைப்பின் கண்காணிப்பு

மற்றும் அறிவியல் பூர்வமான இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் மூலம் நிலையான நீர்வள மேலாண்மையை TN–வெற்றி திட்டத்தின் குடிநீர் வழங்கல் துணை இயக்கத்தினை ஊக்குவிக்கும். இந்த விரிவான திட்டம் ஊரக குடிநீர் பாதுகாப்பை மேம்படுத்துதல், பொது சுகாதாரத்தை உயர்த்துதல், குடிநீர் சேகரிக்கச் செலவிடும் நேரத்தைக் குறைத்தல் மற்றும் குடிநீர் விநியோக அமைப்புகளின் பருவநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கான சமமான அணுகலையும், நிலையான ஊரக வளர்ச்சியையும் உறுதி செய்ய, அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்குதல், மற்றும் சேமிப்பு உட்கட்டமைப்பை விரிவாக்குதல் ஆகியவை அவசியமாகும். செயல்பாட்டு வீட்டுக் குடிநீர்

இணைப்புகளின் விரிவாக்கத்திற்கு ஏதுவாக நீர் சேமிப்பு மற்றும் விநியோக உட்கட்டமைப்புகள் அதற்கேற்ப அதிகரிக்கப்பட வேண்டும். அதன்படி, இத்திட்டம் மாநிலம் முழுவதும் படிப்படியாக முழுமை அடையும் வகையில், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்ட முன்மொழிகிறது.

TN–வெற்றி திட்டத்தின் குடிநீர் வழங்கல் துணைத் திட்டமானது, மத்திய அரசின் ஜல் ஜீவன் இயக்கத் திட்டத்தில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் ஒருங்கிணைக்கப்படும்.

**5.3. துணை இயக்கம் 2 .சுகாதாரம்:**

TN–VETRI திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் "சுகாதாரம்" துணை இயக்கம் (Sub–Mission), உள்ளூர்மயமாக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் (Localized Sustainable Development Goals) மற்றும் உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகள் (Universal

Sustainable Development Goals) ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இலக்கு சார்ந்த நடவடிக்கைகள் வாயிலாக கிராமப்புர மாற்றத்தை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அடிப்படை சுகாதார வசதிகள் (Basic Sanitation) சமூகக் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதாரத்தை உறுதி செய்வதன் மூலம் மகளிர் நேய கிராமம், குழந்தை நேய கிராமம், சமூகப் பாதுகாப்பு மிக்க கிராமம் மற்றும் ஆரோக்கியமான கிராமம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றன. இம்முயற்சிகள் நிலையான வளர்ச்சி இலக்கு – 6 (தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்), இலக்கு – 3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு), இலக்கு – 5 (பாலின சமத்துவம்) ஆகிய இலக்குகளை அடைவதற்கு நேரடியாகப் பங்களிக்கின்றன. திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) உள்ளூர் வாழ்வாதாரத்தை

மேம்படுத்துவதோடு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி தூய்மையான மற்றும் பசுமையான கிராமம், வறுமையற்ற கிராமம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கின்றது. மேலும், வளங்களை மறுசுழற்சி செய்து பயனுள்ள முறையில் மீட்டெடுக்கும் சுற்றுச்சுழல் வள மேலாண்மை (Circular Resource Recovery) அணுகுமுறையின் மூலம் நிலையான வளர்ச்சி இலக்கு – 11 (நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்), இலக்கு – 12 (பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வு), இலக்கு – 13 (காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கை) ஆகியவற்றின் செயலாக்கத்தை வலுப்படுத்துகிறது. திரவக்கழிவு மேலாண்மை (Liquid Waste Management) இயற்கை நீர்நிலைகளைப் பாதுகாத்து, நீர்வளம் நிறைந்த கிராமம் மற்றும் சிறந்த உள்ளாட்சி நிர்வாகம்

ஆகியவற்றை நிலை நிறுத்துவதற்கு வழிவகுக்கிறது. இதன் மூலம் நிலையான வளர்ச்சி இலக்கு – 14 (நீருக்கு அடியிலான உயிரினங்கள் பாதுகாப்பு) அடைவதற்கான அடிப்படை உறுதி செய்யப்படுகிறது.

சுகாதார வசதிகள், தூய்மையான குடிநீர் மற்றும் அறிவியல் அடிப்படையிலான கழிவு மேலாண்மை தொடர்பான உட்கட்டமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துவதன் மூலம், இத்துணை இயக்கம் கிராமப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், ஆரோக்கியமான, நிலைத்தன்மை மிக்க மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட சமூகங்களை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை ஏற்படுத்துகிறது. இக்கூறுகள் அனைத்தும் "வெற்றித் தமிழகம்" உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படைக் கூறுகளாக அமைகின்றன.

### 5.3. 1. சுகாதார உட்கட்டமைப்பு

தனிநபர் இல்லக் கழிப்பறைகள், சமுதாய சுகாதார வளாகங்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதிகள், மற்றும் பிற பொது பயன்பாட்டு சுகாதார உட்கட்டமைப்புகள் உள்ளிட்ட வசதிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. எனினும், கிராமப்புரங்களில் இவ்வசதிகளில் இன்னும் இடைவெளிகள் (Infrastructure Gaps) நிலவுகின்றன. முன்னதாக எய்தப்பட்ட திறந்தவெளி மலம் கழித்தலற்ற (Open Defecation Free – ODF) நிலையைத் தொடர்ந்து நிலைநிறுத்தவும், எஞ்சியுள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5.3.2. திடக்கழிவு மேலாண்மை :**

கிராமப்புர திடக்கழிவு மேலாண்மை என்பது, கிராமங்களில் உருவாகும் மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை முறையாக சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சமையலறைக் கழிவுகள் மற்றும் வேளாண் கழிவுகள் போன்ற மக்கும் கழிவுகளும், நெகிழி, கண்ணாடி மற்றும் உலோகப் பொருட்கள் போன்ற மக்காத கழிவுகளும் இதன் கீழ் அடங்கும். வீடுகளிலேயே கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. மக்கும் கழிவுகள் உரக்குழிகள் மற்றும் மண்புழு உரமாக்கல் (Vermicomposting) போன்ற முறைகள் மூலம் இயற்கை உரம் அல்லது உயிரிவாயுவாக (Biogas) மாற்றப்படுகின்றன. மக்காத கழிவுகள் கிராம அளவிலான, கழிவு தரம் பிரிப்பு மையங்களில் (Segregation Sheds) சேகரிக்கப்பட்டு, தரம்

பிரிக்கப்பட்ட பின்னர் மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன. செயல்திறன்மிக்க கிராமப்புர திடக்கழிவு மேலாண்மையின் மூலம் கிராமங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்படுவதுடன், நோய்கள் பரவுதல் தடுக்கப்படுகிறது, மண் மற்றும் நீர் மாசுபடுதல் குறைக்கப்படுகிறது, மேலும் இயற்கை உரம் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களின் விற்பனை மூலம் வருவாய் ஈட்டும் வாய்ப்பும் உருவாகிறது.

**அட்டவணை – 5**

**கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு**

| வ. எண் | உட்கட்டமைப்பு / வளம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்கள் | 93,531 |
| 2 | கழிவு தரம் பிரிப்பு மற்றும் சேமிப்பு கூடங்கள் | 12,723 |
| 3 | சமுதாய உரக்குழிகள் | 13,277 |
| 4 | தெரு குப்பைத் தொட்டிகள் | 98,553 |
| 5 | முச்சக்கர வண்டிகள் / தள்ளுவண்டிகள் | 34,613 |
| 6 | மின் கல வாகனங்கள் | 18,563 |

| வ. எண் | உட்கட்டமைப்பு / வளம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | குப்பைகள் சேகரிப்பு வாகனங்கள் | 1,587 |
| 8 | நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையங்கள் (MCC) | 287 |
| 9 | நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் | 402 |
| 10 | கோபர்தன் அமைப்புகள் | 170 |

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026–ன் படி, தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அறிவியல் பூர்வமான கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, வள மீட்பு மற்றும் சுழற்சிப் பொருளாதார கொள்கைகளை ஊக்குவிக்கும் வகையில் விரிவான ஒழுங்குமுறை கட்டமைப்பை வழங்குகின்றன. இவ்விதிகளின் முக்கிய அம்சங்கள் – நான்கு வகை கழிவு தரம் பிரிப்பு, விரிவாக்கப்பட்ட மொத்த கழிவு உருவாக்குநர் பொறுப்பு, குப்பைக் கொட்டும் இடங்களில் தேங்கியுள்ள கழிவுகளை அறிவியல்

முறையில் சீரமைத்தல் மற்றும் நிறுவன ரீதியான உட்கட்டமைப்பு அமைத்தல். இவ்விதிகள் 01.04.2026 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**5.3.3. திரவக்கழிவு மேலாண்மை :**

கிராமப்புரங்களில் திரவக் கழிவு மேலாண்மை என்பது சமையலறைகள், குளியலறைகள் மற்றும் துணி துவைக்கும் பகுதிகளில் இருந்து வெளியேறும் சாம்பல் நீர் மற்றும் கழிப்பறைகளில் இருந்து வெளியேறும் கருப்பு நீர் ஆகியவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றுதல் மற்றும் சுத்திகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சாலைகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் சாம்பல் நீர் தேங்குவதைத் தடுப்பதற்கும், சாம்பல் நீரை திறம்பட கையாளுவதை உறுதி செய்வதற்கும், மாநில அரசு மற்றும் மத்திய அரசு நிதி ஆதாரங்கள் மூலம் மற்றும் தூய்மை பாரத

இயக்கம் (ஊரகம்) திட்டங்களின் கீழ் 1,02,012 சமுதாய உறிஞ்சுக் குழிகள் மற்றும் 17,594 கிடைமட்ட / செங்குத்து வடிகட்டிகள், வேர் வழி வடிகட்டிகள் (Rootzone), டிவாட்ஸ் (DEWATS), அமைக்கப்பட்ட ஈரநிலங்கள், பைடோரிட் தொழில்நுட்பம் (Phytorid) போன்ற திரவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புர உள்ளாட்சிகளில் ஏற்கனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு (FSTP) வசதிகளில் கிராமப்புரங்களின் மலக்கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளும் நகர்ப்புர பகுதிகளிலுள்ள உட்கட்டமைப்பு வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. 10,492 கிராம ஊராட்சிகள் தொகுப்புகளாக்கப்பட்டு 4 கட்டங்களாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்களுடன்

செலவினைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் இணைக்கப்பட்டு வருகிறது.

இலக்கு அடிப்படையிலான செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் குடியிருப்பு வாரியான தேவைகளை மதிப்பீடு செய்யும் வகையில் விரிவான கிராம சுகாதார இடைவெளி பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டும். இந்த இடைவெளி பகுப்பாய்வு, குடியிருப்பு கணக்கெடுப்பு விவரங்கள், சொத்து மேலாண்மை தரவுத்தளம் மற்றும் ஊராட்சி பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு, கூட்டு கள ஆய்வுகள் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்.

TN–VETRI திட்டத்தின் கீழான சுகாதார முன்மொழிவு, மத்திய அரசின் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களுடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 5.3.4.தூய்மைத் தமிழ்நாடு நிறுவனம் லிமிடெட் (CTCL) :

கிராமப்புரங்களில் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தின் காரணமாக உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மக்காத திடக்கழிவுகளை, திறம்பட மேலாண்மை செய்வது மிகவும் அவசியமாகும். இத்தகைய கழிவுகளை முறையற்ற முறையில் அகற்றுவது சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரத்திற்கு தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

மக்காத கழிவுகளின் மதிப்புச் சங்கிலி மேலாண்மையில், குறிப்பாக இரண்டாம் நிலை தரம் பிரித்தல், போக்குவரத்து, தளவாட மேலாண்மை மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றில் காணப்பட்ட முக்கியமான இடைவெளிகள் காரணமாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கும் வருவாய்

பாதிப்படைகிறது. இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், தூய்மை கேரளம் நிறுவனம் லிமிடெட் நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாட்டை முன்மாதிரியாகக் கொண்டு, நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், ஒரு சிறப்பான நோக்கமுடைய நிறுவனம் ஆக தூய்மை தமிழ்நாடு நிறுவனம் லிமிடெட்டை நிறுவ முன்மொழியப்பட்டது. இந்நிறுவனம், மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் இணை செயலாக்கத்திற்கு உகந்த கழிவுகளை ஒருங்கிணைத்தல், தளவாட மேலாண்மை, விலை நிர்ணயம் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான மையப்படுத்தப்பட்ட அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். இதன் மூலம், மறுசுழற்சி நிறுவனங்களுடன் நல்லுறவு பேணப்படுவதுடன், நியாயமான விலை கிடைப்பது உறுதி செய்யப்படும். மேலும், உள்ளாட்சி

அமைப்புகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்பட்டு, கிராமப்புர மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நிலையான திடக்கழிவு மேலாண்மை நடைமுறைகள் வலுப்படுத்தப்படும்.

**5.4. துணை இயக்கம் – 3. ஊரக இணைப்பு**

**5.4.1. ஊரகச் சாலைகள்– தேவை மற்றும் அவசியம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, அரசின் கொள்கைகளை உறுதியான முன்முயற்சிகள், நலத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களாக மாற்றியமைக்கும் ஒரு நிர்வாக செயல் வடிவமாக "வெற்றித் தமிழகம் – தொலைநோக்கு ஆவணம்" கொண்டுள்ளது. ஊரக சாலைகளைப் பொறுத்தவரை, இரண்டு முக்கிய உறுதிமொழிகளை வகுத்துள்ளது. **"சேதமற்ற சாலைகள்"–** சாலைப் பராமரிப்பு, குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு

ஏற்படும் விபத்துகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, சாலைப் பழுதுகளை உடனடியாகச் சரிசெய்ய நிதி ஒதுக்கப்படும். **"அனைத்து ஊராட்சிகளையும் இணைக்கும் சாலைகள்" –** அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் அனைத்து ஊராட்சிகளும் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப்படுவதுடன் பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அனைத்து முக்கிய பொது வசதிகளை இணைக்கும் சாலைகள் மேம்படுத்தப்படும்.

கிராமப்புர குடும்பங்களைப் பொறுத்தவரை. குழந்தைகளைப் பள்ளிக்கும், நோயாளிகளை மருத்துவச் சிகிச்சைக்கும், விளைபொருட்களைச் சந்தைக்கும், தொழிலாளர்களை அவர்களின் வாழ்வாதார இடங்களுக்கும் சென்றடைய சாலைகள் முதன்மையான பொதுச் சேவையாக விளங்குவதை கருத்தில்கொண்டு இக்கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஊரக

பொருளாதாரம், உற்பத்தித்திறன், மீள்திறன் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஊரக சாலை போக்குவரத்து அடிப்படையாக அமைகிறது. மேம்படுத்தப்பட்ட சாலைகள் சமூகத்தை கல்வி, சுகாதாரம், சந்தைகள், குடிநீர், ஆற்றல் மற்றும் நலத்திட்ட சேவைகளை இணைப்பதுடன் நிலையான வளர்ச்சிக்கான இலக்கு (SDGs) 2030–ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு, பசிப்பிணி நீக்குதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவை முன்னெடுக்கப்படுகின்றன.

ஊரக சாலைகள் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளுக்கு (SDGs) நேரடியாகப் பங்களிக்கின்றன: ஊரக சாலைகள் வறுமையைக் குறைப்பவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து மற்றும் உள்ளீட்டுச் செலவுகளைக் குறைத்து, சந்தைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகலை

விரிவுபடுத்துகின்றன (SDG 1 – வறுமை ஒழிப்பு); விவசாய இடுபொருட்கள் மற்றும் விளைபொருட்களின் போக்குவரத்தை சாத்தியமாக்கி, விலைகளை கட்டுப் படுத்துகின்றன; மேலும் கூடுதல் ஊட்டச்சத்துத் திட்டம், மதிய உணவுத் திட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின் சேவையை வலுப்படுத்துகின்றன (SDG 2 – பசியின்மை); ஆரம்ப மற்றும் சிறப்பு மருத்துவச் சேவைகளை விரைவாகப் பெற வழிவகுத்து, தாய்மார்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன (SDG 3 – நலவாழ்வு மற்றும் சுகாதாரம்); கல்வி மற்றும் கிராம–நகர இடையிலான தொடர்பை மேம்படுத்துகின்றன (SDG 4 – தரமான கல்வி); குறைக்கப்பட்ட போக்குவரத்துச் செலவுகள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் சிறந்த விலை ஆகியவற்றின் மூலம் ஊரக குடும்பங்களின் சமூக–பொருளாதார நிலையை

உயர்த்துகின்றன. (SDG 8 – கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி) மற்றும் பசுமை கட்டுமானத் தொழில்நுட்பங்கள் மூலம், வழக்கமான கட்டுமானப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, கார்பன் தடத்தைக் குறைக்கின்றன (SDG 13 – பருவநிலை நடவடிக்கை).

### 5.4.2. ஊரகச் சாலைத் தொகுப்பு

நாட்டிலேயே மிக பரந்த ஊரகச் சாலைத் தொகுப்பினை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை உள்ளடக்கிய 1,39,690 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைத் தொகுப்பினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பராமரித்து வருகிறது. தேசிய அளவிலான சராசரி 100 சதுர கி.மீ–க்கு 117 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலை அடர்த்தியை விட, தமிழ்நாடு 146 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலை அடர்த்தியினை

கொண்டுள்ளது. கிராமப்புர குடியிருப்புகளின் வளர்ச்சியினை பிரதிபலிக்கும் வகையில், 2010-ஆம் ஆண்டு முதல் ஊரகச் சாலைத் தொகுப்பு சுமார் 48 சதவீதம் விரிவடைந்துள்ளது.

**அட்டவணை-6**

**ஊரகச் சாலைத் தொகுப்பு 01.04.2026-ன் படி விவரம்**

| வ. எண். | சாலையின் மேற்பரப்பின் வகை | கிராம ஊராட்சி சாலைகள் (கி.மீ) | ஊராட்சி ஒன்றிய சாலைகள் (கி.மீ) | மொத்தம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 1 | தார்ச்சாலை | 74,073 | 22,083 | 96,156 |
| 2 | சிமெண்ட்சாலை | 3,357 | 384 | 3,741 |
| 3 | ஈரடுக்குகப்பிச்சாலை | 1,472 | 74 | 1,546 |
| 4 | ஓரடுக்குகப்பிச்சாலை | 10,031 | 312 | 10,343 |
| 5 | சரளைக்கல்சாலை | 2,565 | 65 | 2,630 |
| 6 | மண்சாலை | 24,521 | 753 | 25,274 |
| | **மொத்தம்** | **1,16,019** | **23,671** | **1,39,690** |

மொத்த சாலை தொகுப்பில், சுமார் 99,897 கி.மீ (72%) தார்ச் சாலைகளாகவும், சுமார் 39,793 கி.மீ (28%) தார் இடப்படாத சாலைகளாகவும் உள்ளன. சுமார் 12,000 கி.மீ நீளமுள்ள பேருந்து

செல்லும் சாலைகள் ஊரகப் பகுதிகளில் போக்குவரத்திற்கு முதுகெலும்பாக விளங்குகிறது. கடந்த பத்தாண்டுகளில், நபார்டு (NABARD), பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) மற்றும் மாநில நிதியின் கீழ், 77,822 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் ரூ.23,834 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ரூ.2,809 கோடி மதிப்பீட்டில் 1,008 உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் குடியிருப்புகளுக்கான இணைப்பு சாலை வசதி பெருமளவில் எட்டப்பட்டுள்ளது.

ஊரக சாலைப் பணிகளின் தரம், ஒரு பிரத்யேகத் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு, தேசிய மற்றும் மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள், பட்டியலிடப்பட்ட பொறியியல் நிறுவனங்கள், மற்றும் மாநில, மாவட்ட மற்றும் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இணையவழிச் சாலைப்

பதிவேடு மற்றும் முழு வலையமைப்பின் புதுப்பிக்கப்பட்ட இடஞ்சார்ந்த தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, புவியியல் தகவல் அமைப்பு (GIS) சார்ந்த திட்டமிடல் மற்றும் மின்னணு கண்காணிப்பு அமைப்புகள் ஆகியவை முதலீடுகள் மற்றும் சொத்து மேலாண்மைக்கு, அறிவியல் பூர்வமான முன்னுரிமைப் படுத்துதலுக்கு துணைபுரிகின்றன.

**5.4.3. சவால்கள்**

சாலைத் தொகுப்பின் வளர்ச்சி மற்றும் இணைப்புச் சாலை வசதி பெருமளவில் விரிவடைந்து இருப்பினும், இத்தொகுப்பில் உள்ள குறிப்பிடத்தக்க சாலைகள் வடிவமைப்பு காலம் முடிவுற்றவைகளாக உள்ளன. சுமார் 22,815 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலைகள் 10 ஆண்டுகளுக்கு மேலானவை மற்றும் 41,432 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலைகள் 6 முதல் 10 ஆண்டுகளுக்கு உட்பட்டவை ஆகும். சாலைத் தொகுப்பில் சுமார்

28 சதவீதப் பகுதிகள் இன்னும் தார் இடப்படாத சாலைகளாக உள்ளன. அதிகரித்து வரும் சாலைகளின் வயது, அதிகரித்து வரும் போக்குவரத்து மற்றும் வளர்ந்து வரும் சேவைகளின் தேவை ஆகியவற்றின் காரணமாகப் பராமரிப்பு, புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள தொடர்ச்சியாக முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்ளவே அரசு கிராமப்புர சாலைகளுக்கான தொலைநோக்குப் பார்வையை வகுத்துள்ளது.

**5.4.4. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து, ஊரகச் சாலைப் பராமரிப்பு மற்றும் உட்கட்டமைப்பிற்கான தொலைநோக்குப் பார்வை (VETRI)**

அரசின் 'வெற்றித் தமிழகம்' தொலைநோக்குப் பார்வை, ஊரகச் சாலைப் பராமரிப்பின் மூலம் சேதமற்ற சாலைகள் மற்றும்

முன்னுரிமை அடிப்படையில் வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மூலம் அனைத்து ஊராட்சிகளையும் இணைக்கும் சாலைகள் ஆகிய இரண்டு கொள்கைகளை வகுத்துள்ளது. சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதன் மூலம் இக்கொள்கைகளை வெற்றித் தமிழகம் உறுதிபடுத்தும். 'பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்' (PMGSY) மாநிலத்தின் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

**சேதமற்ற சாலைகள் –** ஊரக சாலைகளை முறையாகப் பராமரிப்பதையும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பொது முதலீடுகளைப் பாதுகாப்பதையும் உறுதிசெய்யும் வகையில், சொத்து மேலாண்மை கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். அதிகளவு தொடர் பராமரிப்பு மேற்கொள்ளுதல், புதுப்பித்தல் பணிகளிலுள்ள நிலுவையை குறைத்தல், ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு அம்சங்கள், தொழில்நுட்பத்தை

பயன்படுத்தி சாலைகளை கண்காணித்தல், 2026–27 முதல் மேற்கொள்ளப்படும் அனைத்து சாலை பணிகளிலும் ஐந்தாண்டு தொடர் பராமரிப்பை கட்டாயமாக்குதல் ஆகிய முக்கிய முன்முயற்சிகளை உள்ளடக்கியது.

**அனைத்து ஊராட்சிகளையும் இணைக்கும் சாலைகள்–** அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற கிராம ஊராட்சிகளை இணைக்கும் வகையில் சுமார் 12,000 கி.மீ. நீளமுடைய பேருந்து செல்லும் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் ஊராட்சி தலைமையகங்களை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வடிவமைப்பு காலம்** முடிவுற்ற **சாலைகளை வலுப்படுத்துதல்–** சாலைகளின் நிலை, பயன்பாடு மற்றும் சமூக–பொருளாதார முக்கியத்துவம் ஆகியவற்றை முன்னுரிமை படுத்தி அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் சுமார் 6,000 கி.மீ.

நீளமுள்ள சாலைகள் வலுப்படுத்தப்படும். இச்சாலைகளில், 15 மீட்டர் வரை நீர்வழிப் பாதையைக் கொண்ட குறுக்கு வடிகால் கட்டமைப்புகள், அடையாளப் பலகைகள், சாலைக் குறியீடுகள், பள்ளிகள், குடியிருப்புகள் மற்றும் சந்திப்புகளில் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் அமைப்புகள், மற்றும் ஆபத்தான இடங்களில் தடுப்பு பணிகள் ஆகிய சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்து சாலைப் பணிகளிலும் அமைக்கப்படும்.

2031 ஆம் ஆண்டிற்கான தொலைநோக்கு பார்வை, தமிழ்நாட்டின் ஊரகச் சாலைத் தொகுப்பு பாதுகாப்பானதாகவும், நம்பகமானதாகவும் மற்றும் ஊரக மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வதாகும். சொத்துகள் பாதுகாப்பு, வாய்ப்புகளைப் பெறுவதற்கான வசதி ஆகியவற்றை மேம்படுத்தி அனைத்து பருவ

காலங்களுக்கும் ஏற்ற இணைப்புச் சாலை வசதி உறுதி செய்யப்படுகிறது. வெற்றித் தமிழகத்தின் கீழ் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்னெடுக்கும் வகையில், 2026–27 ஆம் ஆண்டில், மேற்குறிப்பிட்ட முன்னுரிமைகளின்படி ஊரக சாலைகளை மேம்படுத்தும் பணிகளை அரசு மேற்கொள்ளும்.

**5.5. துணை இயக்கம் 4: சமூகச் சொத்துகள்**

கிராமப்புரங்களில் சேவை வழங்கல், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், பொழுதுபோக்கு மற்றும் சமூக நலனை மேம்படுத்துவதற்காக அத்தியாவசியமான பொது உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துவதே இத்துணை இயக்கத்தின் நோக்கமாகும். தேவைகள் மற்றும் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில், கீழ்க்கண்ட சொத்துகளின் கட்டுமானம், மறுகட்டுமானம், புனரமைப்பு மற்றும்

மேம்படுத்தல் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- **ஊராட்சி உட்கட்டமைப்பு:** கிராம ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் பிற பொதுப் பயன்பாட்டு கட்டிடங்களின் கட்டுமானம், மறுகட்டுமானம், பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- **தெரு விளக்குகள்:** தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 110–இன் கீழ் தெரு விளக்கு வசதி வழங்குவது ஒரு கட்டாய சேவையாகும். இது பொதுப் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கிராம ஊராட்சிகளின் சொந்த வருவாயில் ஏறத்தாழ 35 சதவீதம், தெரு விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்திற்காக செலவிடப்படுகிறது. மின்சாரச் செலவைக் குறைக்கும் நோக்கில், கிராம ஊராட்சிகளில் மின்சாரச் சிக்கன LED

விளக்குகள் மற்றும் சூரிய ஆற்றல் அடிப்படையிலான தெரு விளக்குகள் பயன்படுத்தப்படுவது ஊக்குவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் மொத்தம் 34.12 இலட்சம் தெரு விளக்குகள் உள்ளன. அவற்றில்: 31.36 இலட்சம் LED விளக்குகள், 1.43 இலட்சம் CFL விளக்குகள், 0.84 இலட்சம் குழல் விளக்குகள் (Tube Lights), 0.20 இலட்சம் சூரிய ஆற்றல் விளக்குகள், 0.08 இலட்சம் சோடியம் ஆவி விளக்குகள், 0.21 இலட்சம் உயர்கோபுர விளக்குகள் (High Mast Lights) உள்ளன. TN–VETRI திட்டத்தின் கீழ், இதுவரை போதிய தெரு விளக்கு வசதி இல்லாத மற்றும் குறைவாக உள்ள பகுதிகளில் LED மற்றும் சூரிய ஆற்றல் தெரு விளக்கு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- **கல்வி மற்றும் குழந்தை வளர்ச்சி**: மாணவர் சேர்க்கை விதிமுறைகளின் அடிப்படையில்

அரசு பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் கட்டட வசதிகள் இல்லாத அல்லது பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி மையங்களை மேம்படுத்துதல்.

- **சுகாதார வசதிகள்**: தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் அரசு கிராமப்புர சுகாதார நிறுவனங்களை மேம்படுத்துதல்.
- **கிராமப்புர நூலகங்கள்:** மின்னணு உட்கட்டமைப்பு, புத்தகங்கள், தளவாடங்கள், இணைய வசதி, வைஃபை மற்றும் பணியிட வசதிகளுடன் கூடிய நவீன நூலகங்களை உருவாக்கி, அவற்றை கிராமப்புர அறிவு மையங்களாக செயல்படச் செய்தல்.
- **பொதுச் சேவை உட்கட்டமைப்பு:** பொது விநியோகக் கடைகள், சமுதாயக் கூடங்கள், பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில்

பல்நோக்கு தங்குமிடங்கள் மற்றும் பொதுச் சதுக்கங்கள் ஆகியவற்றின் கட்டுமானம்.

- **விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்:** விளையாட்டு மைதானங்கள், சிறு விளையாட்டு அரங்கங்கள், பூங்காக்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதிகள், திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு வசதிகளை உருவாக்குதல்.
- **வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு:** கிராமப்புர வாழ்வாதாரத்தையும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் வகையில், கிராம சந்தைகள், வாரச் சந்தைகள், மீன் சந்தைகள், மீன் உலர்த்தும் களங்கள், வேளாண் சேமிப்பு கிடங்குகள், கதிரடிக்கும் களங்கள் மற்றும் சுயஉதவிக் குழு கட்டிடங்களை மேம்படுத்துதல். இந்த துணை இயக்கத்தின் நோக்கம், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும், பொதுச் சேவை வழங்கலை

வலுப்படுத்தும் மற்றும் கிராமப்புர பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், அனைவரையும் உள்ளடக்கிய, மீள்திறன் கொண்ட மற்றும் நிலையான சமூகச் சொத்துகளை உருவாக்குவதாகும்.

### 5.6. துணை இயக்கம் 5: மலைப்பகுதிகள்

மலைப்பகுதி துணை இயக்கமானது, செங்குத்தான நில அமைப்பு, பரவலான குடியிருப்புகள், அதிக மழைப்பொழிவு, நிலச்சரிவுகள் மற்றும் குறைந்த அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட மலைப்பகுதி கிராம ஊராட்சிகள் எதிர்கொள்ளும் தனித்துவமான வளர்ச்சி சவால்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. TN–வெற்றி திட்டத்தின் பிற துணை இயக்கங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுடன் கூடுதலாக, இத்துணை இயக்கத்தின் மூலம் நில அமைப்புக்கு ஏற்ற சிறப்பு உட்கட்டமைப்பு

வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டு, இணைப்பு வசதிகள், பாதுகாப்பு, அணுகல் வசதி மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும்.

திட்டமிடல் செயல்முறையின் போது, நிலச்சரிவு மற்றும் மண் அரிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், சாலை இணைப்பு வசதிகள் இல்லாத தொலைதூரக் குடியிருப்புகள், குடிநீர் வழங்கல் குறைபாடுகள், போதிய தெருவிளக்கு மற்றும் மின்சார வசதிகள் இல்லாமை, அத்தியாவசிய சேவைகள் மற்றும் அவசரகால தகவல் தொடர்பு வசதிகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற அம்சங்கள் கண்டறியப்படும். மேலும், அனைத்து வளர்ச்சிப் பணிகளும் வன நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்படும்.

**மலைப்பகுதிகளுக்கான சிறப்பு செயல்திட்டங்**கள்:

இத்துணை இயக்கத்தின் கீழ், நிலச்சரிவு தடுப்பு பணிகள், மலைப்பகுதிகளுக்கேற்ற

சாலைகள் மற்றும் நடைபாதைகள், சமுதாய கிணறுகள், பாதுகாக்கப்பட்ட நீரூற்றுகள் மற்றும் புவியீர்ப்பு விசை அடிப்படையிலான குடிநீர் வழங்கல் அமைப்புகள், சூரிய சக்தியில் இயங்கும் ஒளி உமிழ் தெருவிளக்குகள், நில அமைப்புக்கு ஏற்ற பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள், நடமாடும் பொது விநியோகக் கடைகள், அவசரகால தகவல் தொடர்பு வசதிகள், அத்தியாவசிய பொருட்கள் வழங்கல் மற்றும் அவசரகால நடவடிக்கைகளுக்கான ட்ரோன் அடிப்படையிலான சேவைகள் மற்றும் கிராம சபை மற்றும் மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்படும் தேவைக்கேற்ப உள்ளூர் தீர்வுகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், சிறந்த இணைப்புச் சாலை வசதிகள், நம்பகமான பொதுச் சேவைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பேரிடர் தயார்நிலை

ஆகியவற்றின் மூலம், மலைப்பகுதி கிராம ஊராட்சிகளில் பாதுகாப்பான, மீள்திறன் கொண்ட, காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைந்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதே இத்துணை இயக்கத்தின் நோக்கமாகும்.

**5.7. துணை இயக்கம் 6: நகர்ப்புரத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள்**

நகர்ப்புரத்தையொட்டிய கிராம ஊராட்சிகள், என்பது நகர்புரத்திற்கு அருகில் உள்ள ஊராட்சிகள், அதிக சொந்த வருவாய் கொண்ட ஊராட்சிகள் மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளை உள்ளடக்கியதாகும். இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த ஊராட்சிகள், கிராமப்புரத் தன்மையிலிருந்து நகர்ப்புரத் தன்மைக்கு மாறிவரும் நிலையில் உள்ளதால், மாற்றத்திற்குத் தேவையான நகர்ப்புரத் தரத்திலான வசதிகளை வழங்குவதற்காக

இப்பிரிவின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிற துணை இயக்கத்தின் கீழ் அனுமதிக்கப்படும் பணிகளோடு இத்துணை இயக்கத்திற்கு கூடுதலாக பணிகள் அனுமதிக்கப்படும். அவை தொடர்ந்து இவ்வகை ஊராட்சிகளுக்கும் பொருந்தும். தேவைகளை கண்டறிதல், தகுதி நிபந்தனைகள் மற்றும் முன்னுரிமை விதிமுறைகள் உள்ளிட்ட பிற துணை இயக்கங்களின் விதிமுறைகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களுக்கு உட்பட்டு, இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய பணிகளுக்கும் பொருந்தும்.

**தேவை கண்டறிதல்**

திட்டமிடல் செயல்முறையின் போது, மக்கள் தொகை வளர்ச்சி, கட்டமைக்கப்பட்ட பரப்பளவு, தினசரி வந்து செல்லும் மக்கள் தொகை, குடியிருப்பு அடர்த்தி, திடக்கழிவு மற்றும்

திரவக் கழிவு மேலாண்மையில் உள்ள குறைபாடுகள், திறந்தவெளி கழிவு கொட்டும் இடங்கள், போக்குவரத்து நெரிசல் ஏற்படும் பகுதிகள், நகர்ப்புரத்திற்கு நிகரான வசதிகள் மற்றும் பூங்காக்கள், எரிவாயு தகன மையங்கள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் போன்ற குழும அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகள் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும்.

**முக்கிய முன்னெடுப்புகள்**

இத்துணை இயக்கத்தின் கீழ், அழகுபடுத்தப்பட்ட பொது வெளிகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு வசதிகள், நவீன நூலகங்கள், அறிவியல் முறையிலான திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை அமைப்புகள், நீர்நிலைகள் மறுசீரமைப்பு, குழும அடிப்படையிலான எரிவாயு தகன மையங்கள், வாகன நிறுத்துமிட வசதிகள்,

பொது வைஃபை மையங்கள், கண்காணிப்பு கேமரா வசதிகள், சூரிய சக்தி தெருவிளக்குகள், சூரிய சக்தி பம்புகள், கட்டட மேற்கூரை சூரிய மின் தகடுகள், கிராம வனங்கள், ஊராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்கள் மற்றும் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு ஆதரவு வழங்கப்படும்.

பொதுப்பயன்பாட்டு வசதிகள், அதிகபட்ச பயனாளிகளை உள்ளடக்குவதற்கும், ஒரே மாதிரியான பணிகள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்கும், குழும அடிப்படையில் உருவாக்கப்படும். பூங்காக்கள் மற்றும் பொது வெளிகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஏற்பாடுகள் உறுதி செய்யப்படும். குறிப்பிட்ட சேவை வரம்பிற்குள் இதே போன்ற வசதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களில் மட்டுமே எரிவாயு தகன மையங்கள்

அமைக்கப்படும். வணிக வளாகங்கள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் ஆகியவை தேவையின் அடிப்படையில் மற்றும் கிராம சபையின் ஒப்புதலுடன் மட்டுமே உருவாக்கப்படும். சூரிய சக்தி மற்றும் மின்னணு உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறு, நிதி நிலைத்தன்மை மற்றும் நீண்டகால பராமரிப்பு உறுதி செய்யப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே வழங்கப்படும். கிராம வனங்கள், ஊராட்சிக்கு சொந்தமான பொருத்தமான நிலங்களில் உருவாக்கப்படும். மேலும், அனைத்து குழும வசதிகளும் அதிகபட்ச எண்ணிக்கையிலான மக்கள் மற்றும் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், மையப்பகுதிகளில் எளிதில் அணுகக்கூடிய இடங்களில் அமைக்கப்படும்.

**5.8. வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் சொத்துகள்**

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் 01.07.2026 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு (MGNREGS) மாற்றாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாயப் பணிகள் மூலம் ஊரக வளர்ச்சிக்கான கட்டமைப்பை வலுப்படுத்தி, ஒருங்கிணைப்பு மற்றும் முழுமையாக பூர்த்தியடைவதை (Saturation) உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும்.

**திட்டத்தின் நோக்கங்கள்**

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- இத்திட்டத்தின் கீழ், திறன்சாரா உடல் உழைப்புப் பணிகளை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு ஊரக குடும்பத்திற்கும் 125 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கி, அவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.
- விதைப்பு மற்றும் அறுவடை போன்ற வேளாண் உச்ச பருவ காலங்களில் விவசாயத்திற்கு போதுமான தொழிலாளர் கிடைப்பதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சிகளின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் மற்றும் முழுமையாக நிறைவு பெரும் வகையிலும் (Saturation), பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து முழுமையான திட்டமிடலை மேற்கொண்டு, அத்திட்டங்களை வட்டார, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் தொகுத்து செயல்படுத்துதல்.

- தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி திட்டமிடல், தணிக்கை மற்றும் முறைகேடுகள் தடுப்பை வலுப்படுத்தும் முழுமையான மின்னணு நிர்வாகத்தை உருவாக்குதல்; இதன்மூலம் நல் நிர்வாகத்தை நவீனமாக்கி, பொறுப்புணர்வை மேம்படுத்தி, குடிமக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துதல்.

**வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம் 100 நாட்களிலிருந்து 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.
- வேலை கோரிய பின்னர் வேலை வழங்கப்படாவிட்டால், சட்டப்பூர்வ உரிமையாக வேலையின்மை படி தானாக வழங்கப்படும்.

- தாமதமாக வழங்கப்படும் ஒவ்வொரு ஊதிய தொகைக்கும் இழப்பீடு, அந்தக் ஊதியத்துடன் சேர்த்து வழங்கப்படும். இதன் மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரித்து, தொழிலாளர்கள் தங்களது முழு உரிமை பயனை பெறுவது உறுதி செய்யப்படும்.
- கிராம ஊராட்சி, தனது சிறப்பம்சங்களை உள்ளடக்கிய, அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில், மக்களின் பங்கேற்புடன் கூடிய கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை (Village Panchayat Development Plan - **VPDP**) தயாரிக்கும். இந்தத் திட்டத்தில், நலிவடைந்த குடும்பங்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்படும். இதன் மூலம் அரசின் முதலீடுகளால் கிடைக்கும் நன்மைகள் சமூகத்தின் மிகவும் பின்தங்கிய மற்றும் போதிய சேவைகள் கிடைக்காத மக்களையும் சென்றடைவதை உறுதி செய்யும்.

- ஊரகப் பகுதிகளில் அரசின் அனைத்து துறைகளாலும் மேற்கொள்ளப்படும் பணிகளை ஒருங்கிணைத்து திட்டமிட்டு, செயல்படுத்த மற்றும் கண்காணிக்க ஒருங்கிணைந்த செயலாக்கக் கட்டமைப்பு (Unified Convergence Framework) உருவாக்கப்படும்.
- விதைப்பு மற்றும் அறுவடை போன்ற வேளாண் உச்ச பருவ காலங்களில் விவசாயத்திற்கு போதிய தொழிலாளர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, ஒரு நிதியாண்டில் மொத்தம் 60 நாட்கள் வரை இச்சட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படாத காலமாக அரசு அறிவிக்கும்.
- இத்திட்டமானது, மத்திய அரசு நிர்ணயிக்கும் அளவுகோல்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகை–A, வகை–B, வகை–C மற்றும் பிற வகைகளாக வகைப்படுத்துவதையும் முன்வைக்கிறது. இதன் மூலம் தேவையடிப்படையிலான திட்டமிடல் மற்றும்

வளங்களை திறம்பட ஒதுக்கீடு செய்வது எளிதாகிறது.

**நிதிப் பங்கீடு முறை**

இந்த புதிய திட்டத்தின் கீழ், ஊதியம், பொருட்கூறு மற்றும் நிர்வாகச் செலவீனங்களுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே **60:40** என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

**பணிகளின் வகைகள்**

மக்களின் அதிகாரமளித்தல், வளர்ச்சி, துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைவு மற்றும் அனைத்து தகுதியுடைய பயனாளர்களுக்கும் திட்டப் பயன்கள் முழுமையாகக் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கினை கருப்பொருளாக கொண்டு, இத்திட்டத்தின் கீழ் நீர்ப் பாதுகாப்பிற்கான நீர்சார் பணிகள், அடிப்படை ஊரக உட்கட்டமைப்புப் பணிகள், வாழ்வாதார மேம்பாட்டிற்கான

உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின் பாதிப்புகளைக் குறைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**I – நீர் பாதுகாப்பு**

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள குளங்கள் (Ponds), ஊரணிகள் (Ooranies) மற்றும் சிறுபாசன ஏரிகள் (Minor Irrigation Tanks) ஆகியவை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மிக முக்கியமான சமூகச் சொத்துகளாகும். இந்நீர்நிலைகள் பாசன வசதி, நிலத்தடி நீர் செறிவூட்டல், குடிநீர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, அவற்றின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு, ஊரக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.

மாநிலத்தில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பராமரிப்பின் கீழ் சுமார் 21,966 சிறுபாசன ஏரிகளும் (Minor Irrigation Tanks) 70,248 குளங்கள் மற்றும் ஊரணிகளும் உள்ளன.

பல்வேறு அரசுத் திட்டங்கள் மூலம் இந்நீர்நிலைகளும் அவற்றுடன் தொடர்புடைய நீர்வரத்து மற்றும் நீர்வெளியேற்று கால்வாய்களும் சீரமைக்கப்பட்டு புத்துயிர் பெறச் செய்யப்பட்டுள்ள போதிலும், இன்னும் ஏராளமான நீர்நிலைகள் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ், திறன்சாராத தொழிலாளர்களை ஈடுபடுத்தி, வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு, நீடித்த பயனளிக்கும் சமூகச் சொத்துகளை உருவாக்கும் வகையில் நீர் பாதுகாப்பு மற்றும் நீர்வள மேலாண்மைப் பணிகள்

மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம், உள்ளூர் நீரியல் (Hydrological) சூழ்நிலைகள் மற்றும் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்வதன் மூலம் நீர்ப் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளில் குளங்கள், பண்ணைக் குட்டைகள், மீன் வளர்ப்புக் குளங்கள், கசிவுநீர் குளங்கள் (Percolation Tanks), வெள்ளநீர் வடிகால்கள், தடுப்பணைகள் (Check Dams), நிலத்தடி தடுப்பணைகள் (Underground Dykes), கால்வாய்கள், பாசனக் கிணறுகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் (Recharge Structures), மழைநீர் சேகரிப்பு அமைப்புகள், சிறுபாசனக் கால்வாய்கள் (Micro–irrigation Channels), பள்ளத்தாக்கு தடுப்புகள் (Gully Plugs), மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்பிற்கான காடுவளர்ப்பு மற்றும்

மரக்கன்றுகள் நடுதல் ஆகியவை அடங்கும். இத்தகைய பணிகள் மூலம் நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், பாசன வசதி மேம்பாடு, மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்பு மற்றும் ஊரகப் பகுதிகளில் நீர்வளங்களின் நிலையான மேலாண்மை ஆகியவை உறுதிசெய்யப்படுகின்றன.

மேலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், பாசன வசதியை விரிவுபடுத்தவும், நீர்ப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், காலநிலை மாற்றத்திற்கேற்ப ஊரகப் பகுதிகளின் தாங்குதிறனை (Climate Resilience) மேம்படுத்தவும், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**II– அடிப்படை ஊரக உட்கட்டமைப்புப் பணிகள்**

அடிப்படை ஊரக உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஊரகச் சாலைகள் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் மற்றும்

மேம்படுத்துதல், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி மையக் கட்டடங்கள், ஊரக நூலகங்கள், பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள், சுடுகாட்டுக் கூரைகள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு வசதிகள், ஊரக பகுதியில் வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் பொதுவான ஊரக வசதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

**III–வாழ்வாதார மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புப் பணிகள்**

ஊரகக் குடும்பங்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், வருவாய் ஈட்டும் வாய்ப்புகளை அதிகரிக்கவும், வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள், கிராமச் சந்தைகள், உணவு தானியங்கள் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கான சேமிப்புக் கிடங்குகள்,

சுய உதவிக்குழுக்களுக்கான கட்டடங்கள், மண்புழு உர உற்பத்தி அலகுகள், மரம்–மேய்ச்சல் புல்வெளி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மீன்வள உட்கட்டமைப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

**IV—தீவிர வானிலை மற்றும் பேரிடர் முன்னேற்பாட்டிற்கான சிறப்புப் பணிகள்**

பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கும், தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொள்ளும் முன்னேற்பாட்டை வலுப்படுத்துவதற்கும், புயல் பாதுகாப்பு மையங்கள், வெள்ள பாதுகாப்பு மையங்கள், வெள்ளநீர் வடிகால்கள் மற்றும் காற்றுத்தடுப்பு, நிலப் பாதுகாப்பு மரநடவு (Shelter Belt) பணிகள் மேற்கொள்ளப்படும்.

**உச்ச வேளாண் பருவங்கள்**

விதைப்பு மற்றும் அறுவடை போன்ற வேளாண் உச்ச பருவ காலங்களில் விவசாயத்திற்கு போதிய தொழிலாளர்

கிடைப்பதை உறுதி செய்வதற்காக, ஒரு நிதியாண்டில் மொத்தம் 60 நாட்கள் வரை இச்சட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படாத காலமாக அரசு அறிவிக்கும்.

**வெளிப்படைத்தன்மை**

வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டமானது, வெளிப்படைத்தன்மை, கண்காணிப்பு மற்றும் பயனுள்ள நிர்வாகத்தை வலுப்படுத்தும் வகையில் தொழிலாளர்களின் ஊதியத்தொகை ஆதார் அடிப்படையிலான நேரடி பண மாற்றம் (Aadhaar–based Direct Benefit Transfer – DBT) மூலம் அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. பணியாளர்களின் வருகைப் பதிவு உண்மைத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் வகையில், முக அங்கீகார வசதியுடன் கூடிய தேசிய மொபைல் கண்காணிப்பு அமைப்பு (National Mobile Monitoring

System – NMMS with Face Authentication) செயலி மூலம் பதிவு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் அனைத்து சொத்துக்களும், கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு நோக்கங்களுக்காக புவியிடக் குறியீட்டுடன் (Geo–tagging) பதிவு செய்யப்படும்.

**நிதி ஒதுக்கீடு 2026–27**

மத்திய அரசு இடைக்கால உத்தேச (Interim Normative) நிதி ஒதுக்கீடாக ரூ.7,586 கோடியை அனுமதித்துள்ளது. அதற்கிணங்க, மாநில அரசின் பங்குத் தொகை ரூ.5,057 கோடியாகும். இதன்படி, 2026–27 ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தை செயல்படுத்துவதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.12,643 கோடியாகும். வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ், திறன்சாரா

(Unskilled) தொழிலாளர்களுக்கான தினக்கூலியாக ரூ.345/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 5.9. தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

### 5.9.1 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS) மாநிலம் முழுவதும் நீடித்த பொதுச் சொத்துகளை உருவாக்குவதிலும், உள்ளூர் உட்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இருப்பினும், கட்டுமானப் பொருட்களின் விலை, தொழிலாளர் ஊதியம் மற்றும் திட்டச் செயலாக்கச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இத்திட்டத்திற்கான தற்போதைய நிதி ஒதுக்கீடு அதற்கேற்ப உயர்த்தப்படவில்லை. இதன் விளைவாக, தற்போதைய நிதி ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்தக்கூடிய வளர்ச்சிப் பணிகளின் எண்ணிக்கை கணிசமாகக்

குறைந்துள்ளதுடன், அத்தியாவசிய பொதுக் கட்டமைப்பு வசதிகளை உரிய காலத்தில் உருவாக்குவதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தற்போது ஆண்டிற்கு ரூ.3.54 கோடி (ஜி.எஸ்.டி உட்பட) ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பள்ளிக் கட்டடங்கள், பொதுக் கட்டடங்கள், குடிநீர் வழங்கல் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டமைப்புகள், சாலைகள், பேருந்து நிலையங்கள், பால் குளிரூட்டும் மையங்கள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை (SLWM) வசதிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் உள்ளிட்ட நீடித்த பொதுச் சொத்துகள் உருவாக்கப்படுகின்றன.

### 5.9.2 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) என்பது டிசம்பர் 1993 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் மத்தியத் துறைத் திட்டமாகும். இத்திட்டம் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. மக்களின் உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை பரிந்துரைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஆண்டுதோறும் ரூ.5 கோடி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், குடிநீர், கல்வி, பொதுச் சுகாதாரம், சுகாதார வசதிகள், சாலைகள் மற்றும் பிற அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில், உள்ளூர் மக்களின் தேவைகளின் அடிப்படையில்

நீடித்த பொதுச் சொத்துகள் உருவாக்கப்படுகின்றன. மக்களவை உறுப்பினர்கள் தங்களது தொகுதிக்குள் பணிகளைப் பரிந்துரைக்கலாம். மாநிலங்களவை உறுப்பினர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் பணிகளைப் பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணிகளைப் பரிந்துரைக்கலாம். ஒப்புரவான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு உறுப்பினரின் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 15 சதவீதம் பட்டியலின வகுப்பினர் (SC) வசிக்கும் பகுதிகளுக்கும், 7.5 சதவீதம் பழங்குடியினர் (ST) வசிக்கும் பகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி காலாவதியாகாத (Non–Lapsable) நிதியாகும். திட்ட வழிகாட்டுதல்களின்படி, மாவட்ட நிர்வாகம் அரசு

முகமைகள் மூலம் பணிகளைச் செயல்படுத்துகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணிகளை பரிந்துரைப்பவர்களே அன்றி, அவற்றை நேரடியாக செயல்படுத்துவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடையாளம் காணும் அடித்தள முன்னுரிமைகளின் தேவைகளுக்கு நேரடியாக நிதி வழங்குவதன் மூலம், இத்திட்டம், மாநில அரசின் திட்டங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு துணைபுரிகிறது. குறிப்பாக, ஊரகப் பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS) மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து, உள்ளூர் உட்கட்டமைப்புக் குறைபாடுகளை நீக்குவதற்கும், கிராமப்புரங்களில் நீடித்த சமூகச் சொத்துகளை வலுப்படுத்துவதற்கும் இத்திட்டம் முக்கிய ஒருங்கிணைப்பு நிதி ஆதாரமாக விளங்குகிறது.

# 6. மூன்றாம் தூண்:

# நிர்வாகச் சீர்திருத்தங்கள்

## 6. மூன்றாம் தூண்: நிர்வாகச் சீர்திருத்தங்கள் (Governance Reforms)

மூன்றாம் தூணான "நிர்வாகத்தை வலுப்படுத்துதல்" என்பதின் கீழ், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணு தகவல் மாற்றம், நிறுவனத் திறன் மேம்பாடு, நிதி மேலாண்மையை வலுப்படுத்துதல், குடிமக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் எதிர்கால வளர்ச்சி குறித்த சவால்களுக்கு திறம்பட சமாளிக்கக் கூடிய வகையிலான தன்னிறைவு மற்றும் தாங்குதிறன் கொண்ட கிராம ஊராட்சிகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இத்தூண், உள்ளூர்மயமாக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளின் (LSDGs) கீழ் சிறந்த நிர்வாகம் கொண்ட கிராமம், சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு கொண்ட கிராமம், மகளிர் நேய கிராமம் ஆகிய இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வெளிப்படையான

திட்டமிடல் மற்றும் பொதுச் சொத்துகளின் முறையான பராமரிப்பு, தன்னிறைவு பெற்ற உட்கட்டமைப்பைக் கொண்ட கிராமம் என்ற இலக்கையும் வலுப்படுத்துகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சிப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு, மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டமிடல், சொந்த வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்துதல், மின்னணு சேவை வழங்கல், காலவரையறைக்குட்பட்ட குறைதீர்வு மற்றும் சமூகத் தணிக்கை ஆகியவை ஒருங்கிணைந்து SDG 16 – அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்; SDG 17 – இலக்குகளுக்கான கூட்டாண்மை; SDG 5 – பாலின சமத்துவம்; SDG 10 – சமத்துவமின்மையைக் குறைத்தல் ஆகிய உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னெடுக்கின்றன.

### 6.1.நல்லாட்சியின் முன்னெடுப்புகள்

### 6.1.1.கொள்முதல் சீர்திருத்தக் கொள்கை: ஒப்பந்ததாரர்களின் பதிவு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ், 2024 முதல் நடைமுறையில் இருந்த ஒப்பந்த பதிவு முறைக்கு மாற்றாக, இந்த அரசு "ஒப்பந்ததாரர்கள் பதிவுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் 2026", அரசாணை (நிலை) எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 30.06.2026–ல் வெளியிட்டுள்ளது. இந்த புதிய வழிகாட்டுதல்கள், ஊரக உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கான ஒற்றைப் பதிவு (single–point), தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் தகுதி அடிப்படையிலான பதிவு நெறிமுறையினை வகுத்துள்ளது.

1. **ஒற்றைப் பதிவு:** மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் (DRDA) மட்டுமே பதிவு முறை

செயல்படுத்தப்படும். வட்டார அளவில் (Block–level) தனித் தனியாக மேற்கொள்ளப்படும் பதிவு முறை நீக்கப்படுகிறது.

2. **விரிவான செயல்பாட்டு முறை:** எந்தவொரு கூடுதல் பதிவுக் கட்டணம் அல்லது வைப்புத்தொகை இன்றி ஒப்பந்ததாரரின் சொந்த மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும், ஒரே பதிவு முறை ஏற்கப்படும்.
3. **எளிய வகுப்பு முறை (Class Structure):** மூன்று பதிவு வகுப்புகள் – புதிய ஒப்பந்ததாரர் (ரூ.10 இலட்சம் வரையிலான பணிகள்; கட்டணம் ரூ.10,000), வகுப்பு II (ரூ.50 இலட்சம் வரை; கட்டணம் ரூ.20,000) மற்றும் வகுப்பு I (ரூ.2 கோடி வரை; கட்டணம் ரூ.30,000).
4. **ரூ. 2 கோடிக்கு மேற்பட்ட பணிகள் அனைவருக்கும் அனுமதி:** ரூ.2 கோடிக்கு மேற்பட்ட பணிகளுக்குப் பதிவு எதுவும்

தேவையில்லை. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வரம்புகளுக்கு உட்பட்டு, எந்தவொரு ஒப்பந்ததாரரும் பங்கேற்கலாம். வெற்றிபெறும் ஒப்பந்ததாரர்கள் எந்தவொரு கட்டணமோ, வைப்புத்தொகையோ அல்லது புதுப்பித்தலோ இன்றி வகுப்பு IA (Class IA) என வகைப்படுத்தப்படுவார்கள்.

5. **சொத்துமதிப்புச் சான்றிதழ் (Solvency Certificate) ரத்து:** சொத்து மதிப்பு சான்றிதழுக்கு பதிலாக அந்தந்த பதிவு வகுப்பின் நிதி வரம்பில் 50–ல் ஒரு பங்கு (1/50) தொகையானது திரும்பப் பெற முடியாத மின்னணு வங்கி உத்திரவாதத்தை (Irrevocable Electronic Bank Guarantee) பதிவு வைப்புத்தொகையாக வழங்க வேண்டும் (ரூ.20,000 / ரூ.1,00,000 / ரூ.4,00,000).

6. **வைப்புத்தொகையுடன் இணைக்கப்பட்ட பணித் திறன்:** ஒரு ஒப்பந்ததாரர் தனது பதிவுத் தொகையைப் போல அதிகபட்சமாக 50 மடங்கு

மதிப்புள்ள பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியும், மேலும், ஒப்பந்ததாரர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கூடுதல் பதிவுத் தொகை செலுத்தி தங்களின் பதிவுத் திறனை அதிகரித்துக் கொள்ளலாம்.

7. **தகுதி அளவுகோல்கள்:** நிலையான மற்றும் சரிபார்ப்பு நெறிமுறையின் படி தகுதி அளவுகோல்கள் தீர்மானிக்கப்படுகிறது – முந்தைய பத்து நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்– 20% க்கு இணையான சரக்கு மற்றும் சேவைகள் (GST) பரிவர்த்தனை, 50% ஆண்டு வருமானம் (Annual turnover) மற்றும் 25%–க்கு இணையான கட்டுமானப் பணிகளின் மதிப்பைத் கணக்கிடும் போது , நடப்பு ஆண்டு வரை ஆண்டுக்கு 5% என்ற விகிதத்தில் மதிப்பு கூட்டப்பட்டு தற்போதைய மதிப்பு கணக்கிடப்படும்.

8. **புதிய ஒப்பந்ததாரர்கள்:** புதிய விண்ணப்பதாரர் பிரிவின் கீழ், முன் அனுபவம் இல்லாத, படித்த இளைஞர்கள் மற்றும் புதிய நிறுவனங்கள் பதிவு செய்ய வாய்ப்பை ஏற்படுத்துகிறது.
9. **பாதுகாப்பு வைப்புத்தொகையுடன் (Failsafe Deposit) பங்கேற்பு:** பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்கள் கூட ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று, பணி ஆணை வழங்கப்படும் போது, பிணை தொகையுடன் (Security Deposit) கூடுதலாக 'பாதுகாப்பு வைப்புத்தொகையை' (Failsafe Deposit) செலுத்தி, பணியை வெற்றிகரமாக முடித்தவுடன் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
10. **முன்னுரிமைக் குழுக்களுக்கு முழு கட்டண விலக்கு:** தனிநபர் பெண் ஒப்பந்ததாரர்கள் (புதிய சலுகை), பட்டியல் வகுப்பினர் / பழங்குடியின ஒப்பந்ததாரர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள் உட்பட, தமிழ்நாடு

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் (TNCDW) அங்கீகரிக்கப்பட்ட சுயஉதவிக் குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (SHGs/PLFs) மற்றும் வேலையில்லாத கட்டடப் பொறியியல் பட்டதாரிகள்/ பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு (Diploma holders) பதிவுக்கட்டணத்தில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

11. **காலக்கெடு மற்றும் பொறுப்பு:** ஒவ்வொரு விண்ணப்பத்தின் மீதும் 15 நாட்களுக்குள் முடிவெடுக்கப்படும். மேல்முறையீடு மாவட்ட ஆட்சியரிடம் செய்யலாம். முறைகேடுகளைத் தடுக்க, உரிய நடைமுறைகளுடன் கூடிய தடை விதித்தல் மற்றும் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் ஆகிய ஒழுங்கு நடவடிக்கைகள் மூலம் நம்பகத்தன்மை பாதுகாக்கப்படுகின்றன.

12. **இலவச மற்றும் தானாக புதுப்பித்தல்:** பதிவு காலத்திற்குள், குறைந்தபட்சம் ஒரு பணியையாவது செயல்படுத்திய ஒப்பந்ததாரர்களின் பதிவானது கட்டணமின்றித் தானாகவே புதுப்பிக்கப்படும். ஏற்கனவே உள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களும் எந்தவொரு கட்டணமுமின்றித் தானாகவே புதிய வகுப்புகளுக்கு மாற்றப்படுவார்கள்.

**விளைவு:** இந்தப் புதிய வழிகாட்டு நெறிமுறைகள், மீண்டும் மீண்டும் செய்யப்படும் பதிவுகள், அதிகாரிகளின் பரிசீலனைகள் மற்றும் காகிதப் பிணையங்களுக்குப் பதிலாக ஒரே அலுவலகம், ஒரே பதிவேடு, ஒரே மின்னணு வைப்புத்தொகை மற்றும் கணித அளவுகோல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துகின்றன. நுழைவுக் கட்டணங்கள் குறைக்கப்பட்டு, சிறு ஒப்பந்ததாரர்கள் பல மாவட்டங்களில் பங்கேற்கும்

வாய்ப்புகளை பெறுவதுடன் புதியவர்கள் மற்றும் முன்னுரிமைக் குழுக்களுக்கு உறுதிசெய்யப்பட்ட வாய்ப்பும் கிடைக்கிறது. எந்தவித ஒப்பந்த பதிவு வரம்புகளின்றி கோரப்படும் உயர் மதிப்புடைய பணிகளுக்கு ஒளிவுமறைவற்ற போட்டியின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஊரக உட்கட்டமைப்புப் பணிகளுக்கான குறைந்த விலை விகிதங்கள் (competitive rates) பெறப்படுகின்றன.

ஒளிவுமறைவற்ற மற்றும் பொறுப்புடைமையை வலுப்படுத்த, மின்னணு கொள்முதல் (e–procurement) திறம்பட செயல்படுத்துவதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரும் செயல்முறையில் வேறுபாடின்மை மற்றும் எவ்வித தலையீடும் இல்லாததை உறுதிசெய்ய அனைத்து கொள்முதல் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும். நிலைத்தன்மை, தெளிவு

மற்றும் சட்டப்பூர்வ உறுதியை ஊக்குவிப்பதற்காக, அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நிலையான மாதிரி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Standardised Model Tender Documents) பின்பற்றப்படும். கூடுதலாக, தகுதி அளவுகோல்கள் பாரபட்சமற்றதாகவும், தகுந்த விகிதாச்சாரத்துடனும், குறிக்கோள் சார்ந்ததாகவும் இருக்க வேண்டும், இது தகுதியான அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் சம வாய்ப்பை உறுதி செய்யும். இந்த நடவடிக்கைகள் மிகவும் போட்டி நிறைந்த கொள்முதல் சூழலை உருவாக்கும், பொதுச் செலவினங்களின் மதிப்பை மேம்படுத்தும், உட்கட்டமைப்புத் திட்டங்களின் தரம் மற்றும் கால வரம்பை மேம்படுத்தும். மேலும் ஊராட்சி கொள்முதல் செயல்முறைகள் மீது பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும்.

### 6.1.2.பசுமை மற்றும் காலநிலைத் தாங்குதிறன் கொண்ட ஊராட்சிகள்

ஊரகக் குடும்பங்களில் மேற்கூரை சூரிய மின்சார அமைப்புகளின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதில் கிராம ஊராட்சிகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் முக்கிய ஒருங்கிணைப்புப் பங்காற்ற முடியும். மேலும், VB–GRAM (G) திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் நாற்றங்கால் வளர்ப்பு பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதன் மூலம், ஊரகப் பகுதிகளின் பசுமைப் பரப்பை அதிகரிக்க முடியும். திடக்கழிவுகளை உரமாக மாற்றுதல் மற்றும் வீட்டளவிலான உயிரி–எரிவாயு (Biogas) உற்பத்தியை ஊரக திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஒருங்கிணைப்பதும் முன்னெடுக்கப்படும். இந்நடவடிக்கைகள் அனைத்தும் இணைந்து, கிராம மட்டத்திலிருந்து மாநில அளவிற்கு கார்பன்

நடுநிலைத்தன்மையை நோக்கிய தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும்.

### 6.1.3. நிறுவன மற்றும் சமூக நடவடிக்கைகள்

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் பசுமைக் கூறுகளில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறும்:

- மரக்கன்றுகள் நடுதல் குறித்த கிராம சபைத் தீர்மானங்கள்;
- கழிவுகளை வீடுகளிலேயே தரம் பிரித்தல்;
- நீர்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்;
- கிராம அளவிலான சுற்றுச்சூழல் குழுக்கள் அமைத்தல்;
- தூய்மைக் காவலர்களை ஈடுபடுத்துதல்;
- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்டப் பயிற்சி மையங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களுக்கு பசுமை சார்ந்த பயிற்சிகள் வழங்குதல்.

மேலும், நெகிழி இல்லா ஊராட்சிகள், ODF Plus Model ஊராட்சிகள் மற்றும் சிறந்த பசுமை ஊராட்சிகள் போன்ற சாதனைகளுக்கு விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் வழங்கும் முறை ஏற்படுத்தப்படும். அமலாக்க நடவடிக்கைகள் மட்டும் போதாது; சமூகப் பங்கேற்பையும் உரிமையுணர்வையும் தொடர்ந்து நிலைநிறுத்துவதில் இத்தகைய ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார நடவடிக்கைகள் முக்கிய பங்காற்றும்.

### 6.1.4.ஊரகக் குடியிருப்புகளில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

**ஊரகக் குடும்பங்களில் சூரிய ஆற்றல் பயன்பாட்டை ஊக்குவித்தல்**

தகுதியுடைய ஊரகக் குடும்பங்கள் மேற்கூரை சூரிய மின் அமைப்புகளை

அமைப்பதற்காக, விண்ணப்பப் பதிவு, விற்பனையாளர் தேர்வு, மானியக் கோரிக்கை மற்றும் நெட்–மீட்டரிங் (Net Metering) தொடர்பான நடைமுறைகளுக்கு கிராம ஊராட்சி அலுவலகத்திலேயே உதவி பெறும் வகையில் வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம், பயனாளிகள் மாவட்டத் தலைமையகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் குறையும். கிராம சபைகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அறிவிப்புப் பலகைகள் மூலம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, உண்மையான முதலீட்டுச் செலவு, அரசின் மானியம், மின்சாரச் சேமிப்பு மற்றும் முதலீடு மீளப்பெறும் காலம் போன்ற விவரங்கள் எளிய தமிழில் விளக்கப்படும். இதன் மூலம், ஊரகக் குடும்பங்களில் சூரிய மின் பயன்பாடு அதிகரிக்கும்.

**சூரிய ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்**

கிராம ஊராட்சிகளின் தொடர்ச்சியான மின்சாரச் செலவுகளை கணிசமாகக் குறைக்கும் வகையில், பின்வரும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்படும்:

- மின்சாரச் சிக்கன LED தெரு விளக்குகள்;
- சூரிய ஆற்றல் தெரு விளக்குகள்;
- மேற்கூரை சூரிய மின் உற்பத்தி அமைப்புகள்;
- சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் குடிநீர் பம்புகள்.

குறிப்பாக, தொலைதூரக் குடியிருப்புகள் மற்றும் உட்புறச் சாலைகளில் சூரிய ஆற்றல் தெரு விளக்குகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், ஊராட்சி மற்றும் பிற பொதுக் கட்டடங்களின் மேற்கூரைகளில் சூரிய மின் பலகைகளை நிறுவுவதன் மூலம், அக்கட்டடங்களை எரிசக்தி தன்னிறைவு பெற்ற பொதுக் கட்டடங்களாக மாற்ற முடியும்.

இந்நடவடிக்கைகள் ஒருங்கிணைந்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்தி, பொதுச் சேவை வழங்கலை வலுப்படுத்தி, கிராம ஊராட்சிகளின் தொடர்ச்சியான மின்சாரச் செலவைக் குறைத்து, அவற்றின் நிதி மேலாண்மை வலுப்படுத்தும்.

### 6.1.5.பசுமைப் பரப்பு, சூழலியல் மீட்பு மற்றும் காலநிலைத் தாங்குதிறன்:

**மரக்கன்றுகள் நடுதல் மற்றும் சாலையோரப் பசுமையாக்கம்:**

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்வது, பசுமைப் பரப்பை அதிகரித்தல் மற்றும் ஊரகப் பகுதிகளில் சூழலியல் சமநிலையை மீட்டெடுத்தல் ஆகியவற்றிற்கான முக்கிய நடவடிக்கைகளில் மரக்கன்றுகள் நடுதல் ஒன்றாகும். இது சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துதல், உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல் மற்றும் ஊரக

மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் வலுப்படுத்துதல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டம் தற்போது வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் (VB–GRAM (G)) தமிழ்நாடு முழுவதும் விரிவான மரக்கன்று நடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளில்:

- பொது இடங்கள், அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு நிறுவனங்களில் பெருமளவில் மரக்கன்றுகள் நடுதல்;
- சாலைகளின் ஓரங்களில் மரக்கன்றுகள் நடுதல்;
- கடலோரப் பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல்;
- ஆற்றங்கரைகளில் மரக்கன்றுகள் நடுதல்

ஆகியவை அடங்கும்.

2026-27 ஆம் ஆண்டில், மொத்தம் 1,834 நாற்றங்கால்களில் 2 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 1,542 நாற்றங்கால்களும், வனத்துறையின் கீழ் செயல்படும் 292 GTM நாற்றங்கால்களும் அடங்கும். கூடுதலாக, 250 புதிய நாற்றங்கால்கள் அமைக்கப்படும்.

### 6.1.6.வளர்ச்சியின் பங்கேற்பாளர்கள்

தரமான பொதுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான ஊரக வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. பல்வேறு அரசுத் திட்டங்கள் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும் அதிகரித்து வரும் ஊரக உட்கட்டமைப்புத் தேவைகள் மற்றும் ஊரக மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய,

பொது முதலீடுகளுக்கு துணைபுரியும் வகையில் ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமாகும்.

இதனையடுத்து, நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு, அரசுசாரா அமைப்புகள், சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர தகுதியுடைய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான கூட்டாண்மை கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில், அரசு "வளர்ச்சியில் பங்கேற்பாளர்கள்" என்ற திட்டத்தை செயல்படுத்தும். இம்முயற்சியின் மூலம், நிறுவனங்களின் நிதி வளங்கள், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் புதுமைத்திறனைப் பயன்படுத்தி, அரசு வளர்ச்சியின் முயற்சிகளுக்கு துணைபுரிவதுடன், நிலையான பொதுச் சொத்துகளை உருவாக்குதல், கூடுதல் முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் பகிர்ந்த பொறுப்பு மற்றும் திட்டமிட்ட கூட்டாண்மைகள்

வாயிலாக ஊரக வளர்ச்சி, மாற்றத்தை விரைவுபடுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இத்திட்டம் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு, சமூக அமைப்புகள், அரசுசாரா அமைப்புகள் மற்றும் இதர தகுதியுடைய நிறுவனங்களுடனான கூட்டாண்மையின் மூலம் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவிப்பதையும், அதன் மூலம் நிலையான சமூகச் சொத்துகளை உருவாக்கி, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதி ஆதரவை வழங்கி, பங்கேற்பு நிறுவனங்கள் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும். இப்பணிகளை

பங்கேற்பு நிறுவனம் நேரடியாகச் செயல்படுத்தலாம் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்த ஒப்படைக்கலாம்.

பங்கேற்பு நிறுவனம், குறிப்பிடப்பட்ட கிராமங்களில் பல்வேறு வகையான ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கவோ, நேரடியாகச் செயல்படுத்தவோ அல்லது பிற வழிகளில் ஆதரவு அளிக்கவோ முடியும். இக்கூட்டாண்மையின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் பணிகளின் வரம்பு (Scope of Works) பின்வருமாறு:

1. **விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்:** விளையாட்டு மைதானங்கள், சிறு விளையாட்டு அரங்குகள் (Mini Stadiums) மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல்.

2. **சமூகப் பயன்பாட்டு இடங்கள்:** சமுதாயக் கூடங்கள் (Community Halls) மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான திறந்தவெளி சதுக்கங்கள் (Public Squares) உருவாக்குதல்.
3. **கல்வி மற்றும் பண்பாட்டு வசதிகள்:** பொது நூலகங்கள் மற்றும் பள்ளிகளுக்கான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.
4. **பொதுப் பயன்பாட்டு வசதிகள்:** தெரு விளக்கு அமைப்புகளை முழுமையாகப் புதுப்பித்து, நவீனமயமாக்குதல்.
5. **சுற்றுச்சூழல் சார்ந்த பொதுச் சொத்துகள்:** சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் உள்ளிட்ட நீர்நிலைகளைப் புனரமைத்து, புத்துயிர் அளித்தல்.
6. **பிற பணிகள்:** இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கும் பிற

ஊரகப் பொதுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் பணிகள்.

பணிகள் தடையின்றி மற்றும் திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, செயல்படுத்தும் முறையினை, பங்கேற்பு நிறுவனம் தனது உள் வழிகாட்டுதல்கள் மற்றும் வளங்களின் அடிப்படையில் மேற்கொள்ளலாம். பணிகள் பின்வரும் இரு முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் செயல்படுத்தப்படலாம்:

i. **பங்கேற்பு நிறுவனம் மூலம் செயல்படுத்துதல்:** பங்கேற்பு நிறுவனம், தனது சொந்த நிதி, தொழில்நுட்பக் குழுக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் மூலம், துறைக்கு தேவையான திட்டப் பணிகளை கண்காணித்து நேரடியாகச் செயல்படுத்தி நிறைவு செய்யலாம்.

ii. **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்துதல்:** பங்கேற்பு நிறுவனம், பணியின் மதிப்பீட்டிற்கு தேவையான நிதி அல்லது மானியத்தை வழங்கி, அதற்கான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை சம்பந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் ஒப்படைக்கும்.

**6.1.7. பெருநிறுவனங்கள் / நிறுவனங்கள் / தன்னார்வ அமைப்புகள் / சமூக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள் மூலம் நீர்நிலைகளைப் புனரமைத்தல்**

நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளில் நிறுவனங்கள் (Corporates), அரசுசாரா அமைப்புகள் (NGOs), நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) மற்றும் சமூக அமைப்புகள் பங்கேற்பதற்கு, வெளிப்படையான நிறுவன அமைப்பிலான

கட்டமைப்பினை உருவாக்கும் நோக்கில், அரசு சார்பில் அரசாணை (நிலை) எண்.116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (SGS2(2)) துறை, நாள்: 30.06.2026 வெளியிடப்பட்டுள்ளது.

**செயல்படுத்தும் முறைகள்:**

மேற்கண்ட பணிகள் பின்வரும் செயல்படுத்தும் முறைகளின்படி மேற்கொள்ளப்படும்:

அ. பெருநிறுவனங்கள் / நிறுவனங்கள் / தன்னார்வ அமைப்புகள் / சமூக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள் தங்களது சொந்த நிதியில் செயல்படுத்துதல்.

ஆ. பெருநிறுவனங்கள் / நிறுவனங்கள் / தன்னார்வ அமைப்புகள் / சமூக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள் நிதி வழங்கி மாவட்ட நிர்வாகம் அப்பணிகளை செயல்படுத்துதல்.

இ. பெருநிறுவனங்கள் / நிறுவனங்கள் / தன்னார்வ அமைப்புகள் / சமூக அமைப்புகள் /

கல்வி நிறுவனங்கள் இயந்திரங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்.

ஈ. தொழில்துறையின் அரசு ஆணை (நிலை) எண் 50, தொழில் (MMC–1) துறை, நாள் 27.04.2017 மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் செயல்படுத்துதல்.

பணிகளை செயல்படுத்தும் முறையினை இறுதி செய்யப்பட்ட பின்னர் நிறுவனங்கள், அரசுசாரா அமைப்புகள், சமூகப் பொறுப்பு நிறுவன அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பணிகள் தொடங்குவதற்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் தடையில்லா சான்று வழங்குவதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

## 6.2. ஒருங்கிணைந்த குடிமக்கள் பங்கேற்புச் செயலி (Comprehensive Citizen Participation App)

கிராம ஊராட்சிகளையும் ஊரக மக்களையும் நேரடியாக இணைக்கும் ஒருங்கிணைந்த மின்னணுத் தளமாக, முழுமையான குடிமக்கள் பங்கேற்புச் செயலி ஒன்றை உருவாக்கி செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

இச்செயலி மூலம், அரசாணைகள், ஊராட்சித் தீர்மானங்கள், கிராம சபை அறிவிப்புகள், கூட்ட நிகழ்ச்சி நிரல்கள், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவிப்புகள் ஆகியவை நிகழ்நேர அடிப்படையில் (Real–time) பொதுமக்களுக்கு பகிரப்படும். மேலும், கிராம சபைக் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்புகளை உரிய காலத்திற்கு முன்பே பொதுமக்கள் பெறுவதோடு, தொடர்புடைய ஆவணங்களையும் முன்கூட்டியே பார்வையிட

முடியும். இதன் மூலம், உள்ளூர் முடிவெடுக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் உரிய விவரங்களுடன் பங்கேற்பது உறுதி செய்யப்படும்.

மேலும், ஊராட்சி வரி விதிப்பு விவரங்களை இணையவழியில் தெரிவிப்பது, ஊராட்சி வரிகள் மற்றும் பயனாளர் கட்டணங்களை மின்னணு முறையில் செலுத்துவது மற்றும் பல்வேறு ஊராட்சி சேவைகளை இணையவழியில் பெறுவது போன்ற வசதிகளும் இத்தளத்தில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் பொதுமக்களுக்கு சேவைகளை எளிதாக அணுகும் வசதி கிடைப்பதுடன், ஊராட்சிகளின் உள்ளூர் வருவாய் நிர்வாகமும் வலுப்படுத்தப்படும்.

இச்செயலியின் முக்கிய அம்சமாக, பொதுமக்களுக்கென தனித்த குடிமக்கள் பங்கேற்பு வசதி (Citizen Participation Module) ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கிராம மக்கள்:

- வளர்ச்சிக்கான ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை சமர்ப்பித்தல்;
- கிராம வளர்ச்சி முன்னுரிமைகள் குறித்து தங்களது விருப்பத்தைப் பதிவு செய்தல் / வாக்களித்தல்;
- பொதுச் சேவைகள் குறித்த பின்னூட்டங்களை வழங்குதல்;
- உள்ளூர் பிரச்சினைகளை நேரடியாக ஊராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வருதல்

ஆகிய வசதிகளைப் பெறுவர்.

நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், இச்செயலியில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) அடிப்படையிலான பகுப்பாய்வு வசதி இணைக்கப்படும். இவ்வசதி:

- பொதுமக்களின் குறைகளை வகைப்படுத்துதல்;
- தொடர்ந்து எழும் பொதுவான பிரச்சினைகளைத் தொகுத்துச் சுருக்குதல்;

- உடனடி கவனம் தேவைப்படும் முன்னுரிமைப் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்;
- குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு காணப்படாத குறைகளை தானாகவே மேல்நிலை நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்ளும்.

இத்தகைய ஒருங்கிணைந்த மின்னணு அமைப்பு, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், குறைதீர்வு முறையை விரைவுபடுத்துதல், மக்கள் பங்கேற்புடனான உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புணர்வை அதிகரித்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கும்.

## 6.3. செயல்திறன் மதிப்பீட்டுக் கொள்கை (Performance Assessment Policy)

தற்போது, கிராம ஊராட்சிகளின் ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் வளர்ச்சி முன்னேற்றத்தை நடுநிலையாகவும், ஒருங்கிணைந்த முறையிலும், தமிழ்நாட்டின் தனிப்பட்ட தேவைகளுக்கேற்பவும் மதிப்பிடுவதற்கான முழுமையான கட்டமைப்பு இல்லை. தற்போதுள்ள மதிப்பீட்டு முறைகள் பெரும்பாலும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் திட்டச் செயலாக்கம் ஆகிய அம்சங்களையே மையமாகக் கொண்டுள்ளன. ஆனால், நிர்வாகத் தரம்; பொதுச் சேவை வழங்கல்; உட்கட்டமைப்பு வளர்ச்சி; நிதி மேலாண்மை; சுற்றுச்சூழல் நிலைத்தன்மை; குடிமக்கள் பங்கேற்பு போன்ற ஊராட்சி வளர்ச்சியின் பரந்த பரிமாணங்களை அவை முழுமையாகப் பிரதிபலிப்பதில்லை. எனவே,

தமிழ்நாட்டின் வளர்ச்சித் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கேற்ற வலுவான செயல்திறன் மதிப்பீட்டு முறையை உருவாக்கும் நோக்கில், மாநிலத்திற்கென தனித்த ஊராட்சி வளர்ச்சிக் குறியீடு (Panchayat Development Index – PDI) அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இக்குறியீடு, பல்வேறு வளர்ச்சி அளவுகோல்களின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியின் செயல்திறனையும் ஆண்டுதோறும் அறிவியல் மற்றும் ஆதாரபூர்வமான முறையில் மதிப்பிடும் கருவியாக செயல்படும்.

சமமான மற்றும் நியாயமான ஒப்பீட்டை உறுதி செய்வதற்காக, கிராம ஊராட்சிகள் அவற்றின் அடிப்படை வளர்ச்சி நிலையின் (Baseline Development Status) அடிப்படையில் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படலாம். இதன் மூலம், ஒரே மாதிரியான வளர்ச்சி நிலையில் உள்ள கிராம

ஊராட்சிகளுக்கிடையே நியாயமான செயல்திறன் ஒப்பீடு மேற்கொள்ள முடியும்.

ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் PDI மதிப்பீடு, வளர்ச்சி முன்னேற்றத்தைக் கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், அரசின் கொள்கை செயல்திட்டங்களுக்கு வழிகாட்டுவதற்கும், அடித்தள திட்டமிடலை வலுப்படுத்துவதற்கும் பயன்படும்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி மற்றும் வள ஒதுக்கீடுகள், கிராம ஊராட்சிகளின்:

- ஆரம்பகட்ட வளர்ச்சி நிலை;
- அதன் பின்னர் அடைந்த செயல்திறன் மற்றும் முன்னேற்றம்

ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு இணைக்கப்படும்.

இதன் மூலம், வளர்ச்சியில் பின்தங்கிய கிராம ஊராட்சிகளுக்கு கூடுதல் ஆதரவு

வழங்கப்படுவதுடன், தொடர்ந்து சிறப்பான முன்னேற்றம் காணும் ஊராட்சிகளுக்கு ஊக்கமும் வழங்கப்படும்.

மேலும், மண்டல வாரியான முன்னேற்றத்தில் காணும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் மற்றும் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துதல் ஆகியவற்றிற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

**அட்டவணை எண்.7**

**ஊராட்சி முன்னேற்றக் குறியீட்டின்படி (Panchayat Advancement Index) கிராம ஊராட்சிகளின் தற்போதைய தரநிலை**

| வ. எண் | கிராம ஊராட்சிகளின் தரநிலை/ மதிப்பெண் வரம்பு | 2022–23–ல் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 2023–24–ல் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | செயல்திறன் நிலை |
|---|---|---|---|---|
| 1. | A+ – (90–100) | 0 | 0 | மிகவும் சிறப்பானது |
| 2. | A – (75–89) | 0 | 263 | சிறப்பானது |

| வ. எண் | கிராம ஊராட்சிகளின் தரநிலை/ மதிப்பெண் வரம்பு | 2022-23-ல் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 2023-24-ல் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | செயல்திறன் நிலை |
|---|---|---|---|---|
| 3. | B – (60-74) | 6902 | 10640 | நல்லது |
| 4. | C – (40-59) | 5618 | 1564 | முன்னேற்றம் தேவை |
| 5. | D – (0-39) | 5 | 15 | அதிக முன்னேற்றம் தேவை |
| **மொத்த கிராம ஊராட்சிகள்** | | **12525** | **12482** | |

## 6.4.இணையவழி சேவைகள் (Services through Web Portal)

கிராம ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சிகள் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் திறன்மிக்க சேவை வழங்கலை உறுதி செய்யும் வகையில் இணையவழி தளங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

அதற்கான இணையதள முகவரிகள்:

- https://www.tndrdpri.indianbank.bank.in
- https://www.onlineppa.tn.gov.in
- https://www.vptax.tnrd.tn.gov.in

முன்னர் பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் ரசீதுகள் வழங்குதல் போன்ற இச்சேவைகள், தற்போது முழுமையாக மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொதுமக்கள் எளிதாகவும் விரைவாகவும் சேவைகளைப் பெறுவதுடன், சேவை வழங்கலில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**6.4.1. இணையவழி வரி மற்றும் கட்டணச் செலுத்துதல் (Online Payments)**

கிராம ஊராட்சிகளுக்குச் செலுத்த வேண்டிய சொத்து வரி, தொழில் வரி மற்றும் குடிநீர்க் கட்டணங்களை இணையவழியில் செலுத்துவதற்காக, தேசிய தகவல்

மையத்தால் (NIC) www.vptax.tnrd.tn.gov.in என்ற புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்விணையதளம் 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் இணையவழியில் வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்தும் வசதியை வழங்கி வருகிறது. தற்போது, இத்தளத்தில் 1.50 கோடி குடும்பங்களின் தரவுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும், வரி வசூலை எளிதாக்கும் வகையில் 12,480 கிராம ஊராட்சிகளுக்கு மின்னணு விற்பனை முனைய (Point of Sale – POS) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**6.4.2.TNPASS (Tamil Nadu Panchayat Account Simplification System)**

கிராம ஊராட்சிகளின் நிதி பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு ஊராட்சி கணக்கு

எளிமைப்படுத்தும் முறை (Tamil Nadu Panchayat Account Simplification System – TNPASS)"யை அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறை, கணக்கியல் நடைமுறைகளை எளிமைப்படுத்தி, நிதி பரிவர்த்தனைகளை விரைவுபடுத்துவதுடன், அடித்தளத்தில் பொதுமக்களுக்கு சேவை வழங்கும் திறனையும் மேம்படுத்துகிறது.

**(அ)TNPASS மூலம் சேவைக் கட்டணங்கள் செலுத்துதல்**

பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் தெரு விளக்குகளைப் பராமரித்தல் ஆகியவை கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும். முன்னதாக, இச்சேவைகளுக்கான மின்கட்டணங்கள் மற்றும் பிற சேவைக் கட்டணங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) ஆகியவற்றிற்கு வங்கிக் கேட்பு

வரைவோலைகள் (Demand Drafts) மூலம் செலுத்தப்பட்டன. இதனால்:

- மின்கட்டணங்களை ஒருங்கிணைத்து வசூலித்தல் மற்றும் செலுத்துதல்,
- சேவைகளை காலமுறைப்படி வழங்குதல்

ஆகியவற்றில் பல்வேறு நிர்வாகச் சிரமங்கள் ஏற்பட்டன.

எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தொடர்புடைய துறைகளுடன் இணைந்து, இக்கட்டணங்களை மின்னணு பரிவர்த்தனை முறையில் (Electronic Mode) ஒருங்கிணைத்துள்ளது. மேலும், நிலுவையில் உள்ள சேவைக் கட்டணங்களுக்கு படிப்படியாகத் தீர்வு காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**6.4.3. மனைப் பிரிவு மற்றும் கட்டடத் திட்ட ஒப்புதல் (Layout and Building Plan Approval)**

www.onlineppa.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம், ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவு மற்றும் கட்டடத் திட்ட ஒப்புதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) அல்லது நகர மற்றும் ஊரகத் திட்டமிடல் இயக்குநரகத்தின் (DTCP) முன் தொழில்நுட்ப ஒப்புதலைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளால் இணையவழியில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 2024–25 ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இம்முறை, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வெளிப்படையான மற்றும் ஒருங்கிணைந்த இணையவழி செயல்முறையாக செயல்பட்டு வருகிறது.

### 6.4.4.ஊரகப் பகுதிகளில் தொழில் தொடங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்

ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், தொழிற்சாலைகளுக்கான கட்டடத் திட்ட ஒப்புதல், வணிக உரிமங்கள் மற்றும் இதர அனுமதிகளை எளிதாகப் பெறுவதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக தேவையான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து தேவையான அனைத்து அனுமதிகளையும் விரைவாக வழங்கும் வகையில் ஒற்றைச் சாளர இணையதளம் (Single Window Portal) உருவாக்கப்பட்டு வருகிறது.

### 6.5. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துவதுடன், திறம்பட்ட செயல்பாட்டின் மூலம் அரசு திட்டங்களின் வெற்றியை உறுதி செய்கிறது. பயிற்சி பெறுபவர்களின் திறமை, அறிவுத்திறன், ஆக்கத்திறன், ஆற்றல் மற்றும் செயல்திறனை மேம்படுத்த, திறன், அறிவு, அணுகுமுறை மற்றும் நடத்தை மேம்பாடு சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பயிற்சியாளர்கள், அவர்கள் சார்ந்த துறை மற்றும் சமூகம் பயன்பெறும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு நிலை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயிற்சி ஆணையரகத்தின் கீழ் செயல்படும்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் 37 மாவட்ட வள மையங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. மாநில பயிற்சிப் பிரிவு, இதர துறைகளுடன் இணைந்தும், மாநில நிதி ஆணையத்தின் (SFC) ஆதரவுடனும் பல்வேறு பயிற்சித் திட்டங்களை திறம்பட மேற்கொள்கிறது.

### 6.5.1. மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA)

இந்திய அரசு 2018 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA) திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இது தற்போது 2026–27 முதல் 2030–31 வரை நீட்டிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், கிராம ஊராட்சி வளர்ச்சித் தேவைகளுக்கு மிகவும் பதிலளிக்கக்கூடிய வகையில் மாறுவதற்கு கிராம ஊராட்சி

நிறுவனங்களின் திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம், மக்கள் பங்கேற்புடன் திட்டமிடலை எளிதாக்குதல், வளங்களை திறம்பட பயன்படுத்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் இணைக்கப்பட்ட உள்ளூர் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை உணர்ந்துகொள்ளுதல் ஆகிய இலக்குகளை கொண்டுள்ளது. எனவே, 2030–க்குள் அடைய வேண்டிய ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதற்கான முக்கிய பங்களிப்பாளராக ஊராட்சிகள் நியமிக்கப்பட்டுள்ளன.

### 6.5.1.1. நிதி ஒதுக்கீட்டு முறை

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம், பயிற்சி, உட்கட்டமைப்பு மற்றும் மனித வளங்கள், புதுமையான நடவடிக்கைகள், ஊராட்சி நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப ஆதரவு,

நிர்வாக மற்றும் நிதித் தரவு பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் அலகு, ஊராட்சி கட்டடங்கள், ஊராட்சிகளின் பொருளாதார மேம்பாடு மற்றும் வருமான உயர்வுக்கான திட்ட அறிக்கை அடிப்படையிலான ஆதரவு, தகவல், கல்வி தொடர்பு (1.5%) மற்றும் திட்ட மேலாண்மை (1.5%) ஆகிய பிரிவுகளில் ஒட்டுமொத்தமாக 60:40 (மத்திய மற்றும் மாநில அரசு) என்ற நிதிப் பங்கீட்டு முறையில் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 2025-26 ஆம் ஆண்டில், இந்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கும், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்களை உருவாக்குவதற்கும், மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூ.153.24 கோடி தொகைக்கான வருடாந்திர செயல் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. சென்ற 2025-26 ஆம்

ஆண்டில், ரூ.20.53 கோடி செலவில் 80,441 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். ஊராட்சி நிறுவனங்களில் ரூ.28.95 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும் மனித வளங்களுக்காக ரூ. 10.52 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**6.5.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்** (SIRD)

மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனம், ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் உள்ள குறிப்பிட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவு, திறன் மேம்பாடு மற்றும் நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான உயர்நிலை பயிற்சிகளை அளிக்கின்றது. மேலும் பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு வளர்ச்சி

பாடங்களில் பயிற்றுநர் பயிற்சி அளித்தலும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, இந்நிறுவனம் செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

**6.5.3.தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கான பயிற்சி**

ஊரக உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கான விரிவான "திறன் மேம்பாட்டுத் திட்டம்" மாநில அளவிலான இந்நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது. இதில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் (LSDG), சொந்த வருமான

ஆதாரங்களை அதிகரித்தல் (OSR), தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பிரதிநிதிகளுக்கான சிறப்பு பயிற்சி, மகளிர் நேய மாதிரி ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி முன்னேற்றக் குறியீடு (PDI) ஆகியவை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இதில் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பிற துறை அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அளவிலான பயிற்றுநர்கள், மண்டல அளவிலான பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட அளவிலான பயிற்றுநர்களுக்கு பயிற்றுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பணிகளை திறம்பட மற்றும் சட்ட விதிகளின்படி செய்ய தயார்படுத்துதல். ஊராட்சி நிர்வாகம், திட்டங்களை செயல்படுத்துதல், நிதி

நிர்வாகம், மின்–ஆளுமை போன்ற பல்வேறு தலைப்புகளில் பாட புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர் / பழங்குடியினத்தவர் பிரதிநிதிகளுக்கான சிறப்பு பயிற்சித் திட்டங்கள் தொடர்ந்து தயாரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், தலைமைத்துவ பண்புகளை வளர்க்கவும், அவர்களின் பொறுப்புகளைச் சரியாகச் செய்ய அதிகாரமளிக்கவும் உதவுகிறது.

**அட்டவணை – 8**

**மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின்–பயிற்சி திட்டம் – 2026–27**

| **பயிற்சி எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 130 | 6,500 |

**6.5.4. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்** (RIRD)

**பணியமைப்பு**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் / இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. மாநில அரசு, ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கான வரவு செலவுக்காக ஆண்டுக்கு ரூ.13.44 கோடி நிதி வழங்குகிறது. இந்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகம், அவ்வப்போது தொடர் மற்றும் தொடரல்லாத செலவுகளுக்கு நிதி வழங்குகிறது.

### 6.5.5. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, வட்டார ஊராட்சி குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூக அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடத்திட்டம் மற்றும் கையேடுகளின் அடிப்படையில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**அட்டவணை – 9**

**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின்–பயிற்சி திட்டம் – 2026–27**

| பயிற்சி எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 550 | 22,000 |

### 6.5.6 ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் கிராம ஊராட்சிகளுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP) நிறுவப்பட்டுள்ளன. இந்திய அரசின் திட்ட வழிகாட்டு நெறிமுறையின்படி, மாவட்ட ஊராட்சி வள மையம் (DPRC) என குறிப்பிடப்படுகிறது. ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மாவட்ட ஆட்சியரின் நிர்வாகக்

கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், கிராம ஊராட்சி ஊழியர்கள் (OHT இயக்குநர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட), சமூக அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 10**

**ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையத்தின் – பயிற்சி திட்டம் – 2026–27**

| பயிற்சி எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1788 | 71,500 |

# 7. TN–வெற்றி திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய மத்திய அரசுத் திட்டங்கள்:

## 7.TN–வெற்றி திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய மத்திய அரசுத் திட்டங்கள்:

### 7.1. ஜல் ஜீவன் இயக்கம்:

தமிழ்நாட்டில் "ஒவ்வொரு ஊரக வீடுகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற அளவில் பரிந்துரைக்கப்பட்ட தரத்திலான குடிநீரை வழக்கமான மற்றும் நீண்ட கால அடிப்படையில், குறைந்த சேவை விநியோகக் கட்டணத்தில் வழங்குவதன் மூலம் ஊரகச் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது" என்ற தொலைநோக்குப் பார்வையுடன் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தொடர்ந்து நடைபெற்று வரும் திட்டங்களை நிறைவு செய்வதற்காக இத்திட்டம் 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 1,25,25,733 ஊரக வீடுகளில் 1,12,56,706 (89.87%) வீடுகளுக்கு

செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை, 15 மாவட்டங்கள், 197 வட்டார ஊராட்சிகள் மற்றும் 8,834 கிராம ஊராட்சிகள் 'வீடுதோறும் குடிநீர்' (Har Ghar Jal) நிலையை, அதாவது 100% வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்கும் இலக்கை அடைந்துள்ளன. ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளைச் செயல்படுத்துவதற்கான நிதி பகிர்வு முறை ஒன்றிய அரசு (50%) மற்றும் மாநில அரசால் (50%) பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாட்டிற்கான ஜல் ஜீவன் இயக்கத்தின் திட்ட இயக்குநராகச் செயல்படுகிறார். நீர் ஆதாரம் சம்பந்தப்பட்ட கிராம

ஊராட்சிக்குள் இருக்கும் பட்சத்தில், தனி கிராமத் திட்டங்களின் (Single Village Schemes) வடிவமைப்பு, மதிப்பீடு தயாரிப்பு மற்றும் செயலாக்கம், கூட்டுக்குடிநீர்த் திட்டங்களின் கிராமப் பகுதி உட்கட்டமைப்புப் பணிகள் ஆகியவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயல்படுத்துகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்காக, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் கூட்டுக் குடிநீர் திட்டங்களை செயல்படுத்துகிறது. ஜல் ஜீவன் இயக்க வழிகாட்டுதல்களின்படி, நீர் ஆதார மேம்பாடு உள்ளிட்ட கிராமப்புரக் குழாய் வழி குடிநீர் விநியோக உட்கட்டமைப்புப் பணிகளுக்காக, 50 சதவீத பட்டியல் வகுப்பினர் (SC) பழங்குடியினர் (ST) மக்கள் தொகை கொண்ட கிராமங்கள், மலைப் பகுதிகள் மற்றும் வனப் பகுதிகளில் மூலதனச் செலவில் 5 சதவீதமும்,

இதர கிராம ஊராட்சிகளில் மூலதனச் செலவில் 10 சதவீதமும் ஊரக குடும்பங்களிடமிருந்து பணம்/பொருள்/உழைப்பு வடிவில் சமூகப் பங்களிப்பாகச் சேகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**7.2. ஜல் ஜீவன் இயக்கம் 2.0:**

இந்திய அரசு 2026 ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்காக (Operation & Maintenance) "ஊரக குழாய் வழி குடிநீர் விநியோகத் திட்டம்" (RPWSS) என்ற பெயரில் ஜல் ஜீவன் இயக்கம் 2.0–ஐ அறிவித்துள்ளது. ஜல் ஜீவன் இயக்கம் 1.0 உட்கட்டமைப்புகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்திய நிலையில், ஜல் ஜீவன் இயக்கம் 2.0 குடிநீர் விநியோக அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பை வலியுறுத்துகிறது.

**7.2.1. ஜல் ஜீவன் இயக்கம் 2.0–ன் முதன்மை நோக்கங்கள்:**

"ஊரக குழாய் வழி குடிநீர் விநியோகத் திட்டம்" என்று அழைக்கப்படும் ஜல் ஜீவன் இயக்கம் 2.0, அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்குவதை விட, நீண்ட கால சேவை விநியோகம் மற்றும் சொத்துகளின் நிலைத்தன்மை ஆகியவற்றில் முதன்மையாகக் கவனம் செலுத்துகிறது. இதன் மூலம் செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் இணைப்புகள் (FHTCs) வழியாக BIS:10500 தரநிலைகளை பூர்த்தி செய்யும் பாதுகாப்பான குடிநீரை ஒரு நபருக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 55 லிட்டர் (lpcd) வழங்குவதை உறுதி செய்கிறது.

### 7.2.2. ஜல் ஜீவன் இயக்கம் 2.0–ன் கூறுகள்:

**நிறுவனக் கட்டமைப்பு மற்றும் குடிநீர் நிர்வாகம்:**

ஜல் ஜீவன் இயக்கம் 2.0, கிராம அளவிலான நுண் பயன்பாடுகள் (உள்ளூர் விநியோகம்/பழுதுபார்ப்பு) மற்றும் மாநில அளவிலான பேரளவு பயன்பாடுகள் (மொத்த நீர் பரிமாற்றம்/மொத்த உட்கட்டமைப்பு) என இரண்டாக பிரித்து மேலாண்மை செய்ய உத்தேசித்துள்ளது.

### 7.2.3. மாவட்ட தொழில்நுட்ப அலகுகள் (DTUs):

மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (DWSM) மற்றும் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக தற்போதுள்ள மாவட்ட அளவிலான திட்டக் கண்காணிப்பு அலகுகள், (DPMUs), "ஒருங்கிணைந்த மாவட்ட தொழில்நுட்ப அலகு மற்றும் திட்ட மேலாண்மை மற்றும் கட்டளை மற்றும் ஆதரவு மையம்" (Integrated

District Technical Unit Cum Programme Management and Command & Support Centre) என மறுசீரமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இது மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு மற்றும் கிராம ஊராட்சிகள்/ கிராம குடிநீர் மற்றும் சுகாதார குழு ஆகியவற்றின் நிறுவன அமைப்பை வலுப்படுத்துகிறது. மாவட்ட தொழில்நுட்ப அலகுகள் (DTUs) உள்ளூர் அளவிலான வழிகாட்டுதல்களை வழங்கும். ரூ.100 கோடி அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள திட்டங்களை ஆய்வு செய்ய ஒரு கூட்டுத் தொழில்நுட்பக் குழுவைக் கட்டாயமாக்குகின்றன.

### 7.2.4. சுற்றுச்சூழல் மற்றும் தர மேலாண்மை:

- **தர உறுதிப்பாடு:** கள பரிசோதனைக் கருவிகளை (FTKs) முறையான ஆய்வகங்கள் மற்றும் மத்திய மின்னணு இணையதளத்துடன் இணைக்கிறது.
- **நீர் ஆதார நிலைத்தன்மை:** நிலத்தடி நீர் செறிவூட்டலுக்காக நீர் வரவு–செலவுத் திட்டம்

(water budgeting), நீர்–புவியியல் வரைபடம் (hydro–geological mapping) மற்றும் வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைப்பைக் கோருகிறது.

### 7.2.5.மின்னணு மற்றும் நிதிப் பொறுப்புணர்வு:–

### மின்னணு பொது உட்கட்டமைப்பு:

- நிதியை வெளியிடுவதற்கு முன்பு திட்டங்களைச் சரிபார்க்க 'சுஜலாம் பாரத்' (Sujalam Bharat) GIS–இணைக்கப்பட்ட சொத்துப் பதிவேட்டைப் பயன்படுத்துகிறது, அத்துடன் நிகழ்நேரக் கண்காணிப்பிற்கு SCADA (Supervisory Control and Data Acquistion) அமைப்புகளையும் பயன்படுத்துகிறது.
- **மாநிலங்களின் பொறுப்புகள்**: SNA–SPARSH அமைப்பின் மூலம் பல கட்டங்களாக நிதியைப் பெறுவதற்கு, மாநிலங்களிடமிருந்து சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்பட்ட புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் விரிவான செயலாக்கம் மற்றும் சீர்திருத்த திட்டம் (CIRP) தேவைப்படுகிறது.

- **மறு ஆய்வுக் காலம்:** இத்திட்டத்தின் இடைக்கால மதிப்பீடு 2027 ஆம் ஆண்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7.2.6. ஊரக குழாய் வழி குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கான (RPWSS) அடையாள எண் (ID) உருவாக்கம்:**

குழாய் வழி குடிநீர் விநியோகத் திட்டங்களின் (RPWSS) கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விரிவான தரவுகளைச் சேகரிக்கவும், இத்திட்டங்களின் சிறந்த இயக்கம் மற்றும் பராமரிப்பை உறுதி செய்யவும், பல்வேறு கூறுகளை ஒரே திட்டமாக (RPWSS ID) IMIS–இணையதளத்தில் இணைப்பதற்காக, ஒன்றிய அரசால் RPWSS வசதி அறிமுகப்படுத்தப்பட்டு,

JJM–IMIS இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 7.2.7. சுஜலாம் பாரத் மொபைல் செயலி:

ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட சுஜலாம் பாரத் மொபைல் செயலி, ஊரக குழாய்வழி குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துகளின் புவி–குறியீடு (geo–tagging) மற்றும் புவி–குறிப்பு (geo–referencing) பணிகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு உதவுகிறது. சுஜலாம் பாரத் மொபைல் செயலியைப் பயன்படுத்துவதற்கான அணுகல் பின்வரும் குறிப்பிட்ட பயனர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது:

- மாநில அளவில்: ஜல் ஜீவன் இயக்கத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர்; செயற்குழுத் தலைவர்; முதன்மைப் பொறியாளர்.

* மாவட்ட அளவில்: மாவட்ட ஆட்சியர்கள்; கூடுதல் ஆட்சியர்கள்/ திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board)

வெற்றிகரமான புவி–குறியீடு/புவி–குறிப்பு மற்றும் ஒப்புதலுக்குப் பிறகு, "சுஜல் காவ்ன் அடையாள எண்கள்" (Sujal Gaon IDs) உருவாக்கப்படுகின்றன. இந்த குடியிருப்பு அளவிலான அடையாளங்கள், நீர் ஆதாரம் முதல் குடியிருப்பு வரை குழாய் வழி குடிநீர் விநியோகச் சொத்துக்கள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகின்றன.

### 7.2.8. குடிநீர் சேவை கட்டணம்:

குடிநீர் விநியோகத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கு கிராம ஊராட்சியே பொறுப்பாகும். குறைந்தபட்ச சேவை கட்டணமாக ரூ.30/– வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல்

மற்றும் வடிகால் வாரியத்திற்கான (TWAD Board) மொத்த நீர் வழங்கல் கட்டணத்தை, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதத்தில் கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டும். ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குடிநீர் வழங்கல் பணிகள் அனைத்தும் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (VWSC) மற்றும் கிராம ஊராட்சியால் கண்காணிக்கப்படுகின்றன.

### 7.2.9. மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் தானியங்கி அமைப்பு (IoT) : Internet of Things

தானியங்கி சென்சார் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு, மின்சாரம் மற்றும் பொதுக் குடிநீர் விநியோக அமைப்புகளின் திறமையான பயன்பாட்டை மேம்படுத்துகிறது. இது மோட்டாரின் கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டின் மூலம் தேவையற்ற நீர் வீணாவதைத் தடுக்கிறது. இந்த தானியங்கி சென்சார் அடிப்படையிலான

கண்காணிப்பு அமைப்புகள் சில ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ளன, மேலும் அவை படிப்படியாக அனைத்து ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### 7.3. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) – Swachh Bharat Mission (Gramin)

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) [SBM(G)], திறந்தவெளி மலம்கழித்தலை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில், நடத்தை மாற்றத்தை ஊக்குவித்தலும், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (Individual Household Latrines – IHHLs) மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள் (Community Sanitary Complexes – CSCs) அமைத்தலும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

SBM(G) – முதற்கட்டத்தின் (2014–2019) கீழ், தமிழ்நாடு 2019 ஆம் ஆண்டில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநிலம் (Open Defecation Free – ODF) என்ற நிலையை அடைந்தது. இதன்

அடிப்படையில், மாநிலத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளும் "திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகள்" என அறிவிக்கப்பட்டன.

2020-21 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இரண்டாம் கட்டம் (Phase II), ODF Plus இலக்கை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதன் முக்கிய நோக்கங்கள்:

- திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை நிலைநிறுத்துதல்;
- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையை (Solid and Liquid Waste Management – SLWM) வலுப்படுத்துதல்;
- பார்வைக்கு தூய்மையான கிராமங்களை உருவாக்குதல்.

தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHLs) மற்றும் மலக்கழிவு கசடு மேலாண்மை (Faecal Sludge Management – FSM) தவிர, திட்டத்தின் பிற அனைத்து கூறுகளும் நிதிக் குழு மானியங்கள்

மற்றும் பிற அரசுத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றன.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல், சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், நிலையான கழிவு மேலாண்மையை ஊக்குவித்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துதல் மூலம் உள்ளூர்மயமாக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளை (LSDGs) அடைவதற்கு தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), முக்கிய பங்களிப்பு வழங்குகிறது.

இத்திட்டம் முதன்மையாக நிலையான வளர்ச்சி இலக்கு – 6 (தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம்) அடைவதற்கு பங்களிப்பதுடன், SDG–3 (நல்ல ஆரோக்கியம்), SDG–11 (நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்), SDG–12 (பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி) மற்றும் SDG–13 (காலநிலை நடவடிக்கை) ஆகிய

இலக்குகளை பொதுச் சுகாதாரம், வளங்களின் திறமையான பயன்பாடு மற்றும் காலநிலையைத் தாங்கும் திறன் ஆகியவற்றின் மூலம் முன்னேற்றுகிறது.

### 7.3.1. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) – கட்டம் II–இன் முக்கிய கூறுகள்

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) – கட்டம் II [SBM(G) Phase II] நான்கு முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

**A. திறந்தவெளி மலம் கழித்தலற்ற (ODF) நிலையைத் தொடர்ந்து நிலை நிறுத்துதல்**

அனைவருக்கும் 100 சதவீத பாதுகாப்பான சுகாதார வசதி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில்:

- தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHLs) அமைத்தல்;

- சமூக சுகாதார வளாகங்கள் (CSCs) அமைத்தல்;
- தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

**B. திடக்கழிவு மேலாண்மை**

குறைந்தது 80 சதவீத குடும்பங்கள் மற்றும் அனைத்து பொதுமக்கள் பயன்பாட்டு இடங்களிலும் திடக்கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்வதே இதன் நோக்கமாகும்.

இதன் கீழ்:

- மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை மேலாண்மை செய்வதற்கான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்;
- அவற்றின் முறையான செயல்பாட்டை உறுதி செய்தல்;
- நெகிழி கழிவு மேலாண்மை அலகுகள் அமைத்தல்;

- சாண எரிவாயு (GoBARdhan) அமைப்புகள் அமைத்தல் மற்றும் அவற்றின் தொடர்ச்சியான செயல்பாட்டை உறுதி செய்தல்

ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**C. திரவக் கழிவு மேலாண்மை**

குறைந்தது 80 சதவீத குடும்பங்கள் மற்றும் அனைத்து பொதுமக்கள் பயன்பாட்டு இடங்களிலும்:

- சாம்பல் நீர் மேலாண்மை (Grey Water Management);
- கழிப்பறைகளிலிருந்து வெளியேறும் மலக்கழிவு கலந்த கருநீர் மேலாண்மை (Black Water Management)

ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**D. காண்பதற்கு தூய்மையான கிராமங்கள்**


கிராமங்கள், பார்வைக்கு தூய்மையாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும். குறிப்பாக:

- சிதறிக் கிடக்கும் குப்பைகள் மிகக் குறைந்த அளவில் இருத்தல்;
- கழிவுநீர் தேங்காத நிலையை உருவாக்குதல்;
- நெகிழி கழிவுக் குவியல்கள் இல்லாத நிலையை உறுதி செய்தல்.

**7.3.2. கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்**

SBM(G) – கட்டம் II–இன் கீழ் மேற்கண்ட நான்கு கூறுகளிலும் முழுமை அடைந்துள்ள நிலையின் (Saturation) அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு நட்சத்திர மதிப்பீடு (Star Rating) வழங்கப்படுகிறது.

இம்மதிப்பீடு, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலைத்தன்மை, திடக்கழிவு மேலாண்மை, திரவக் கழிவு மேலாண்மை மற்றும் காட்சித் தூய்மை ஆகியவற்றில் அடைந்துள்ள முன்னேற்றத்தை அளவிடவும், தொடர்ந்து மேம்படுத்தவும் பயன்படுகிறது.




### 7.3.3. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (Individual Household Latrines –IHHLs)

அனைத்து ஊரகக் குடும்பங்களும் பாதுகாப்பான கழிப்பறை வசதியைப் பெறுவதை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முழுமையாக அமைக்கப்படும் ஒரு தனிநபர் இல்லக் கழிப்பறை (IHHL), சுகாதார அடிக்கட்டமைப்பு (Sanitary Substructure), மேல்கட்டமைப்பு (Superstructure) மற்றும் உரிய சுகாதாரப் பயன்பாட்டிற்குத் தேவையான நீர் சேமிப்பு வசதி ஆகியவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும். தகுதியுடையதாக அடையாளம்

காணப்பட்ட குடும்பங்களுக்கு, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக ரூ.12,000/- ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. முந்தைய திட்டங்களின் கீழ் பயனடையாத குடும்பங்களுக்காக, SBM(G) - கட்டம் II-இன் கீழ் இதுவரை 6,83,782 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், ரூ.780.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**7.3.4. சமூக சுகாதார வளாகங்கள் (Community Sanitary Complexes - CSCs)**

ஒரு ODF Plus கிராமத்தில், குறிப்பாக தினசரி வந்து செல்லும் மக்கள்தொகையின் (Floating Population) சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், குறைந்தது ஒரு சமூக சுகாதார வளாகம் (CSC) இருக்க வேண்டும். சமூக சுகாதார வளாகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனி வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும், தேவைக்கேற்ப போதுமான

எண்ணிக்கையிலான கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு தனிக் கழிப்பறை, குளியலறைகள், தொடர்ச்சியான நீர் வசதி மற்றும் கை கழுவும் வசதிகள் இடம்பெறும். இவ்வளாகங்கள், பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் அனைவரும் எளிதாக அணுகக்கூடிய இடங்களில் அமைக்கப்படுகின்றன. SBM(G) – கட்டம் II–இன் கீழ், நிதி ஆணைய மானியங்கள் மற்றும் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து, ரூ.642.08 கோடி நிதி ஒதுக்கீட்டில் 16,317 சமூக சுகாதார வளாகங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**7.4. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்**

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் பல்வேறு கட்டங்களில் பெரும்பான்மையான ஊரக இணைப்புச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–I–ன்கீழ், இணைப்புச்

சாலை வசதி இல்லாத 1,986 குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது. சாலை மேம்பாட்டிற்கு 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரகச் சாலைகள் மற்றும் 98 பாலங்கள் ரூ.4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்– II,–ன்கீழ், 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–III–ன் கீழ், சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் சாலைகளை மேம்படுத்துவதற்கு, 2019–20 முதல் 2024–25 வரை 7,377 கி.மீ நீளமுள்ள 1,826 சாலைகள் மற்றும் 83 பாலங்கள் அமைக்க ரூ.4,875 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்–IV–ன், கீழ், 2011 மக்கள் தொகையின் அடிப்படையில் சமவெளி பகுதிகளில் 500–க்கும் மேல் மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களில் 250 க்கும் மேல் மக்கள் தொகையும் கொண்ட மீதமுள்ள தகுதியான இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில், வனப்பகுதியில் உள்ள தகுதியான இணைப்பு சாலை வசதி வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள 9 குக்கிராமங்கள் தவிர, பெரும்பாலான குக்கிராமங்களுக்கு இணைப்பு சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 4 குக்கிராமங்களுக்கு வனத்துறை அனுமதி பெறப்பட்டுள்ளது, மீதமுள்ள 5 குக்கிராமங்களுக்கு வனத்துறையின்

அனுமதியினை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**7.4.1. பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் – பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PMGSY– PM JANMAN)**

100க்கு மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதியில்லாத அழிவின் விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியின மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2025-26 ஆம் ஆண்டிற்கு, 10.96 கி.மீ நீளமுள்ள 4 சாலைகள் ரூ.9.07 கோடி மதிப்பீட்டில் 5 பழங்குடியின குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**7.4.2. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பராமரிப்பு**

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகளின் தொடர் பராமரிப்பு இமார்க் (e-MARG) எனப்படும் இணைய முகப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி தொடர் பராமரிப்பிற்கான நிதி முழுவதும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு, 2025-26 ஆம் ஆண்டில் ரூ. 45 கோடி மாநில அரசின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2026-27 ஆம் ஆண்டில் 7,178 கி.மீ நீளமுள்ள பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு ரூ. 50 கோடி நிதி தேவைப்படுகிறது.

### 7.4.3. செயல்திறனுக்கான ஊக்க நிதி

மத்திய அரசு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ், மாநிலங்களின் சிறப்பான செயல்பாட்டின் அடிப்படையில், செயல்திறனுக்கான ஊக்க நிதியினை அறிமுகப்படுத்தியது.

தமிழ் நாட்டிற்கு, 2016–17 ஆம் ஆண்டு முதல் 2024–25 வரை, ரூ.356 கோடி ஊக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கு ரூ. 237 கோடியாகும். இந்த ஊக்க நிதி, தொடர் பராமரிப்பு காலம் முடிவுற்ற பிரதம மந்திரி கிராமச் சாலைகளில், கால முறை பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த செயல்திறனுக்கான ஊக்க நிதியின் கீழ், இதுவரை, 4,972 கி.மீ நீளமுள்ள, பிரதம மந்திரி கிராமச் சாலைகளில், கால முறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 7.4.4. தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

தமிழ்நாடு, ஊரகச் சாலை அமைப்பதில் புதுமையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ், சிமெண்ட் மற்றும் மண் உறுதிப்படுத்துதல், தென்னை நார் தொழில்நுட்பம், வேதியியல் முறை உறுதிப்படுத்துதல், நெகிழி கழிவு சாலைகள் மற்றும் குளிர் கலவை தொழில்நுட்பம் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

2012–13–ஆம் ஆண்டு முதல் 2024–25–ஆம் ஆண்டு வரை, பல்வேறு மாற்றுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 6,175 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.3,666 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, 2026–ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் 25–வது ஆண்டு விழாவின் போது, பசுமை மற்றும் புதுமையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாலை அமைக்கும் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்திடமிருந்து பாராட்டு சான்றிதழ் பெற்றுள்ளது.

**7.5. பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா – கிராமின் (Pradhan Mantri Awaas Yojana – Gramin)**

தமிழ்நாட்டில் 2016–17 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா – கிராமின் (PMAY–G) திட்டம், வீடற்ற தகுதியுடைய குடும்பங்களுக்கும், குடிசை அல்லது பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகள் வழங்குவதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.1.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்தொகை மத்திய மற்றும் மாநில அரசால் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தபட்சமாக 269 சதுர அடி கட்டிடப் பரப்பளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தரமான மற்றும் நீடித்த வீடுகள் கட்டுவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு சிமெண்ட் கான்கிரீட் மேற்கூரை மற்றும் தொடர்புடைய கட்டுமானச் செலவுகளுக்காக ஒவ்வொரு வீட்டிற்கும் கூடுதலாக ரூ.1.20 இலட்சம் வழங்குகிறது. மேலும், பயனாளிகள் பின்வரும் இணை நலன்களையும் பெறுகின்றனர்: தூய்மை பாரத இயக்கம் – ஊரகம் திட்டத்தின் கீழ் கழிப்பறை அமைப்பதற்காக ரூ.12,000/– மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்/வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்

கீழ் தொழிற் திறனற்ற/ (Unskilled) தொழிலாளர்களுக்கான 90 மனித வேலைநாட்கள்; தேவைக்கேற்ப அதிகபட்சமாக ரூ.70,000/- வரை கடன் வசதி.

2016-17 முதல் 2024-25 வரை, மொத்தம் 7,02,560 வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6,68,709 வீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக: இந்திய அரசு ரூ.5,058 கோடி விடுவித்துள்ளது; தமிழ்நாடு அரசு ரூ.3,372 கோடி இணை நிதிப் பங்காக வழங்கியுள்ளது. மேலும், சிமெண்ட் கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு ரூ.5,283 கோடி விடுவித்து, அதில் ரூ.5,066 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம், தரமான ஊரக வீடுகளை காலவரையறைக்குள் நிறைவு செய்வதற்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

**7.6.பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM-JANMAN)**

இந்திய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தால் அழிவின் விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த 2023-24 ஆம் ஆண்டில் பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் தொடங்கப்பட்டது. அழிவின் விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியின மக்களுக்கு நிலையான வீடு வழங்குவது இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மேற்கொள்ளும் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று. தமிழ்நாட்டில் 21 மாவட்டங்களில் வசிக்கும் 6 பழங்குடியினர்களான இருளர், காட்டு நாயக்கன், கோட்டா, குரும்பா, பனியன் மற்றும் தோடா ஆகிய பிரிவைச் சார்ந்தவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வீடுகள் பெற தகுதியுடையவர்கள் ஆவர். விளிம்பு

நிலையில் உள்ள பழங்குடியின மக்களின் சமூக– பொருளாதார நிலையை மேம்படுத்த பாதுகாப்பான வீடு, தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்துக்கான மேம்பட்ட அனுகுமுறை, சாலை, தொலைத்தொடர்பு இணைப்புகள் மற்றும் நிலையான வாழ்வாதார வாய்ப்பு போன்ற அடிப்படை வசதிகள் இத்திட்டத்தின் கீழ் செய்து தரப்படுகிறது. பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தில் சில மாற்றங்களுடன் விளிம்பு நிலையிலுள்ள பழங்குடியின மக்களுக்கான வீட்டு வசதி திட்டத்தினை இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் அனுமதித்துள்ளது.

### 7.6.1 பயனாளிகள் தேர்வு முறை

கிராம அளவிலான கணக்கெடுப்பு நடத்திடும் பொருட்டு ஒன்றிய அரசின் பழங்குடியின நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியின குடும்பங்கள் வசிக்கும்

கிராமங்களின் பட்டியலை ஊரக வளர்ச்சி துறை அமைச்சகம் ஆவாஸ் செயலியில் பதிவேற்றம் செய்துள்ளது. அதன்படி தகுதியான குடும்பங்கள் கண்டறியப்பட்டு கணக்கெடுப்பு முடிந்த பிறகு, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி விளிம்பு நிலையில் உள்ள தகுதியான பழங்குடியின குடும்பங்களுக்கு வீடுகள் அனுமதிக்கப் படுகின்றன. சொந்தமாக நிலையான வீடு உள்ளவர்கள் மற்றும் குடும்பத்தில் ஏதேனும் ஒரு உறுப்பினர் அரசு ஊழியராக இருப்பின் இத்திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்படமாட்டாது.

**7.6.2 வீட்டின் அளவு அலகு தொகை மற்றும் மாநில அரசின் உதவித்தொகை**

மாநில அரசு, வீட்டின் பரப்பளவை 269 சதுர அடியிலிருந்து 300 சதுர அடியாக உயர்த்தியுள்ளது பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டிற்கு ரூ.5.07 இலட்சம் சமவெளிப்

பகுதிகளுக்கும் மற்றும் ரூ.5.73 இலட்சம் மலைப்பகுதிகளுக்கு என அலகுத் தொகையாக தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளது. இதில் மாநில அரசின் உதவித் தொகை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுத்திட்டம் MGNREGS/VB–GRAM–ன் கீழ் 90 மனித சக்தி நாட்களுக்கான கூலித்தொகை மற்றும் துய்மை பாரத இயக்கம் – ஊரகம் திட்டத்தின் கீழ் கழிப்பறை கட்டுவதற்கான தொகை ரூ.12,000/– ஆகியவை உள்ளடக்கியதாகும்.

**7.6.3 அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு**

பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் வீட்டின் பரப்பளவை 300 சதுர அடியாக உயர்த்தி, மாநில அரசின் கூடுதல் நிதியுதவியுடன் வீடுகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ரூ.261 கோடி மதிப்பீட்டில் 13,065 வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது தவிர, தமிழ்நாடு

அரசால் ரூ.367 கோடி நிதி கூடுதலாக வழங்குகிறது.

# 8. திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27

**8. 2026–27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு– செலவுத் திட்ட மதிப்பீடு**

2026–27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ.39,609 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், வருவாய் செலவினம் – ரூ.33,971 கோடி, மூலதனச் செலவினம் – ரூ.5,638 கோடி ஆகும்.

# 9. முடிவுரை

## 9. முடிவுரை

நாட்டிலேயே மிகவும் வலுவான மற்றும் முற்போக்கான ஊரக உள்ளாட்சி அமைப்புகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. 37 ஊரக மாவட்டங்கள், 37 மாவட்ட ஊராட்சிகள், 397 வட்டார ஊராட்சி, 12,571 கிராம ஊராட்சிகள் மற்றும் 78,997 குக்கிராமங்களை உள்ளடக்கிய கட்டமைப்புடன், நான்கு கோடிக்கும் அதிகமான ஊரக மக்களுக்கு இத்துறை சேவையாற்றி வருகிறது. நிலையான கிராமப்புர வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வலுவான நிறுவன அடித்தளத்தை மாநில அரசு பெற்றிருக்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களாக, மாறிவரும் வளர்ச்சி சூழல் பல புதிய சவால்களை வெளிப்படுத்தியுள்ளது. அவற்றுள், திட்டங்கள் சார்ந்த சிறு அளவிலான திட்டமிடல், அதிகரிக்கும் பராமரிப்புப் பொறுப்புகள், நிர்வாக எல்லைகளின்

சீரற்ற தன்மை, நகர்ப்புரங்களை ஒட்டிய வேகமான வளர்ச்சி (peri–urbanisation), நிறுவனங்களுக்கிடையேயான வரம்பிற்குட்பட்ட ஒருங்கிணைப்பு, மற்றும் மின்னணு ஆட்சிமுறை மற்றும் பருவநிலைகளை எதிர்கொள்ளும் உட்கட்டமைப்பிற்கான தேவைகள் அதிகரித்து வருதல் ஆகியவை அடங்கும்.

இக்கொள்கை விளக்கக் குறிப்பில் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கை முன்மொழிவுகள், "வெற்றித் தமிழகம்" எனும் தொலைநோக்குப் பார்வையின் கீழ் ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த சீர்திருத்த செயல்திட்டத்தின் வாயிலாக இப்புதிய சவால்களுக்கு தீர்வு காணப்படும். முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள், திறன்பட்ட பொதுச் சேவைகளை வழங்குதல், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், மக்கள் பங்களிப்புடன் கூடிய

மக்களாட்சியை வளர்த்தெடுத்தல் மற்றும் பொதுச் சொத்துக்களை நிலையான முறையில் மேலாண்மை செய்தல் ஆகியவற்றை செயல்படுத்த வல்ல, துடிப்புமிக்க உள்ளாட்சி அமைப்புகளாக கிராம ஊராட்சிகள் வலுப்படுத்தப்படும்.

புதிய வீட்டுவசதித் திட்டம், தமிழ்நாடு கிராமங்கள் வலுவூட்டல், மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (டிஎன்–வெற்றி / TN–VETRI), ஊராட்சி வளர்ச்சிக் குறியீடு (PDI), வகைப்பாடு சார்ந்த வளர்ச்சிப் பணிகள், மின்னணு கிராம சபை தளங்கள், உயர்த்தப்பட்ட நிதிப் பரவலாக்கம், வலுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு பராமரிப்பு மற்றும் நிறுவனத் திறன் மேம்பாடு போன்ற உருமாற்ற முன்னெடுப்புகளின் அறிமுகம் ஆகியவை ஒன்றிணைந்து தமிழ்நாட்டில் ஊரக ஆட்சி முறையின்

எதிர்காலத்திற்கான ஒரு விரிவான வழிகாட்டு வரைபடத்தை வழங்குகின்றன.

முன்மொழியப்பட்டுள்ள நிதிக்கட்டமைப்பு மற்றும் படிப்படியாக வளங்களைத் திரட்டும் உத்திகளின் துணையோடு இப்பரிந்துரைகளை செயல்படுத்துவது, மாநிலமானது சிறிய அளவிலான திட்டச் செயல்பாட்டிலிருந்து விடுபட்டு, ஒருங்கிணைந்த, பயனுறு முடிவுகளை மையமாகக் கொண்ட மற்றும் குடிமக்களை மையமாக உள்ளடக்கிய ஊரக வளர்ச்சி மாதிரிக்கு மாற வழிவகை செய்யும். இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறையானது நிர்வாகத்தையும், பொதுச் சேவை வழங்கலையும் மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டும் வேகத்தை விரைவுபடுத்தும். உள்ளூர் மக்களாட்சியை வலுப்படுத்தும் நெகிழ்வுத்தன்மை கொண்ட ஊரகப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் மின்னணு முறையில் வலுவூட்டப்பட்ட, தற்சார்பு மிக்க, செழிப்பான மற்றும் நிலையான ஊரக சமுதாயங்களை உருவாக்கி, **"வெற்றித் தமிழகம்"** எனும் தொலைநோக்குப் பார்வையை மெய்ப்பிக்கும்.

**நா. ஆனந்த்**

ஊரக வளர்ச்சி மற்றும்
நீர்வளத் துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

# இணைப்பு

**இணைப்பு – I**

**மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை மற்றும் பட்டியலின வகுப்பினர் / பழங்குடியினர் மக்கள் தொகை**

| வ. எண் | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பட்டியலின வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7,34,580 | 2,53,798 |
| 2 | செங்கல்பட்டு | 11,27,209 | 4,00,366 |
| 3 | திருவள்ளூர் | 15,85,280 | 5,41,823 |
| 4 | கடலூர் | 18,00,133 | 6,35,870 |
| 5 | விழுப்புரம் | 17,24,186 | 5,55,125 |
| 6 | கள்ளக்குறிச்சி | 11,88,774 | 4,35,472 |
| 7 | வேலூர் | 8,62,476 | 2,47,498 |
| 8 | ராணிப்பேட்டை | 8,08,534 | 2,18,568 |
| 9 | திருப்பத்தூர் | 8,11,546 | 2,04,412 |
| 10 | திருவண்ணாமலை | 19,73,836 | 5,74,236 |
| 11 | சேலம் | 19,57,105 | 4,66,879 |
| 12 | நாமக்கல் | 10,38,006 | 2,89,227 |
| 13 | தருமபுரி | 12,78,796 | 2,70,587 |
| 14 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 2,41,925 |
| 15 | ஈரோடு | 11,30,722 | 2,35,773 |
| 16 | திருப்பூர் | 11,39,466 | 2,65,486 |
| 17 | கோயம்புத்தூர் | 10,21,359 | 2,33,057 |
| 18 | நீலகிரி | 3,10,591 | 1,14,213 |
| 19 | தஞ்சாவூர் | 16,67,809 | 3,85,756 |
| 20 | நாகப்பட்டினம் | 5,19,500 | 1,89,133 |
| 21 | மயிலாடுதுறை | 7,41,788 | 2,73,957 |
| 22 | திருவாரூர் | 1006482 | 3,89,679 |
| 23 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 3,19,628 |
| 24 | கரூர் | 6,68,360 | 1,59,919 |
| 25 | பெரம்பலூர் | 4,68,017 | 1,52,640 |

| வ. எண் | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பட்டியலின வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை |
|---|---|---|---|
| 26 | அரியலூர் | 6,71,100 | 1,73,716 |
| 27 | புதுக்கோட்டை | 12,92,611 | 2,39,349 |
| 28 | மதுரை | 13,00,126 | 2,77,373 |
| 29 | தேனி | 5,75,394 | 1,44,966 |
| 30 | திண்டுக்கல் | 14,57,767 | 3,38,661 |
| 31 | இராமநாதபுரம் | 10,09,270 | 2,14,109 |
| 32 | விருதுநகர் | 12,86,543 | 3,16,993 |
| 33 | சிவகங்கை | 9,07,249 | 1,82,156 |
| 34 | திருநெல்வேலி | 7,70,260 | 1,57,927 |
| 35 | தென்காசி | 8,53,403 | 1,97,807 |
| 36 | தூத்துக்குடி | 9,93,119 | 2,57,525 |
| 37 | கன்னியாகுமரி | 6,46,441 | 30,439 |
| **மொத்தம்** | | **4,02,65,526** | **1,05,86,048** |

**இணைப்பு – II**

**மாவட்ட வாரியான வட்டார ஊராட்சி (ம) கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை**

| வ. எண் | மாவட்டம் | வட்டார ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 6 | 201 |
| 2 | செங்கல்பட்டு | 8 | 359 |
| 3 | கோயம்புத்தூர் | 12 | 235 |
| 4 | கடலூர் | 14 | 683 |
| 5 | தருமபுரி | 10 | 250 |
| 6 | திண்டுக்கல் | 14 | 308 |
| 7 | ஈரோடு | 14 | 234 |
| 8 | கள்ளக்குறிச்சி | 10 | 416 |
| 9 | காஞ்சிபுரம் | 6 | 274 |
| 10 | கன்னியாகுமரி | 9 | 94 |
| 11 | கரூர் | 8 | 158 |
| 12 | கிருஷ்ணகிரி | 11 | 333 |
| 13 | மதுரை | 13 | 420 |
| 14 | மயிலாடுதுறை | 5 | 241 |
| 15 | நாகப்பட்டினம் | 6 | 193 |
| 16 | நாமக்கல் | 15 | 310 |
| 17 | பெரம்பலூர் | 4 | 121 |
| 18 | புதுக்கோட்டை | 13 | 488 |
| 19 | இராமநாதபுரம் | 11 | 429 |
| 20 | இராணிப்பேட்டை | 7 | 288 |
| 21 | சேலம் | 20 | 385 |
| 22 | சிவகங்கை | 12 | 441 |
| 23 | தென்காசி | 10 | 210 |
| 24 | தஞ்சாவூர் | 14 | 589 |
| 25 | நீலகிரி | 6 | 96 |

| வ. எண் | மாவட்டம் | வட்டார ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 26 | தேனி | 8 | 130 |
| 27 | திருவாரூர் | 10 | 430 |
| 28 | தூத்துக்குடி | 12 | 415 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 14 | 408 |
| 30 | திருநெல்வேலி | 9 | 204 |
| 31 | திருப்பத்தூர் | 6 | 208 |
| 32 | திருப்பூர் | 13 | 265 |
| 33 | திருவள்ளூர் | 15 | 526 |
| 34 | திருவண்ணாமலை | 19 | 842 |
| 35 | வேலூர் | 7 | 249 |
| 36 | விழுப்புரம் | 15 | 688 |
| 37 | விருதுநகர் | 11 | 450 |
| | **மொத்தம்** | **397** | **12,571** |

## இணைப்பு – III
## குடிநீர் ஆதாரங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

| வ. எண் | மாவட்டம் | கைப் பம்புகள் | மின்சார பம்புகள் | சிறிய மின்சார பம்புகள் | OHT | GLR | CWSS (*) | CWSS |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2346 | 2264 | 1943 | 2600 | 63 | 6 | 22 |
| 2 | செங்கல்பட்டு | 3435 | 2898 | 3400 | 3266 | 140 | 9 | 21 |
| 3 | திருவள்ளூர் | 4300 | 3717 | 2427 | 4325 | 89 | 11 | 42 |
| 4 | கடலூர் | 7960 | 3855 | 3594 | 4499 | 72 | 18 | 404 |
| 5 | விழுப்புரம் | 4615 | 3580 | 6702 | 4151 | 3 | 4 | 19 |
| 6 | கள்ளக்குறிச்சி | 1630 | 2084 | 3299 | 2180 | 8 | 4 | 49 |
| 7 | வேலூர் | 246 | 3425 | 3293 | 2499 | 93 | 5 | 73 |
| 8 | ராணிப்பேட்டை | 939 | 2277 | 1726 | 2059 | 35 | 9 | 42 |
| 9 | திருப்பத்தூர் | 1812 | 2294 | 2963 | 2171 | 84 | 2 | 91 |
| 10 | திருவண்ணாமலை | 3650 | 6852 | 6697 | 6365 | 123 | 26 | 196 |
| 11 | சேலம் | 4706 | 6581 | 5049 | 7250 | 308 | 10 | 370 |
| 12 | நாமக்கல் | 2123 | 4570 | 1410 | 4751 | 294 | 13 | 285 |
| 13 | தருமபுரி | 8466 | 4177 | 6505 | 4150 | 145 | 8 | 249 |
| 14 | கிருஷ்ணகிரி | 8187 | 4843 | 8187 | 4988 | 198 | 24 | 321 |
| 15 | ஈரோடு | 2510 | 4876 | 1651 | 5109 | 639 | 45 | 202 |
| 16 | திருப்பூர் | 1973 | 4707 | 2690 | 5363 | 946 | 18 | 264 |
| 17 | கோயம்புத்தூர் | 1329 | 2732 | 502 | 3479 | 679 | 12 | 218 |
| 18 | நீலகிரி | 6 | 1298 | 185 | 55 | 1388 | 2 | 7 |
| 19 | தஞ்சாவூர் | 4974 | 4107 | 2242 | 5925 | 118 | 13 | 392 |
| 20 | நாகப்பட்டினம் | 9336 | 210 | 244 | 1215 | 71 | 1 | 164 |
| 21 | மயிலாடுதுறை | 8998 | 1717 | 1701 | 2528 | 47 | 9 | 155 |
| 22 | திருவாரூர் | 4879 | 2442 | 1265 | 3280 | 117 | 3 | 85 |

| வ. எண் | மாவட்டம் | கைப் பம்புகள் | மின்சார பம்புகள் | சிறிய மின்சார பம்புகள் | OHT | GLR | CWSS (*) | CWSS |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | திருச்சிராப்பள்ளி | 4820 | 5250 | 3921 | 4045 | 374 | 32 | 388 |
| 24 | கரூர் | 2367 | 3019 | 2714 | 3218 | 189 | 17 | 145 |
| 25 | பெரம்பலூர் | 3079 | 816 | 1038 | 741 | 52 | 9 | 118 |
| 26 | அரியலூர் | 882 | 1614 | 1533 | 1765 | 264 | 9 | 137 |
| 27 | புதுக்கோட்டை | 4996 | 4140 | 4508 | 6033 | 598 | 34 | 484 |
| 28 | மதுரை | 2527 | 3617 | 3933 | 2682 | 150 | 9 | 413 |
| 29 | தேனி | 139 | 1047 | 1020 | 1129 | 138 | 26 | 111 |
| 30 | திண்டுக்கல் | 1526 | 4037 | 3401 | 4059 | 205 | 31 | 271 |
| 31 | இராமநாதபுரம் | 560 | 1749 | 1394 | 2519 | 734 | 38 | 414 |
| 32 | விருதுநகர் | 5939 | 3949 | 4791 | 2779 | 291 | 11 | 450 |
| 33 | சிவகங்கை | 3685 | 2981 | 5094 | 4109 | 259 | 32 | 440 |
| 34 | திருநெல்வேலி | 1146 | 2064 | 1673 | 2026 | 232 | 30 | 178 |
| 35 | தென்காசி | 999 | 1593 | 2409 | 1887 | 486 | 15 | 220 |
| 36 | தூத்துக்குடி | 6524 | 2016 | 1836 | 2796 | 225 | 27 | 388 |
| 37 | கன்னியாகுமரி | 287 | 1515 | 1707 | 1583 | 52 | 11 | 90 |
| | மொத்தம் | 1,27,896 | 1,14,913 | 1,08,647 | 1,23,579 | 9,909 | 583 | 7,918 |

(*) கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் (CWSS) எண்ணிக்கை

(** ) CWSS மூலம் பயனடையும் கிராம ஊராட்சிகள்

GLR தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள்

OHT – மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

## இணைப்பு – IV

### ஊரகப் பகுதி– தெரு விளக்குகளின் மாவட்ட வாரியான விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | தெரு விளக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 61753 |
| 2 | செங்கல்பட்டு | 148101 |
| 3 | கோயம்புத்தூர் | 108205 |
| 4 | கடலூர் | 157241 |
| 5 | தருமபுரி | 68919 |
| 6 | திண்டுக்கல் | 84381 |
| 7 | ஈரோடு | 68452 |
| 8 | கள்ளக்குறிச்சி | 37509 |
| 9 | காஞ்சிபுரம் | 92605 |
| 10 | கன்னியாகுமரி | 61815 |
| 11 | கரூர் | 64029 |
| 12 | கிருஷ்ணகிரி | 109265 |
| 13 | மதுரை | 76599 |
| 14 | மயிலாடுதுறை | 77607 |
| 15 | நாகப்பட்டினம் | 89469 |
| 16 | நாமக்கல் | 80957 |
| 17 | பெரம்பலூர் | 31357 |
| 18 | புதுக்கோட்டை | 119264 |
| 19 | இராமநாதபுரம் | 105906 |
| 20 | இராணிப்பேட்டை | 54689 |
| 21 | சேலம் | 118985 |
| 22 | சிவகங்கை | 91193 |
| 23 | தென்காசி | 52311 |
| 24 | தஞ்சாவூர் | 216806 |
| 25 | நீலகிரி | 20169 |

| வ. எண் | மாவட்டம் | தெரு விளக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 26 | தேனி | 29610 |
| 27 | திருவாரூர் | 96997 |
| 28 | தூத்துக்குடி | 146918 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 72668 |
| 30 | திருநெல்வேலி | 48873 |
| 31 | திருப்பத்தூர் | 104314 |
| 32 | திருப்பூர் | 210432 |
| 33 | திருவள்ளூர் | 122600 |
| 34 | திருவண்ணாமலை | 99827 |
| 35 | வேலூர் | 60493 |
| 36 | விழுப்புரம் | 125213 |
| 37 | விருதுநகர் | 97334 |
| **மொத்தம்** | | **34,12,866** |

## இணைப்பு – V

### மாவட்ட வாரியான குளங்கள் / ஊருணிகள் மற்றும் சிறுபாசன ஏரிகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | சிறுபாசன ஏரிகளின் எண்ணிக்கை | குளங்கள் மற்றும் ஊருணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 477 | 1,792 |
| 2 | செங்கல்பட்டு | 593 | 2,512 |
| 3 | கோயம்புத்தூர் | 9 | 565 |
| 4 | கடலூர் | 237 | 2,780 |
| 5 | தருமபுரி | 548 | 504 |
| 6 | திண்டுக்கல் | 1,057 | 1,518 |
| 7 | ஈரோடு | 22 | 623 |
| 8 | கள்ளக்குறிச்சி | 379 | 1,873 |
| 9 | காஞ்சிபுரம் | 378 | 2,119 |
| 10 | கன்னியாகுமரி | 206 | 242 |
| 11 | கரூர் | 107 | 827 |
| 12 | கிருஷ்ணகிரி | 1,093 | 1,376 |
| 13 | மதுரை | 976 | 2,376 |
| 14 | மயிலாடுதுறை | 0 | 2,096 |
| 15 | நாகப்பட்டினம் | 0 | 3,149 |
| 16 | நாமக்கல் | 119 | 551 |
| 17 | பெரம்பலூர் | 257 | 1,231 |
| 18 | புதுக்கோட்டை | 3,798 | 5,292 |
| 19 | இராமநாதபுரம் | 1,124 | 3,898 |
| 20 | இராணிப்பேட்டை | 185 | 1,360 |
| 21 | சேலம் | 192 | 564 |
| 22 | சிவகங்கை | 4,224 | 4,718 |
| 23 | தென்காசி | 406 | 458 |
| 24 | தஞ்சாவூர் | 52 | 3,350 |
| 25 | நீலகிரி | 0 | 0 |

| வ. எண் | மாவட்டம் | சிறுபாசன ஏரிகளின் எண்ணிக்கை | குளங்கள் மற்றும் ஊருணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 26 | தேனி | 24 | 470 |
| 27 | தூத்துக்குடி | 405 | 1,501 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 1,136 | 1,801 |
| 29 | திருநெல்வேலி | 308 | 192 |
| 30 | திருப்பத்தூர் | 243 | 259 |
| 31 | திருப்பூர் | 0 | 1,149 |
| 32 | திருவள்ளூர் | 528 | 3,302 |
| 33 | திருவண்ணாமலை | 1,252 | 4,395 |
| 34 | திருவாரூர் | 0 | 4,423 |
| 35 | வேலூர் | 135 | 819 |
| 36 | விழுப்புரம் | 783 | 3,238 |
| 37 | விருதுநகர் | 713 | 2,925 |
| **மொத்தம்** | | **21,966** | **70,248** |

## இணைப்பு – VI

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணியிட விவரம்.

| வ. எண் | பதவியின் பெயர் | மாநில அளவிலான பணியிடம் | மாவட்ட அளவிலான பணியிடம் | பிற துறைகளில் அயற் –பணியிடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| I. அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் பணியமைப்பு | | | | | |
| 1. | கூடுதல் இயக்குநர் | 13 | – | 4 | 17 |
| 2. | இணை இயக்குநர் | 10 | 79 | 10 | 99 |
| 3. | உதவி இயக்குநர் | 18 | 393 | 6 | 417 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 45 | 1068 | 4 | 1117 |
| **மொத்தம்** | | **86** | **1540** | **24** | **1650** |
| II. பொறியியல் பணியமைப்பு | | | | | |
| 5. | தலைமைப் பொறியாளர் | 2 | – | – | 2 |
| 6. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | – | – | 3 |
| 7. | செயற்பொறியாளர் | 2 | 37 | 14 | 53 |
| 8. | உதவி செயற்பொறியாளர் | 4 | 179 | 20 | 203 |
| 9. | உதவிப் பொறியாளர் | 11 | 916 | 16 | 943 |
| 10. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | – | 37 | – | 37 |
| 11. | இளநிலைப் பொறியாளர் | – | 315 | – | 315 |
| 12. | பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 3 | 2619 | – | 2622 |
| 13. | சாலை ஆய்வாளர் | – | 1151 | – | 1151 |
| **மொத்தம்** | | **25** | **5,254** | **50** | **5,329** |

| III. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| அரசுப் பணியாளர்கள் | | | | |
| வ. எண் | பதவியின் பெயர் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் | மாவட்டம்/ இதர அலுவலகங்கள் | மொத்தம் |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 47 | 3936 | 3983 |
| 2 | உதவியாளர் | 49 | 5642 | 5691 |
| 3 | இளநிலை உதவியாளர் | 38 | 3171 | 3209 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 17 | 185 | 202 |
| 5 | தட்டச்சர் | 26 | 1054 | 1080 |
| 6 | ஓட்டுநர் | 11 | 934 | 945 |
| 7 | பதிவறை எழுத்தர் | 7 | 149 | 156 |
| 8 | அலுவலக உதவியாளர் | 54 | 670 | 724 |
| 9 | இரவுக் காவலர் | 2 | 135 | 137 |
| **மொத்தம்** | | **251** | **15876** | **16127** |
| **அ) வட்டார ஊராட்சிப் பணியாளர்கள்** | | | **ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | |
| 1 | ஓட்டுநர் | **776** | 1. ஊராட்சி செயலர் | **12480** |
| 2 | பதிவறை எழுத்தர் | **390** | 2. தூய்மை பணியாளர் | **26623** |
| 3 | அலுவலக உதவியாளர் | **1533** | 3.மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | **40419** |
| 4 | இரவுக் காவலர் | **380** | **மொத்தம்** | **79522** |
| **மொத்தம்** | | **3079** | | |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் 03.07.2026 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் திரு. நா.ஆனந்த், அவர்கள், விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், வீரமூர் ஊராட்சியில் நெகிழி கழிவு மேலாண்மை அலகினை பார்வையிட்டபின் அங்கிருந்த தூய்மை காவலர்களுடன் கலந்துரையாடினார்.




ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் (SCPAR) கீழ் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், லக்கம்பட்டி ஊராட்சி பெருமாள் கோவில் நத்தம் அமிர்தகுளம் அருகில் ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பராமரித்தல் பணி.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், லக்கம்பட்டி ஊராட்சி பெருமாள் கோவில் நத்தம் அமிர்தகுளம் அருகில் ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பராமரித்தல் பணி.







பொது நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) நிதியின் கீழ் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சியில் பன்னப்பட்டி குட்டை சிறுபாசன ஏரி புனரமைப்பு பணி.